www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

மார்ச் 23-29, 1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 197

# புலிகள் வைத்த 'செக்!'

# கடைசிக் கட்டத் தேர்தல் கணிப்பு




## சுஜாதாவின் 'காயத்திரி' புதிய அசத்தல் தொடர்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## ஆளும் தரப்பின் பொறுப்பு

அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வெளிவரும் சூட்டோடு வெற்றிக்களிப்பில் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடும் அபாயமும் இல்லாமலில்லை.

தமது ஆதரவாளர்களின் வன்முறைகளை நியாயப்படுத்த ஐ.தே.க. ஆட்சிக்காலத்தை பொதுஜன முன்னணித் தலைவர்கள் உதாரணத்திற்கு இழுப்பது உகந்த அணுகுமுறையல்ல!

"அவர்கள் செய்யவில்லையா?" என்று கேள்வி எழுப்புவது, அவர்கள் சரியில்லை என்று மக்கள் வழங்கிய தீர்ப்பை மதிக்காததுபோலவும் அமைகிறது!

ஆயுதக் களைவு விடயத்திலும் எதிர்க்கட்சிகளை மட்டுமே நிராயுதபாணிகளாக்கும் போக்குத்தான் வெளிப்படுக் கொண்டிருக்கிறது.

ஐ.தே.க. ஆட்சிக் காலத்தின் அத்துமீறல்களுக்கு கடந்த தேர்தல்களில் மக்கள் தீர்ப்பு வழங்கிவிட்டனர்.

"கொலையுகம் ஒழிக" என்ற கோஷத்துடன்தான் பொதுஜன முன்னணி ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தது!

பொதுஜன முன்னணி ஆதரவாளர்கள், ஐ.தே.கட்சியின் 17 வருடகால ஆட்சியில் தாம் பட்ட அடிகளுக்கு பதிலடி கொடுக்க நினைக்கிறார்கள்; பழிக்குப் பழி என்று அதிகாரத்தை, செல்வாக்கை பயன்படுத்த முனைகிறார்கள்!

அப் போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டியது தலைமையின் கடமையாகும்!

அதிகாரம் கைமாறும்போதெல்லாம் அதனைப் பயன்படுத்தி அரசியல் எதிரிகளை பழிவாங்கும் துடிப்பு தொடர்கதையாகாமல் இருக்கட்டும்!

பதவிக்கு வந்த கையுடன் சிறிமாவோவின் குடியுரிமையை பறித்து பழிவாங்கிய சாதனை ஐ.தே.கட்சியின் அணுகுமுறை!

அரசியல் பழிவாங்கலை கண்டிக்கும் தகுதியை அக் கட்சி இழந்துவிட்டது!

எனினும் ஜனநாயகத்தில் மக்கள் தீர்ப்புக்கள் மாறலாம். மறுபடியும் ஐ.தே.கட்சி பதவியில் அமரலாம்!

அப்போது ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி பொதுஜன முன்னணியில் பாயலாம்!

எனவே-வன்முறையும், விரோதமும் தொடருமே தவிர, ஒழியாது! அதிகாரத்தில் இருப்போர்தான் முன்மாதிரியாக நடந்துகொண்டு மாற்றுக் கட்சிகள் மீதான மென்முறைப் போக்கை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும்!

"கொலையுகம் ஒழிக" என்று பதவிக்குவந்தது பொதுஜன முன்னணி.

வடக்கு-கிழக்கில் கொலையுகம் ஒழிந்ததாய் கூறுவது இயலாது. ஆயினும் தென்பகுதியில் 'கொலையுகம்' சரிந்துள்ளது.

"கொலை யுகத்தை நாட்டில் ஒழித்துவிட்டோம்" என்று பொதுஜன முன்னணியினர் பேசும்போது வடக்கு-கிழக்கும் நாட்டின் ஒரு பகுதி என்பதை மறந்துவிட்டார்களோ என்ற சந்தேகம் எழாமலில்லை!

அது போகட்டும். நாம் பொது நலத்துடன் சிந்தனைகளை விரிவாக்குவோம். தென்பகுதியிலாவது அமைதி நிலவினால் மகிழ்ச்சிதான்!

அரசியல் சூதாட்டத்தில் மக்களைப் பணயம் வைத்தாடும் ஆபத்தான போக்கை அரசியல் கட்சிகள் கைவிடட்டும். அதற்கு முன்னோடியாக ஆளும் தரப்பும் நடந்து கொள்ளட்டும்!

இறுதியாக ஒன்று! தினேஷ் குணவர்த்தனா கட்சியும் பூமி புத்திராவும் கேடு கெட்ட இனவாதத்தை தேர்தல் பிரசாரத்தில் விநியோகம் செய்தன!

அவ்வாறான சக்திகளை முறியடிப்பதும் ஜனநாயக சக்திகளின் கடமைதான்!

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## மனம் புதிதாகட்டும்!

"உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்!"- (ரோமர் 12:2)

தேவனுடைய பிள்ளைகள் உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கக்கூடாது. அவர்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக வேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பவுல் ஆலோசனை கூறுகிறார்.

பலர் இன்று உலகத்திற்காகவே வாழுகிறார்கள்; உலகத்தாரைப் போல சிந்திக்கிறார்கள்; உலகத்தாரைப்போல நடந்து கொள்ளுகிறார்கள்; ஆவிக்குரிய ஜீவியத்தில் அவர்களுடைய மனம் மறுரூபம் அடைவது இல்லை; நித்தியத்திற்காக அவர்கள் வாழுவதும் இல்லை.

ஒரு மனிதனுடைய வெற்றியோ தோல்வியோ அது அவனுடைய மனதிலிருந்துதான் ஆரம்பிக்கிறது. மறுரூபமாக்கப்பட்ட மனதாய் இருந்தால் அதிலிருந்து நன்மையும், கிருபையும், தேவ பக்தியும் வெளிவரும். ஆனால் உலகத்தாருக்குரிய மனதாயிருந்தால் உலக சிந்தனைகளும், கவலைகளும், விபசார எண்ணங்கள், வேசித்தனங்கள் ஆகியனவே அங்கிருந்து வெளிப்படும். ஆகவே தேவனுடைய பிள்ளைகள் தங்களுடைய மனதைக் குறித்து எப்போதும் ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

உங்கள் மனம் கர்த்தரைப் போல பரிசுத்தமாக- மறுரூபமாக விளங்கட்டும்

தி.பெ.தேவபாலன், மட்டக்களப்பு.



## இறைவனின் பொருத்தம் யாருக்கு?

இறைவனும் அவனது திருத்தூதரும் அனுமதித்த நேர்மையான பொருளீட்டல் மூலம் சம்பாதித்த உணவை உட்கொள்வது, சகல முஸ்லிம்கள்மீதும் கடமையாகும். ஹராமான தகாத வழியில் கிடைத்த உணவை உட்கொள்பவன், ஆயுள் முழுவதும் இறைவனை வணங்கினாலும் மறுமையில் பயன்கிட்டாது.

'தகாத முறையில் திரட்டிய ஆகாரத்தினால் வளர்ந்த சரீரம் நரகத்துக்குரியது' என்ற நபிமொழியை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு வாலிபன் வெகு சிரமப்பட்டு வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதை அவதானிக்கும் ஷைத்தான், "அந்த இளைஞனின் உணவு எந்த வகையானது எனக்கவனியுங்கள். உணவில் சிறிதளவு ஹராம் சேர்ந்திருந்தாலும் அந்த வணக்கம் செல்லுபடியாகாது. அந்த மனிதனின் வணக்கத்தைக் கெடுக்காதீர்கள்;" என்று தனது பரிவாரங்களிடம் கூறுவான் என நபிமொழி வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

எனவே இறைபொருத்தம் நமக்குக் கிட்ட வேண்டுமாயின் நேர்மையான பொருளீட்டல் மிக அவசியம் என்பதை நாம் அனைவரும் சிந்தித்துச் செயல்படுவோமாக!

எம்.எச்.எம். ஹாரித், திஹாரிய.

## கவிதைப் போட்டி இல.194

### பரிசுக்குரிய கவிதை



**வாக்குறுதி**

ஆடைகளாயிரம்
அள்ளித்தர வாக்களித்தோர்-
கோவணத்துண்டைக் கூட
கொடுத்துதவ வரவில்லையே!

அ. சந்தியாகோ- அசோகா வித்தியாலயம், கண்டி.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

**நனைந்துவிடு**

தண்ணீரை
படைக்க முன்பே
கடவுள்
கண்ணீரை
படைத்துவிட்டான்!
இரண்டுமே
ஒன்றுதான்
நனைந்துவிடு!

எஸ். உத்திரன்-
கொழும்பு-06.

**க(த)ண்ணீர் தேசம்**

கண்ணீரில் குளித்து வந்தோம்!
கண்டு கொள்ள எவருமில்லை;
தண்ணீரில் குளிக்க வந்தால்
தடை மட்டும் ஏன்? எதற்கு?

சி.மு. சுந்தரேசன்- அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

**சாத்தியமோ?**

பிறந்த மேனி கொண்டு
போர் ஈன்ற தீயதனை
நீர்தெளித்து அணைத்திடத்தான்
நெஞ்சுறுதி கொண்டாயோ?
நீண்டகாலத் தீயிதப்பா—
தீயணைத்தல் சாத்தியமோ?

ஏ.எஸ். லோறன்ஸ்- பூந்தோட்டம், வவுனியா

**சதி!**

குடிப்பதற்கு கூழும் இல்லை,
உடுப்பதற்கு உடையும் இல்லை,
போர் செய்த சதியம்மா-இங்கு
புழுவாய் துடிக்கின்றேன் அம்மா!

மங்களேஸ்வரி கார்மேகம்-வரக்காபொல.

**கள்ளம்**

இவனது நிர்வாணம்
புன்னகை ஆடையால்
மறைக்கப்பட்டு
விட்டது!

சுபா வரன்-கண்டி.

**தண்ணீர் பஞ்சம்**

பத்து மைல் தாண்டி
முத்து எடுப்பதுபோலள்ளி
அத்தையவள் கொண்டு வந்த
முத்தையன் கட்டு நீரை
தத்தை மொழி பேசும்-இந்த
முத்துச் சரம் சிந்துவதா?

ஷைலஜா ஜேசுதாஸன்-
இரம்பைக்குளம், வவுனியா.

**நானறியக் கூடாதா?**

போராடும் பூமியிலே
நீராடும் வேளையிலே-உன்னை
வியக்கவைத்த மாயம் என்னவோ...?
நானறியக் கூடாதா?

க. இராசையா- மாணிக்கவத்தை,அவிசாவளை.

**யுத்தப் பரிசு!**

நான் மட்டுமல்ல;
நாதியற்ற நம்மினமே
அலைகிறது
அம்மணமாய்!

முறையூர்ச் செல்வன் சசிதரன்.

**அம்மணங்கள்**

நாட்டிலே போர் நிர்வாகம்:
வீட்டிலோ யாவரும் நிர்வாணம்!

ச. மகாலிங்கம்- வெலிமடை குரூப்,
வெலிமடை.

**ஐயையோ**

சுடுதண்ணீரென்று கையை வைத்தால்
ஐயையோ! அது செந்நீராயிருக்கிறதே...!

ஜி. கிருஷ்ணவாணி-
திருகோணமலை.

**நிர்வாணம்**

நான் நிர்வாணமாம்...
சொல்கிறார்கள்.....!
என்னை நிர்வாணமாக்கி
நிவாரணம் தந்தவர்கள்.

பா. எல்றோய்-
இறம்பைக்குளம், வவுனியா.

## கவிதைப் போட்டி இல.197



**கவனியுங்கள்!**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 29.03.1997

முகவரி:

கவிதைப் போட்டி இல.197 தினமுரசு வாரமலர்,
த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்) சாலை



என் இனிய முரசே!

முரசின் இராஜதந்திரி கூறியபடி வெளிநாட்டு மத்தியஸ்தம் ஒன்றை வைப்பது கௌரவப் பிரச்சனையாகக் கருதுவது, அரசாங்கத்திற்கு மனித உயிரின் பெறுமதி தெரியவில்லையோ என்று யோசிக்க வைக்கிறது. அற்புதனின் தொடர் மூலம் இந்தியப்படையின் கொடூரம் எமக்கு வெளிச்சமாகியுள்ளது. முரசுக்கு வாழ்த்துக்கள்.

ஆ. ஜெகதீஸ்வரன், புஸ்ஸல்லாவ.

என் அறிவுச் சுடர் முரசே!

பூலானது வலிமை திகைப்பூட்டிக் கொண்டே வருகின்றது. ஜூலியஸ் பூசிக்கினது தூக்குமேடைக் குறிப்பு வியப்பூட்டிச் சென்றது. கந்தசாமி அண்ணரது கற்பனை சிரிப்பூட்டித் தொடர்கிறது.... அப்பாவி மக்களை விழுங்கி வரும் போர் நிலவரங்கள் சலிப்பூட்டுகின்றன.

செல்வி ஜெயா முருகுப்பிள்ளை, குருக்கள்மடம்.

அன்பு முரசே!

நல்லவர்களைக் கெட்டவர்கள் எனச் சொல்வது தவறு. அதேபோன்று கெட்டவர்களை நல்லவர்கள் எனச் சொல்வதும் அதைவிடத் தவறு. இந்தியப் படைகள் வரும் முன்னரே அவர்கள் நல்லவர்கள், வல்லவர்கள் என்ற எண்ணம் தமிழ் மக்களிடையே நிலவியது, அல்லது ஏற்படுத்தப்பட்டது.

இராணுவம் என்பது ஒரு இயந்திரம். அது தனக்கு இடப்பட்ட கட்டளைகளையே நிறைவேற்றும். நண்பன் யார்? பகைவன் யார்? உண்மை எது? பொய் எது? என்பதெல்லாம் மேலிடம் தரும் உத்தரவுகள்தான். தமிழக மக்களே விமோசனம் பெற முடியாமல் இருக்கும்போது ஈழத்தமிழ் மக்களுக்கு தமிழக மக்களால், இந்தியாவால் எதைத்தான் செய்யமுடியும்? தமது நலனுக்குப் பாதகமான எதையும் ஈழத்தமிழருக்காக இந்தியா செய்யாது என்பதுதான் இன்றும் என்றும் உண்மை. "அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை" தொடர் நாம்பட்ட வேதனைகளை மீண்டும் கண்முன் நிறுத்துகிறது.

பி. குகன், தெஹிவல.

நேர்நிலை நின்று, விபரத்தெளிவுடன், விமர்சனம் செய்வதில் முரசுக்கு ஈடில்லை. 'முரசு' கணிப்பு வெளியிடுகிறது என்று தாமும் சூப்பர் டுப்புக்கள் விடுவோரையும் நாம் அறிவோம். காலத்தால் உறுதி செய்யப்படுவதே கணிப்புக்கள். மற்றவை கற்பனைகள்.

கே. ராஜேஸ்வரன், கொழும்பு-12.

### கணிப்பு பலிக்குமா?

உள்ளூராட்சித் தேர்தல் வந்தது பின்னே! முரசின் கணிப்பு வந்தது முன்பே! இரு தரப்பும் தேர்தலை குறிவைத்து தாக்குதலை முடுக்கிவிட்டிருந்தன. முரசின் கணிப்பு ஓ.கே. தேர்தலில் பொதுஜன முன்னணி வெற்றிபெறும் என்னும் முரசின் கணிப்பும் பலிக்க வேண்டும்!

பூ. பாலசிங்கம், திருகோணமலை.

அன்பு முரசே!

ஜெயமணி என்பவர் எழுதிய சிறுகதை நம்முரசில் வெளியான வாரத்தில் மற்றுமொரு பத்திரிகையிலும் வெளியாகி இருந்தது. இவ்வாறான எழுத்தாளர்களுக்கு தொடர்ந்து இடம் கொடுக்க வேண்டுமா? நம் முரசு மீது குறைவரலாமா?

செல்வி. க. இந்திராணி, மட்டக்களப்பு.

### வருந்துகிறேன்

ஆசிரியர் அவர்கட்கு,

ஐயா!

நான் நல்லதொரு எழுத்தாளராக உருவாக வேண்டும் என்ற ஆவலில் எழுத ஆரம்பித்தேன். இடையில் நாட்டிலேற்பட்ட பிரச்சனைகளையடுத்து கொழும்பு வந்தபின்பு மீண்டும் எழுத ஆரம்பித்தேன். எனது படைப்புக்கள் எப்படியாவது பிரசுரமாகிவிட வேண்டும் என்கிற முயற்சி நிறைய. இந்த எண்ணத்திலோ என்னவோ நான் வேறு ஒரு பத்திரிகைக்கும் தைமாத ஆரம்பத்தில் என் ஆக்கத்தை அனுப்பியிருந்தேன். காலதாமதத்தினால் ஏமாற்றமடைந்துபோய் அதே கதையை என்னை வளர்த்துவரும் தினமுரசுக்கு அனுப்பி வைத்தேன். காலமோ என்னவோ, ஒரே திகதியில்-9.3.1997 இரண்டு பத்திரிகைகளிலும் பிரசுரமாகிவிட்டது. இது என்னை வருத்துகிறது. இனிமேலும் இந்தத் தவறு நேராது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
உண்மையுடன்,
ஜெயமணி.

### ஆரம்பமே அசத்தல்

பிரபஞ்சனின் புதிய தொடர் ஆரம்பமே அசத்தல். முரசு தரும் தொடர்கள் ஒவ்வொன்றுமே சூப்பர்தான். நல்ல தமிழில் பிரபஞ்சன் கதையை நகர்த்தும் பாங்கு மனதை வருடுகிறது.

திருமதி எஸ். சந்திரகலா, புத்தளம்.

"என் சொந்த நாடகம் முடிவு பெறப் போகிறது. அந்த முடிவை என்னால் எழுத முடியாது. ஏனெனில், அது எப்படி இருக்கும் என்பது எனக்கே தெரியாது." இது இனிமேல் நாடகம் அல்ல; இது வாழ்க்கை. 'ஜூலியஸ் பூசிக்' தனது இறுதிக் காலத்தில் கூறிய இந்தவார்த்தைகள் என் நெஞ்சை உலுக்கியது. இதனை வழங்கிய "முரசுக்கு" எனது நன்றிகள்.

ஏ.சீ.எம்.மசூர், தெஹிகஸ்தலாவை,
பலாங்கொடை.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

- ★ திருமதி கவிதா வடிவேல், ஆண்டிமுனை.
- ★ ரா. பிரகலாதன், அக்கரப்பத்தனை.
- ★ கே. லியோ குரூஸ், மன்னார்.
- ★ சிவபாதசேகரம் உதயா, ஆரையம்பதி.
- ★ திருமலை தீபா.
- ★ இ. கந்தமூர்த்தி, உடப்பு.
- ★ சச்சிதானந்தம், இத்தாலி.
- ★ திருமதி இராமையா, சாமிமலை.
- ★ ஆ. நிதாகரன், மண்டூர்.
- ★ ச. ஸ்ரீஜெயந்திநாதன்.
- ★ கே.எல். அப்துல் றசூல், நிந்தவூர்.
- ★ சி. சோபியா, மூதூர்.
- ★ எம்.எம். பிறோஸ், அக்குறணை-07.
- ★ மருதமுத்து நவநீதன், புஸ்ஸல்லாவ.
- ★ டி. சத்தியசீலன், பொதுகரை
- ★ சம்சுதீன் சரீஜ், அக்கரைப்பற்று-06.
- ★ எம்.ஏ.எம். இஸ்மதுல்லா, சம்மாந்துறை-03.
- ★ தில்லைச் செல்வன், கொழும்பு-13.
- ★ எஸ்.றினோஸியா, வாரணை வீதி,திஹாரிய.
- ★ பு. பூரணச்சந்திரன், திருமலை.
- ★ மீனா சண்முகநாதன், கொழும்பு-10.
- ★ செல்வன் சுரேஸ், இறத்தோட்டை.
- ★ அழகையா ஜெயந்தி, மண்டூர்-01.
- ★ வீரசிங்கம் தயாளன், ஃபிரான்ஸ்.
- ★ பெ. ரஞ்சனி கலா, பொகவந்தலாவ.
- ★ சோ. சிவபரன், ஜெர்மனி.
- ★ ம. கேதீஸ்வரன், வாழைச்சேனை.



படிப்பகம்

www.padippakam.com

## "நிம்மதியான வாழ்க்கையாம்!"
### புலிகள் கிண்டல்

ஏனைய தமிழ்க்கட்சிகள் சமாதானம், நிம்மதியான வாழ்க்கை தொடர்பாக பேசி வருவதை புலிகள் கிண்டல் செய்துள்ளனர்.

கூட்டணி, ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட், ரெலோ போன்ற கட்சிகள் நிம்மதியான வாழ்க்கை தொடர்பாக பேசுவது வேடிக்கையானவை என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

'புலிகளின் குரல்' வானொலியில் தமிழ்க் கட்சிகள் தொடர்பான நகைச்சுவை நாடகம் ஒன்று ஒலிபரப்பானது. அந்த நாடகத்திலேயே தமிழ்க்கட்சிகள் மீது சரமாரியான கிண்டல் இடம் பெற்றது.

"கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ரெலோ இயக்கத்தினர் 'வெளிச்ச வீடு' சின்னத்தில் கேட்கின்றனர். இந்தத் துரோகக் கும்பல்கள்தான் தமிழினத்துக்கு வெளிச்சம் கொடுக்கப் போகிறதாக்கும். தமிழினத்தின் நிம்மதியான வாழ்க்கைக்காகத் தான் படையினருடன் இணைந்து நிற்கிறார்களாக்கும். தேர்தல்களில் போட்டியிட்டு பதவிகளைப் பிடிக்க மக்களை ஏமாற்றுகிறார்கள்," என்று கேலி செய்யப்பட்டது.

சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் முன்னாள் மேயர் கணேசலிங்கமும் புலிகளின் நாடகத்தில் கிண்டல் செய்யப்பட்டார்.

# தேர்தல் திருவிழாவின் கடைசிக்கட்ட நிலவரம்!
## -வெற்றிக்கனி யார் கையில் விழும்?-

வடக்கு-கிழக்கு தவிர்ந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மார்ச் 21ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறுகின்றன.

நாடெங்கும் இருந்து கிடைத்துள்ள செய்திகளின்படி பொதுஜன முன்னணியே முன்வரிசையில் நிற்கிறது. அதற்கு அடுத்த இடத்தில் ஐக்கிய தேசியக் கட்சி இருக்கிறது.

கடந்த பாராளுமன்ற தேர்தல்போல அல்லாமல் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் ஜே.வி.பி., தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளுக்கும் கணிசமான ஆசனங்கள் கிடைக்கும் என்று கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

பொதுஜன முன்னணிமீதும், ஐ.தே. கட்சி மீதும் அதிருப்தி உள்ள வாக்காளர்களும், சென்ற தேர்தலில் பொ.ஜ.முன்னணியை ஆதரித்து பின்னர் அதிருப்தி அடைந்த வாக்காளர்களும் ஜே.வி.பி.க்கும், மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஆதரவாக வாக்களிக்கக்கூடும்.

பொதுஜன முன்னணிமீது அதிருப்தி கொண்டோர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கத் தயாராக இல்லை என்று தெரிகிறது.

மலையகத்தில் இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி போன்றவற்றின் ஆதரவும் பொதுஜன முன்னணிக்கு கூடுதல் சாதகம்.

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் அமைச்சர் பௌஸி, பிரதி அமைச்சர் அலவி மௌலானா போன்றோரின் செல்வாக்கும், கணேசலிங்கத்துக்கு உள்ள ஆதரவும் சுயேச்சைக் குழுவுக்கு வெற்றி வாய்ப்பை வழங்கக்கூடும் என்று கருதப்படுகிறது. ஆனாலும் மக்களுக்கு அறிமுகமில்லாத மணிக்கூட்டு சின்னம்தான் கணேசலிங்கம் தலைமையிலான சுயேச்சைக் குழுவுக்குப் பாதகமான விஷயம்.

சுயேச்சைக் குழு என்று போட்டியிட்டாலும் கணேசலிங்கமும் ஏனையோரும் பொதுஜன முன்னணியைச் சேர்ந்தவர்கள்தான் என்பது வாக்காளர்களுக்கு தெரியாத இரகசியமல்ல.

கணேசலிங்கம் தலைமையிலான சுயேச்சைக் குழு வெற்றி பெற்றால் அது பொதுஜன முன்னணியின் வெற்றி; தோல்வி கண்டால் பொதுஜன முன்னணியின் தோல்வி.

அமைச்சர் பௌசிக்கு கொழும்பு மாநகர சபையில் கணிசமான செல்வாக்கு இருப்பதுதான் பொ.ஜ.முன்னணிக்கு நம்பிக்கையான சமாச்சாரம். என்னதான் இருந்தாலும் கொழும்பு மாநகர சபைக்கு ஒரு தமிழரின் தலைமையில் சுயேச்சை வேட்பாளர்களை நிறுத்தியமை ஜனாதிபதியின் துணிச்சலாகவே கருதப்படுகிறது. அதனால் தமிழ் வாக்காளர்களும் வாக்களிக்கக்கூடும்.

பொதுஜன முன்னணி தற்போதுவரை முன்னணியில் நின்றாலும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையை இம்முறையும் பெற முடியுமா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது.

அவ்வாறு அதே வாக்கு வீதத்தைப் பெற்றால்தான் பொ.ஜ.முன்னணிக்கு உண்மையான வெற்றி. ஆனால் அதற்கான சாத்தியம் உண்டா என்பதற்கு பொதுஜன முன்னணி வட்டாரமும் உறுதியான பதில் சொல்லத் தயங்குகிறது. ஆனால் ஜனாதிபதி சந்திரிக்கா மட்டும் நம்பிக்கையுடன் காணப்படுகிறார். வாக்களிப்புக்கு முன்னர் ஏதாவது எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டால் தற்போதைய கணிப்புக்கள் மாறக்கூடும்.

நடப்பது உள்ளூராட்சித் தேர்தல் என்றாலும் பொ.ஜ.முன்னணிக்கு இது ஒரு பரீட்சைக் களம். அதுதான் ஒரு பொதுத் தேர்தலுக்குரிய வேகத்துடன் பிரசாரங்கள் நடத்தப்பட்டன; தேர்தல் வியூகங்களும் வகுக்கப்பட்டன.

## மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அவசியம்!
### அமெரிக்க நிறுவனம் வலியுறுத்தல்!

"சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மூன்றாவது நாட்டின் மத்தியஸ்தத்துக்கு இடமளித்து, உடனடியாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்வர வேண்டும். இல்லாவிட்டால், அமைதியான-வழமையான வாழ்க்கையோ அப்பாவிப் பொது மக்களின் பெரும் துன்பமோ முடிவு பெறப்போவதில்லை"

இவ்வாறு அகதிகளுக்கான அமெரிக்க நிறுவனம் (USCR) அறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டியிருக்கிறது.

வட- கிழக்கில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள சகல சம்பவங்களையும் நுணுக்கமாக ஆராய்ந்தறிந்த பின்னரே இந் நிறுவனத்தின் அறிக்கையைத் தயாரித்தவரும் கொள்கை ஆய்வாளருமான ஹிராம் ஏ ருயிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கத்துடனும் அமெ. காங்கிரசுடனும் நெருக்கமான உறவைக் கொண்டுள்ள இந் நிறுவனம், கடந்த 14 வருடகால மோதல்களில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் சம்மதித்தால், தாமாகவே ஒரு நாட்டின் மத்தியஸ்தத்துக்கு ஏற்பாடு செய்து தர முடியும் என்றும் முன்வந்துள்ளது.

மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தத்துடன், இருதரப்பினரும் ஓர் அரசியல் தீர்வினைக்காண முடியாத பட்சத்தில் உண்மையான அமைதி ஏற்படவோ, வழமை நிலமை திரும்பவோ, இடம் பெயர்வுகள் தவிர்க்கப்படவோ, அப்பாவிகளின் துயரங்கள் முற்றாக நீங்கவோ வழி ஏற்படப்போவதில்லை என்று ஹிராம் ஏ ருயிஸ் தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் காணாமற்போதல் போன்ற நடவடிக்கைகளை ஆயுதப் படையினர் உடனடியாக நிறுத்த வேண்டும், சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசுசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் எத்தகைய இடையூறுமின்றி, மோதலுக்குட்பட்ட இடங்களுக்குள் சென்று உதவிகள் புரிய அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் இந் நிறுவனம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

அரசாங்கத்தைச் சார்ந்த அமைச்சுக்களும் அதிகாரிகளும் வேண்டுமென்றே அகதிகளுக்கான வினியோகங்களைத் தாமதப் படுத்தவதாக பொதுமக்கள் கூறியதாக அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள நல்வாழ்வு மையங்கள் பற்றி, அந்த அறிக்கையில் "இங்கு அகதிகளைத் தடுத்து வைத்திருப்பது அநியாயமானதும் அவசியமற்றதுமாகும். பாதுகாப்புக்கான பரிசீலனைகள் முடிந்து குற்றமற்றவர்கள் என்று காணப்படும் அகதிகள் தாங்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். அவர்களையும் குற்றவாளிகளாகக் கணிக்கலாகாது. அவர்கள் இடம்பெயர்ந்த குடிமக்கள் என்று மதிக்கப்படவேண்டும்," என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ரெலோ எங்கே?

வவுணதீவு இராணுவ முகாம் தாக்குதல் பற்றிய செய்தியில் முகாமில் ரெலோ இயக்கத்தினரும் இருந்ததாக முரசில் செய்தி வெளியாகி இருந்தது. பின்னர் விசாரித்ததில் ரெலோ இயக்கத்தினர் அங்கிருக்கவில்லை. புளொட் இயக்கத்தினரும், ராசிக் பொறுப்பிலான ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருமே முகாமில் படையினருடன் இருந்தனர். ராசிக் குழுவினர் 30 பேர்வரையும், புளொட் உறுப்பினர்கள் 15 பேர்வரையும் அங்கு தங்கியிருந்தனர். புளொட் உறுப்பினர்கள் ரங்கன் என்பவரது தலைமையில் அங்குள்ளனர்.

தவறான தகவலுக்காக முரசு வருத்தம் தெரிவிக்கிறது.

ரெலோ உறுப்பினர்கள் செங்கலடி, கொம்மாதுறை இராணுவ முகாம், வாழைச்சேனை, ஆரையம்பதி போன்ற இடங்களில் தான் இராணுவத்தினருடன் இணைந்து செயற்படுகின்றனர்.

### வவுனியாவில் குண்டு

வவுனியா நகரில் 17.03.97 அன்று குண்டுவெடிப்பு ஒன்று இடம்பெற்றது. இரண்டு பொலிசார் காயமடைந்தனர்.

குண்டுவெடிப்புச்சம்பவம் தம்மால் மேற்கொள்ளப்பட்டதாகப் புலிகள் அமைப்பினர் வன்னியில் உரிமை கோரியுள்ளனர்.

## "'யால' காட்டுக்குள் புலிகள்!"
### "கண்ணி வெடிகள் புதைப்பு!"

தென் இலங்கையிலுள்ள யால தேசிய வனத்துள் எல்.ரி.ரி.ஈ.யினர் ஊடுருவி பல அனர்த்தங்களைப் புரிந்து வருவதாக புகார் செய்யப்பட்டுள்ளது. கடந்த வருட மத்தியிலும் இவ்வருடத்தில்-இம்மாத முதல் வாரம் வரை ஆறு வன்முறைச் சம்பவங்கள் யால வன விலங்குகள் சரணாலயத்தில் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

இவ்வனத்துக்கு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் கணிசமான தொகையினர் வருவதுண்டு. இதனால் அந்நியச் செலாவணியும் கணிசமான தொகை கிடைப்பதுண்டு. அடிக்கடி நடைபெறும் சில அசம்பாவிதங்களினால் பயணிகள் வருவது தடைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யால இயற்கை வனத்தில் எல்.ரி.ரி.ஈ.யினர் ஊடுருவியிருப்பதால் 'எழுந்துள்ள அபாயத்தைத் தடுக்க ஆவன செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவிடம் இலங்கை வனவிலங்குகள் பாதுகாப்புக் கழகம் கோரியுள்ளது.

இம்மாதம் 4ம் திகதி யால வனத்துள் சென்று வனவிலங்குளின் நடமாட்டத்தை அவதானிக்கச் சென்ற வெளிநாட்டுத் தம்பதியினரும் வழிகாட்டியும் ஜீப் சாரதியும் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு, அன்றிரவுதான் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயணம் செய்த ஜீப்வண்டியையும் தீமூட்டி எரித்துள்ளதாகவும், பல இடங்களில் கண்ணி வெடிகளை புலிகள் புதைத்து வைத்துள்ளதாகவும் இதில் சிக்கிய வனபரிபாலகர் ஒருவர் காயமடைந்ததாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது. கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வள்ளங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## மட்டக்களப்பில் கோடி ரூபாவுடன் தலைமறைவு!
### நகை வியாபாரி விமான நிலையத்தில் கைது

மட்டக்களப்பில் பொதுமக்களிடமிருந்து சுமார் ஒரு கோடி 35 இலட்சரூபா பணத்தையும் நகைகளையும் பெற்றுக்கொண்டு தலைமறைவான முன்னாள் நகைக் கடை உரிமையாளர் ஒருவர் கடந்தமாதம் கொழும்பு விமானநிலையத்தில் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நகரில் சுசீலா நகை மாளிகை என்ற பெயரில் நகைக் கடை வைத்திருந்த திரு. சிற்றம்பலம் மகேந்திரன் எனும் இந்த நபர், முன்னர் நகைவியாபாரம் செய்த காலத்தில் நூற்றுக்குமேற்பட்ட தனது வாடிக்கையாளர்களிடமிருந்து பத்தாயிரம் ரூபாவிலிருந்து பத்து இலட்சம் ரூபாவரை பணமாகப் பெற்றிருக்கிறார். அத்துடன் அடைவு வைக்கப்பட்டிருந்த பல இலட்ச ரூபா பெறுமதியான நகைகளையும், நகை செய்வதற்காகக் கொடுக்கப்பட்ட இலட்ச ரூபா முற்பணத்தையும் சுருட்டிக்கொண்டே இவர் தலைமறைவாகியிருந்தார்.

வங்கிகள் வழங்கும் வட்டிப் பணத்தைவிட இவரிடம் பணத்தை முதலீடு செய்தவர்களுக்கு இவர் அதிகளவான வட்டிப் பணத்தை வழங்கியதாலேயே அனேகம் பேர் இந்நபரின் மோசடி வலையில் சிக்க நேர்ந்திருக்கிறது.

இது ஒரு புறமிருக்க, இவ்வாறு நகைக் கடைகளில் பணத்தை முதலீடு செய்து வட்டிப்பணத்தைப் பெற்று வருவோரின் விபரங்களைப் புலிகள் திரட்டி வருவதாகவும் அறிய வருகிறது.

கடந்த 1990ஆம் ஆண்டும் பல நகைக் கடைக்காரர்கள், தம்மிடம் அடைவு வைக்கப்பட்டிருந்த கோடிக்கணக்கான ரூபா நகைகள் அப்போது இடம்பெற்ற வன்செயலில் பறிபோய்விட்டன எனக் கூறி மக்களுக்கு அவற்றைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### யாழில் துப்பாக்கிச் சூடு

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் 17.03.97 அன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மாணவர் ஒருவர் பலியானார். பாக்கியநாதன் ஐங்கரன் (வயது 18, சண்டிலிப்பாய்) என்பவரே பலியானவராவர். இருவர் காயமடைந்தனர். பலியானவர் இளவாலை சென் ஹென்ரீஸ் பாடசாலை மாணவர்.

இராணுவத்தினர் உழவு இயந்திரம் ஒன்றில் சென்று கொண்டிருந்தனர். அப்போது குண்டுச் சத்தம் ஒன்று கேட்டதாகவும், அதன் பின்னர் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டிலேயே மாணவர் பலியானதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை 18.03.97 அன்று காலையில் யாழ்ப்பாணம் குருநகருக்கு 35 வள்ளங்களில் 150 குடும்பங்களைச் சேர்ந்த 500 பொதுமக்கள் சென்றடைந்தனர். இவர்கள் முன்னர் இடம்பெயர்ந்து சென்றவர்கள்.

### புலிகளின் கிளைமோர் பொதுமக்கள் பலி

யாழ் குடாநாட்டில் 15.03.97 அன்று அதிகாலை 6.15 மணியளவில் புலிகளின் கிளைமோர் தாக்குதலில் பஸ் ஒன்று சிக்கியது. 807 ரூட் இலக்கம் கொண்ட 62-4774 இலக்கமுடைய பஸ் வண்டியே தாக்குதலில் சிக்கியது.

அதிகாலை நேரத்தில் குறிப்பிட்ட பாதை வழியாக இராணுவத்தினர் பேருந்துகளிலும், வாகனங்களிலும் செல்வது வழக்கம். அதிகாலை நேரம் என்பதால் பொதுமக்கள் பஸ்ஸில் வரமாட்டார்கள் என்று கருதியே குறிப்பிட்ட பஸ்மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிகிறது. தாளையடிக்கு அருகிலுள்ள மருதங்கேணியில்தான் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றது.

ஆனால் அந்த பஸ் வண்டியில் பொதுமக்களே பயணம் செய்தனர். கிளைமோர் தாக்குதலால் 2 பேர் பலியாகினர். 11 பேர் காயமடைந்தனர்.

பத்மாவதி (வயது 30) மருதங்கேணி, கந்தையா (வயது 65) உடுத்துறை ஆகியோரே பலியானவர்கள் ஆவர்.

## மற்றொரு குறியும் தவறியது
### நஷ்ட ஈடு வழங்க மறுப்பு

யாழ்ப்பாணத்தில் அரியாலை நாவலடியில் உள்ள வாசிகசாலை முன்பாக இடம்பெற்ற கண்ணிவெடியில் டிரக்டர் ஒன்று சிக்கியது. 30 சிறி 8603 இலக்கமுடைய டிரக்டரே கண்ணிவெடிக்கு இலக்கானது.

அரியாலையில் உள்ள இராணுவத் தினருக்கு தேங்காய் உட்பட தேவையான பொருட்களை ஏற்றிச் சென்ற வாகனத் தொடரை குறிவைத்தே கண்ணிவெடி வைக்கப்பட்டது.

வழக்கமாக தமக்கு பொருட்கள் ஏற்றிச் செல்லும் வாகனங்களில் படையினரும் ஏறிச் செல்வதுண்டு.

ஆனால் சம்பவம் நடைபெற்ற தினத்தன்று பொருட்கள் ஏற்றி வாகனங்களை அனுப்பிவிட்டு இராணுவத்தினர் மோட்டார் சைக்கிள்களில் சென்றனராம்.

கண்ணிவெடியில் சிக்காமல் முன்னால் சென்ற லொறி தப்பிவிட்டது. டிரக்டர் மாட்டிக்கொண்டது. டிரக்டர் ஓட்டுநர் சின்னத்தம்பி சுப்பிரமணியம் (அரியாலை) பலியானார். டிரக்டர் நடத்துநர் சின்னராசா நாகேந்திரம் காயமடைந்தார்.

பலியானவருக்கும், சேதமான டிரக்டருக்கும் நஷ்டஈடு தருமாறு படையினரிடம் கேட்டபோது அவர்கள் மறுத்துவிட்டனராம். தமது பாதுகாப்பு அரணுக்கு வெளியே நடைபெற்ற சம்பவம் என்பதால் நஷ்டஈடு தரமுடியாது என்று தெரிவிக்கப்பட்டதாம்.

## 96ல் யாழில் நடைபெற்ற கைதுகள்!
### 676 பேரின் விபரங்கள் கிடைக்கவில்லை
#### மனித உரிமை அமைப்பு தெரிவிப்பு

"யாழ் குடாநாட்டில் 1996ம் ஆண்டு சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் நூற்றுக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் சிலர் விடுவிக்கவும் பட்டனர். ஆயினும் அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 676 பேர் தொடர்பான விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. அவர்கள் தொடர்பான விபரங்கள் எதுவும் தமக்குத் தெரியாது என்று பாதுகாப்புத் தரப்பினரும் கைவிரிக்கின்றனர்"

இவ்வாறு மனித கௌரவத்துக்கான இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அமைப்பின் இணைப்பாளர் மகேஸ்வரி வேலாயுதம் அந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார். மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

காணாமல் போனோரின் பட்டியலில் உள்ள 676 பேரில் 576 பேர் யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியைச் சேர்ந்தவர்கள்.

வடமராட்சிப் பகுதியில் இருந்து எமக்கு முறைப்பாடு எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. வடமராட்சியில் படையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவு நிலவுகிறது. அதற்காக வடமராட்சி பகுதிக்கு பொறுப்பான இராணுவ அதிகாரியைப் பாராட்டுகிறோம்.

யாழ் நகரிலும் மேஜர் ஜெனரல் பலகல்லயில் பொறுப்பின்கீழ் தற்போது முன்னேற்றமான நிலை காணப்படுகிறது.

யாழ் குடாநாட்டில் தென்மராட்சி, மற்றும் மானிப்பாய், கோண்டாவில், கொக்குவில் போன்ற பகுதிகளில் இராணுவத்தினரின் அத்துமீறல்கள் அதிகமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதிகளில் தற்போதும் கண்மூடித்தனமான கைதுகள் இடம்பெற்று வருகின்றன.

1996 இன் இறுதிப் பகுதியில் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களில் 271 பேர் தொழில் செய்பவர்கள். 86 பேர் பாடசாலை மாணவர்கள். 149 பேர் 14-20 வயதுக்கு உட்பட்டவர்கள். 375 பேர் 20-40 வயதுக்கு உட்பட்டவர்கள். 22 பேர் 40-60 வயதுக்கு உட்பட்டவர்கள். ஏனையோரது வயது விபரங்கள் கிடைக்கவில்லை.

1996 ஒகஸ்ட் மாதத்தில்தான் காணாமல் போனோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. 361 பேர் அந்த மாதத்தில் மட்டும் காணாமல் போயுள்ளனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பு முகாம்கள் சிறைச்சாலைகள், பொலிஸ் நிலையங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். அல்லது காலதாமதமின்றி வழக்குத் தொடரப்பட வேண்டும்" என்றும் மனித கௌரவத்துக்கான இயக்கம் ஜனாதிபதியுடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## சபாஷ்! சரியான போட்டி!
### சுவரொட்டியும் சுவாரசிய தகவலும்

உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி நாடெங்கணும் ஒட்டப்பட்ட ஒரு பலவர்ணச் சுவரொட்டி பற்றி சுவையான செய்திகள் வெளியாகியுள்ளன. ஒரு மரத்துடன் கட்டி வைக்கப்பட்ட நபர் ஒருவர் உடலில் எதுவித துணியுமில்லாமல் பாதி எரியூட்டப்பட்ட நிலையில் பிணமாகக் காணப்படுகிறார். 'கடந்த காலம்-17 வருட ஆட்சியின்போது இடம் பெற்ற கொடுமை' என்னும் வாசகங்கள் சிங்களத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சுவரொட்டிகள், ஆளும் பொதுஜன முன்னணியின் சார்பில்-ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக ஒட்டப்பட்டவை எனத் தெரிகிறது. ஆனால் இந்தச் சுவரொட்டிகளில் காணப்படும் நபர் ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளர் என்றும், இவர் ஜே.வி.பி. தீவிரவாதிகளால்தான் இவ்வாறு கொல்லப்பட்டவர் என்ற உண்மை இப்பொழுது வெளியாகியிருக்கிறது.

காலியில் ஹக்மனை தேர்தல் தொகுதியிலுள்ள புவக்வத்த என்ற இடத்தில் நல்ல செல்வாக்குடன் வாழ்ந்த புத்ததாஸ ரூபசிங்க ஜெயசேகர என்பவரே இந்தச் சுவரொட்டியில் காணப்படுபவர்.

1988 ஏப்ரல் 26ம் திகதி இவர் ஜே.வி.பி.யினரால் கொல்லப்பட்டார். இந்தப்படமும் முழு விபரமும் 1988 ஏப்ரல் 28ம் திகதி 'திவயின' சிங்களத் தினசரியில் பிரசுரிக்கப்பட்டது. மீண்டும் இப்படம் இதே பத்திரிகையில், 1991 ஆகஸ்ட் 11ம் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

'ராவய' என்ற சிங்கள வார ஏட்டிலும் 1994 நவம்பர் 27ல் பிரசுரமாகியிருந்தது.

1991 மே 11ம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்களுக்காக ஐ.தே.கட்சி இதே படத்தைப் பயன்படுத்தி சிங்கள-ஆங்கிலத் தினசரிகளில் "மீண்டுமொருமுறை இதற்கு இடமளிக்கவேண்டாம்" என்ற தலைப்பிட்டு முழுப்பக்க விளம்பரங்களை வெளியிட்டிருந்தது.

இதே படத்தை ஆளும் பொதுஜன முன்னணி இம்முறை உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தியமை பெரும் வியப்பூட்டும் சம்பவமாக அமைந்துள்ளது.

ஜெயசேகராவின் மகன் பிரியதர்ஷினி இச் சுவரொட்டியைப் பார்த்தார். மயங்கி விழுந்து விட்டார். "என் தந்தை ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவர்" என்று பேட்டியளித்தும் உள்ளார்.

### மன்னாரில் உள்ளவர்களுக்கு விஷேட அடையாள அட்டை!
#### கட்டுப்பாடுகள் அதிகமாகலாம்?

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் பணிகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டன.

மன்னார்த் தீவிலுள்ளவர்களுக்கு இளம் நீல நிறம் கொண்ட அட்டையும் பெருநிலப் பரப்பு பகுதியிலுள்ளவர்களுக்கு இளம் பச்சை நிறம் கொண்ட அட்டையும் வழங்கப்படுகிறது.

இந்த விஷேட அடையாள அட்டைக்கு படம் பிடிப்பதற்காக கொழும்பிலிருந்து ஒன்பது குழுக்கள் மன்னார் வந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் பள்ளிமுனை, மற்றும் மன்னார் நகரிலுள்ள திட்டமிடற்கிளை ஆகியவற்றில் படப்பிடிப்பு வேலைகளை ஆரம்பித்தனர்.

எனினும் விஷேட அடையாள அட்டை வழங்குவதற்கான வெற்று அட்டைகளை பகுதிக்கிராம அதிகாரிகளே நிரப்பிக்கொடுக்க வேண்டியிருந்தது. இதற்காக உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மூலம் கிராம அதிகாரிகளுக்கு இவ்வட்டைகள் வழங்கப்பட்டன.

மன்னார்ப் பகுதியில் ஏற்கனவே வசித்தவர்கள் மற்றும் மீள்க்குடியமர்ந்தவர்கள் கடந்த ஆறு மாதங்களாக இப்பகுதியில் வசிப்பவர்கள் ஆகியோருக்கே இந்த அட்டைகள் கிடைக்கவிருக்கின்றன.

இந்த விஷேட அடையாள அட்டைகள் வைத்திருப்போர் மன்னாரிலிருந்து வவுனியா, மற்றும் நாட்டின் இதர பகுதிகளுக்கு தடைகள் ஏதுமின்றி பிரயாணம் செய்ய முடியும் எனக் கூறப்படுகிறது. எனினும் வவுனியாவில் இருப்பது போன்ற போக்குவரத்து பாதுகாப்பு விதிகள் இங்கும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரியவருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

## கண்டி தலைமைத் தபாலகமும் பொது மக்களின் அசௌகரியமும்

மந்தகதியில் ஊழியர் பற்றாக்குறையுடன் கண்டி நகரத்தில் பழமையான கட்டடமொன்றில் இயங்கி வந்த மத்திய மாகாணத்திற்கான பிரதம தபாலகத்திற்கு அழகான உயர்ந்த கட்டடம் தடல்புடலான வேகத்துடன் அமைச்சரினால் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் கண்டி நகரம் மக்களால் நிறைந்திருக்கும். மக்களின் தொலைபேசி, மற்றும் மரண அறிவித்தல் கொடுப்பது போன்ற முக்கியமான அவசரத் தேவைகள் எல்லாம் செவ்வனே இத்தபாலகத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டேவந்தன.

ஆனால் தபால் ஊழியர்கட்கான மேலதிக நேரவேலைக் கொடுப்பனவு நீக்கப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை சகல தபாலகங்களும், ஏனைய அலுவலகங்கள் போல மூடப்படும் என்ற அறிவித்தலை அரசாங்கம் முன் வைத்ததில் இருந்து கண்டியின் தலைமைத் தபால் கந்தோரும் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டது.

அடிக்கடி ஊழியர் பற்றாக்குறை நிகழ்ந்து விடுகிறது. தபாலதிபரிடம் விசாரித்தால் ஊழியர்கள் மருத்துவ விடுப்பில் சென்று விடுவதாகக் கூறுகிறார்.

தொலைபேசிச் சேவையும் சீரற்று இருக்கின்றது. சில வேளைகளில் இரண்டு ரூபா நாணயத் தொலைபேசிகள் மூன்றும் ஒரே நேரத்தில் பேசாமடந்தைகளாகி விடுகின்றன. கவனித்துச் சீர்படுத்த பக்கத்தில் இருக்கும் ஊழியர்களுக்கே விருப்பமில்லாமல் இருக்கின்றது.

அத்துடன் 'ரெலிகொம்' நிறுவனத்தின் CARD PHONE பேசுமிடம் ஒன்றும் தபாலகத்தின் உள்ளே அமைக்கப்பட்டிருக்கின்றது. இது ஏனைய தனியார் CARD PHONE நிறுவனங்களில் இருந்து மிகக் குறைந்த தொகையையே அறவிடுவதனால் உள்ளூர்- வெளிநாடு தொலைத் தொடர்புகளிற்கு பொது மக்கள் இதனையே அதிகம் விரும்பி உபயோகிக்கின்றனர்.

முழு கண்டியிலும் மாத்திரமல்ல, மத்திய மாகாணத்தில் இந்த ரெலிகொம் அட்டை செலுத்தும் தொலைபேசி இது ஒன்றுதான் உள்ளது.

அதனையும் உள்ளே வைத்து, விரும்பிய நேரத்தில்- சனிக்கிழமை மாலை, ஞாயிறு முழுநேரமும்- மாலை ஐந்து மணிக்குப் பின் என்று- ஒரு ஒழுங்கு முறை இல்லாமல் பெரிய தபாற்கந்தோர் மூடப்பட்டு விடுகின்றது.

இதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களிற்கு ஆளாகின்றனர். தபாற்கந்தோர் தனது சேவையை சீராக்குமா?

தகவல்-மானுடபுத்ரன்

## வெட்டுப்புள்ளியால் பாதகம்

முரசில் க. நிரஞ்சனி எழுதிய "வெட்டுப் புள்ளியால் பாதகம்- யாழ் மாணவர்கள் கவலை" என்ற கடிதம் பார்த்தேன். யாழ் மாணவர்கள் அனைவரினதும் நிலைமையையும் தனது கடிதத்தின் மூலம் விளக்கியுள்ளார். அவர் கூறியுள்ளது முற்றிலும் உண்மையே!

யாழ் மாணவர்களாகிய நாங்கள் பரீட்சை நடைபெறுமா இல்லையா? என்ற நிச்சயமற்ற நிலையிலேயே இறுதிவரை இருந்தோம். குறுகிய கால எல்லையிலேயே எமது பரீட்சை அனுமதி அட்டைகளும் அனுப்பிவைக்கப்பட்டன. பரீட்சை எழுதிக் கொண்டிருந்தபோது விமானங்களின் இரைச்சலும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் எம்மைக் கிலி கொள்ள வைத்தன. மிகுந்த இன்னல்களுக்கு மத்தியில் தான் நாம் பரீட்சை எழுதினோம்.

உண்மையில் இவ்வாண்டுக்கான யாழ் மாவட்ட வெட்டுப்புள்ளிகள் முன்னைய ஆண்டைவிட குறைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் முன்னைய ஆண்டைவிட 96/97 ஆம் கல்வியாண்டுக்கான யாழ் மாவட்ட வெட்டுப்புள்ளிகளை அதிகரித்திருப்பது, போர்க்கால சூழலில் பல துன்பங்களுக்கு மத்தியில் படித்து, கல்வியை மட்டுமே நம்பியிருக்கும் எமக்குப் பேரிடியாய் அமைந்துள்ளது. பல வசதிகளுக்கு மத்தியில் படிக்கும் கொழும்பு மாணவர்களுக்கும், தினமும் இறப்புக்களையும் இடம்பெயர்வுகளையுமே சந்தித்த யாழ் மாணவர்களுக்கும் ஒரே வெட்டுப்புள்ளிதானா?

தயவுசெய்து எமது வெட்டுப்புள்ளிகளைக் குறைத்து, நாம் பல்கலைக்கழகக் கல்வியைப் பெற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? இதை எனது வேண்டுகோளாக மட்டுமன்றி, யாழ் மாவட்ட மாணவர்கள் அனைவரதும் வேண்டுகோளாக ஏற்று, எமது ஒரே சொத்தான கல்வியைத் தொடர்வதற்கு வாய்ப்பளித்து, எமது கண்ணீர் துடைப்பார்களா?

ப. விஜி, யாழ்ப்பாணம்.

## புலம்பெயர் தமிழ் சஞ்சிகைகளின் காப்பகம்

(அக்குறணை நிருபர்)

ஏதிலிகளாக புலம்பெயர்ந்து போய் ஐரோப்பிய, அமெரிக்க மற்றும் தேசங்களில் வசிக்கும் நம்மவர்கள், நம் தாய்மொழியை மறக்காமல் மதித்துப் போற்றி வருகின்றனர்.

அவர்களால் வெளியிடப்படும் சஞ்சிகைகளின் காப்பகமொன்றை, அக்குறணை இளைய அப்துல்லாஹ் அவர்கள் ஏற்படுத்தி வைத்திருப்பது மிக உன்னதமானது.

எனவே புலம்பெயர் சஞ்சிகை ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள் இத் தமிழ் சஞ்சிகைகள் காப்பக'த்திற்கு தங்களால் வெளியிடப்படும் சஞ்சிகைகள்-புத்தகங்களை அனுப்பியுதவி செய்யுமாறு பணிவன்புடன் கேட்கப்படுகிறார்கள். அனுப்பி வைக்க வேண்டிய அஞ்சல் முகவரி:

எம்.என்.எம். அனஸ்
புலம் பெயர் தமிழ் சஞ்சிகைகள் காப்பகம்
அஞ்சல் பெட்டி இல-01,
அக்குறணை. இலங்கை.

## சுத்தம் கெடும் கண்டி நகர்

(கண்டி நிருபர்)

கண்டி நகரின் சுத்தம் அடிக்கடி பாழ்பட்டு வருவதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

கண்டி நகரில் நிர்மாணிக்கப்பட்டுவரும் மத்திய பிரதேச இலங்கை வங்கிக் கட்டிட வலயத்திற்குப் பின்புறமாக உள்ள யானை ஒழுங்கையில் (அலிமுடுக்கு) நகரில் அன்றாடம் திரட்டப்படும் குப்பைகூழங்கள் லொறிக் கணக்கில் குவிக்கப்படுகின்றன. நாய்களும் காக்கைகளும் உறைவிடமாக இந்தப் பகுதியை தமதாக்கிக் கொண்டுள்ளதுடன் மழைக்காலங்களில் இந்தக் குப்பைகள் அழுகி அப்பகுதி துர்நாற்றத்திற்கு உள்ளாக்கப்படுகின்றது.

குப்பைகளை அகற்றுவோர் நாளொன்றுக்கு- குறிப்பாக முற்பகல் 10 மணியுடன் தமது கடமையில் இருந்தும் விலகி விடுகின்றனர். ஒரு லொறியில் இரண்டு தடவைகள் மாத்திரமே குப்பைகளை ஏற்றியபின் தமது கடமையை முடித்துக் கொள்வதால் எஞ்சியிருக்கும் அழுக்குக் காரணமாக அதன் எதிரில் இயங்கும் சாப்பாட்டுக் கடைகள் மற்றும் ஹோட்டல்களும் பெரும்பாதிப்புக்குள்ளாகி இருப்பதாக புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

## மரணவிசாரணை அதிகாரி நியமனம்

(கண்டி நிருபர்)

பெரும் வசதி குறைந்த பொலன்னறுவைப் பிரதேசத்தில், அங்கு வாழும் தமிழ் பேசும் மக்களின் நலன் கருதி, புதிய திடீர் மரணவிசாரணை அதிகாரி ஒருவர் அண்மையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முஸ்லிம்களும் மற்றும் தமிழர்களும் ஓரளவில் இங்கு நீண்டகாலமாக வாழ்கிறார்கள். திடீர் மரணங்கள் இப்பிரதேசத்தில் நடைபெறும் பொழுது உரிய வேளையில் திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் தேவை கிடைக்காமல் போய்விடுவதால் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு பிரேதங்களை காக்க வைக்க வேண்டிய நிலைக்கு பொலிஸாரும் பொதுமக்களும் தள்ளப்படுகின்றனர்.

தமிழ் பேசும் மக்களின் நலன் கருதி, அப்பிரதேசத்தில் ஏற்கனவே கல்வி அதிகாரியாகவும் அதிபராகவும் கடமையாற்றிய ஓய்வுபெற்றுள்ள ஜனாப் எம்.எம்.எச். முஹம்மத், பொலனறுவை நீதிபரிபாலன பிரிவுக்கு திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளதால் அப்பிரதேச தமிழ்பேசும் மக்களின் குறை இதனால் தீருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அஞ்சலக விடுமுறையால் அவதி

(திருமலை நிருபர்)

அஞ்சல் அலுவலகங்கள் யாவும் ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் முற்றாகப் பூட்டப்படவுள்ளதால் பொது மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியேற்பட்டுள்ளது.

இதுகாலவரைக்கும் அஞ்சலகங்கள் விடுமுறை நாட்களிலோ ஞாயிறு தினங்களிலோ முற்றாகப்பூட்டப்படுவதில்லை. தந்திகள், முத்திரை விற்பனை, தொலைபேசிச் சேவை என்பவற்றைப் பொது மக்களுக்கு வழங்கி வந்ததோடு, விநியோகம் தவிர்ந்த தபால் உள்ளகக் கடமைகளையும் கவனித்தே வந்தன. இவற்றுக்கான உத்தியோகஸ்தர்கள் மேலதிகநேர ஊதியத்தையும் பெற்று வந்தனர்.

புதிய வரவு- செலவுத்திட்டத்தில் மேலதிகநேர ஊதியக் கொடுப்பனவு வெகுவாகக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட சிக்கலால் பொது மக்களே பெரிதும் பாதிக்கப்பட உள்ளனர். அஞ்சலகங்கள் முற்றாகச் செயலிழப்பதால் தபால் போக்குவரத்தில் தாமதங்கள் ஏற்படுவதோடு அவசரத்தந்தி, தொலைபேசிச் சேவை என்பவையும் மட்டுப்படுத்தப்படுகின்றன. கிராமப் புறங்களில் சகல தொடர்புகளுக்கும் அஞ்சல் அலுவலகங்களையே நம்பியிருக்கும் மக்கள் மிகக் கடுமையாகப் பாதிப்படைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருகோணமலை பிரதம தபாலகத்திலும் கடமை நேரங்கள் காலை 7 மணிதொடக்கம் பிற்பகல் 7 மணிவரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் முற்றாகப் பூட்டப்படும் முடிவை அதிகாரிகள் எடுத்துள்ளனர்.


### என்றென்றும் இதயத்தினுள்ளே!



அமரர் ஞானப்பிரகாசம் அன்ரன்
(செல்வம்)
மண்ணில் மலர்வு 14-4-1938
விண்ணில் 16-3-1996
318- கரிகாலை
நாகபடுவான், பூநகரி.

எம்மைவிட்டு உம்
உடல் பிரிந்து
ஓராண்டு
ஆனபோதும், உம்
நினைவுகள் எம்
இதயத்தில்
நிரந்தரமாய்
நிறைந்திருக்கும்.
காலமென்னும்
வெள்ளத்தாலும் உம்
நினைவுகளை
பறித்திட முடியாது!
என்றும் நீவிர்
எம்முடனே! என்றும்
வாழ்வீர்
எம்முடனே!

உமது நினைவுகளுடன் வாழும் அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள் மற்றும் உற்றார் உறவினர்கள்.

### விளம்பரப் பகுதி

பழுதுபார்த்தல்
T.V, VIDEO DECK, RADIO
போன்ற எலக்ரோனிக் உபகரணங்கள் வெளி நாட்டில் பயிற்சி பெற்றவர்களினால் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் திருத்தப்படும்.
LIBRA ELECTRONICS
5, DEVOS AVENUE,
BAMBALAPITIYA.
TELE PHONE: 585126

தரமான சகல வித் சிறந்த மூக்குக் கண்ணாடிகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
SUPER VISION OPTICAL
(Central Dispensary)
301 E, Dam Street,
Colombo - 12.
Telephone : 335405.

SPOKEN ENGLISH
By Pon. SAKTHIVEL
Dip. in. English (London)
ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்று மாத காலத்தில் நவீன உளவியல் அடிப்படையில் கற்றுத் தரப்படும்.
காலம் : 3 மாதம்
(6-4-97முதல்)
பாடவேளை: 8A.M - 10A.M
குறிப்பிட்ட தொகை மாணவர்களே அனுமதிக்கப்படுவர் தொடர்புகட்கு
A. C. A
55, ST. LUCIAS STREET,
COLOMBO-13. TEL : 335287

### எழுதுவினைஞர் தேவை

தலைநகரில் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு எழுதுவினைஞர்கள் தேவைப்படுகிறார்கள்.
கணக்கியல் அறிவு அவசியம்.
மும்மொழியாற்றல் கவனிக்கப்படும்.
முன்னனுபவம் அவசியமில்லை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
C.A.D-2
C/O - THINAMURASU
P.O. BOX - 1772
COLOMBO.
(Advt)

### 10 வருட நினைவு



நடராசா கமலநாதன்
(அப்பன்)
உரும்பிராய் கிழக்கு

| மண்ணில் | மனங்களில் |
|---|---|
| 30-03-1965 | 16-03-1987 |

ஆண்டுகள் பல ஆனாலும்
ஆறாது எம்துயர் மாறாது
மறையாது உன் நினைவு.
உன் உணர்வுகளோடு கலந்து
உன் நினைவுகளோடு வாழும்
அப்பா, அம்மா, அக்காமார்,
அத்தான்மார், அண்ணா,
அண்ணி, தம்பி மற்றும்
உறவினர்கள், நண்பர்கள்

### மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

மார்ச் 15 முதல் 31 வரை Dr.P.ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO:10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST., Opposite Ranjanas) COLOMBO 11. T.P. 436383, 436390. கொழும்பு நாட்களில் மட்டும் செல்டல் No. 078-71101. கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யவும். மார்ச் 8, 9, 10 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No: 33, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

### DCS
DATA CONNECTION SYSTEMS (PVT) LIMITED

கம்பியூட்டர் பயிற்சிநெறி
1000 புலமைப்பரிசில் திட்டம் - 1997

கம்பியூட்டர் பயிற்சி நெறியில் முன்னோடிகளான BRITISH ACP அங்கீகாரம் பெற்ற DCS நிறுவனத்தில் பின்வரும் பாட நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றன.
கற்கை நெறிகளுக்கான தெரிவு போட்டி பரீட்சை மூலம்

**A - DIPLOMA IN COMPUTER SYSTEM DESIGN**
1. Computer fundamentals
2. Computer Programming and Operating System
3. Programming Problem, Analysis a Soluation
4. System analysis and Design
5. Software Methodology
6. Computer system for Small Business
7. programming Project.
package and Language coverage of this course
- Ms. windows
- Visual Basic
- Ms.word
- Ms. Dos
- Power Point
- MS.Excell
- Novel Netware
- Pascal
(DURATION 12 MONTH)

**B - DIPLOMA IN COMPUTER PROGRAMMING**
1. Computer Fundamentals
2. Computer Programing and Operating
3. Program Problem
4. Language and Package Coverage of this course
- Dos
- Pascal
- Excell
- Net work
- FoxBase
- Windows
- Page Maker
- MS. Word
(DURATION 9 MONTH)

**C - DIPLOMA IN DATA PROCESSING**
1. Introduction to computer and Data Processing
2. Business Software System fox Pro (2.6V)
3. Operating System (Dos)
4. System Analysis and Design
5. Project work
6. word Processing (MS. Word)
7. Spread Sheet (Excell)
8. windows
9. Novel Netware
(DURATION 8 MONTH)

விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களுக்கு

| | | |
|---|---|---|
| Colombo | - | No. 399-1/3 Galle Road, Colombo - 04. Tel : 597169 |
| Batticaloa | - | No. 62, Bar Road, Batticaloa. |
| Trincomalee | - | No. 156, Green Road, Trincomalee. |
| Vavuniya | - | No. 18A, 2nd Cross Street, vavuniya. |
| Hatton | - | No. 64/1, Dun Bar road, Hatton. |




படிப்பகம்

www.padippakam.com

உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன முன்னணியின் வெற்றிவாய்ப்புக்கு புலிகள் வைத்த 'செக்' தான் வவுணதீவு, சீனக்குடா தாக்குதல்.

இராணுவ வெற்றி தொடர்பாக தெற்கில் அரசாங்கம் செய்த பிரசாரத்திற்கு புலிகளின் இருமுனைத் தாக்குதல் ஒரு அடிதான்.

**ஆனால் பலத்த அடியாக அமையவில்லை. ஏனெனில் புலிகளின் தாக்குதலைச் சுட்டிக்காட்டி அரசின் இராணுவ வெற்றிப் பிரசாரங்களை மட்டம் தட்டுவதற்கு ஐ.தே.கட்சி இம்முறை உஷாராக இல்லை.**

ஏற்கனவே வன்முறைக் கட்சி என்று முத்திரை குத்தப்பட்டாயிற்று. இந்நிலையில் புலிகளின் தாக்குதலைப் பற்றியும் பேசப்போனால் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்ற முத்திரையும் குத்தப்படலாம் என்று ஐ.தே.கட்சி நினைத்துவிட்டது. அதனால் வாயை மூடிக்கொண்டு இருந்துவிட்டது.

தாம் வன்முறைக்கு ஆதரவாளர்கள் அல்ல என்று நிரூபிப்பதிலேயே ஐ.தே.கட்சிக்கு இம்முறை போதும் போதுமென்றாகிவிட்டது.

அதிலும் அக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தன்னை ஒரு 'மிஸ்டர் கிளீன்' என்று வெளிப்படுத்துவதில் குறியாக இருக்கிறார்.

அதற்காக கட்சியில் உள்ள சிலரை கழட்டிவிடவும் அவர் தயார்தான். தனக்கு முன்பிருந்த தலைமைகள் மீது சேறு பூசப்படுவதையும் சமயத்தில் கண்டும் காணாமல் இருக்கிறார் ரணில்.

**"கட்சிக்குள் உள்ள தீய சக்திகளை வெளியேற்றுவேன்" என்றார் ரணில். அதன்மூலம் தனது கட்சிக்குள் தீய சக்திகள் இருக்கிறார்கள் என்பதை அவரே ஒப்புக்கொள்வது மாதிரியாகிவிட்டது.**

இவ்வாறான தளர்வான போக்குகளால் ஐ.தே.கட்சி இம்முறை மினித் தேர்தல் திருவிழாவில் கும்மாளம் போடமுடியாமல் போய்விட்டது. எனினும் அக் கட்சிக்கு என்று உள்ள வாக்கு வங்கியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்க மாட்டாது.

கட்சிகள் சாராத வாக்காளர்களையும், பொதுஜன முன்னணிக்கு எதிரான அதிருப்தியான வாக்காளர்களையும் தன் பக்கம் ஈர்க்குமளவுக்கு ஐ.தே.கட்சியின் பிரசார முழக்கங்கள் உரத்துக் கேட்கவில்லை.

நாலந்த எல்லாவல கொலை விவகாரத்தில்கூட சகல தவறுகளும் ஐ.தே.கட்சி மீதுதான் என்பதுபோல கருதப்பட்ட அக் கட்சி தலைமையே காரணமாகிவிட்டது.

அங்கு துப்பாக்கிச்சூட்டு பின்னணியையும், நடைபெற்ற சம்பவங்களையும் பொதுமக்களிடம் விளக்கிச் சொல்வதை விட, கட்சித் தலைமை தான் மட்டும், தப்பிக்கொள்ளவே முயன்றது.

அதனால் கட்சி முழுவதுமே வன்முறை முத்திரை குத்தப்பட்டு செய்வதறியாது திகைத்துப்போனது.

நாலந்த எல்லாவல கொலை பொதுஜன முன்னணியைப் பொறுத்தவரை அற்புதமான பிரசார ஆயுதம்- பிரம்மாஸ்திரம்!

ஆனால் இந்த பிரம்மாஸ்திரத்தை பொதுஜன முன்னணி ஒன்றும் தவமிருந்து வரமாகப் பெறவில்லை.

ஐ.தே.கட்சியாகப் பார்த்துக் கொடுத்த ஆயுதம்தான் அது.

பொதுஜன முன்னணி நம்பியிருந்த பிரசார ஆயுதம் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைதான். 'ஒப்பரேஷன் எடிபல' அதற்காகத்தான் ஆரம்பிக்கப்பட்டது.

'நாலந்த எல்லாவல' கொலையாகா விட்டால் 'ஒப்பரேஷன் எடிபல' தொடர்பாக ஐ.தே.கட்சி ஏளனம்செய்திருக்கலாம். புலிகளின் வவுணதீவு, சீனக்குடா' தாக்குதல்களை தமது பிரசாரத்திற்கு சாதகமாகப் பயன்படுத்தியும் இருக்கலாம்.

புலிகளும் அப்படித்தான் கணக்குப் போட்டிருந்தார்கள். தேர்தல் நெருங்கும் சமயத்தில் பொறுத்த அடி கொடுத்தால் போதும்: பொதுஜன முன்னணியின் தேர்தல் வெற்றி பாதிக்கப்படும்.

அதன்பின்னர் மக்கள் செல்வாக்குள்ள தலைவியாக சந்திரிக்கா அம்மையார் வெளிநாடுகளில் கூட உதவி பெற முடியாமல் போகும்.

ஏற்கனவே பாராளுமன்றத்தில் பல கட்சிகளின் ஆதரவை நம்பியிருக்கிறது பொ.ஜ. முன்னணி. உள்ளூராட்சித் தேர்தலிலும் சறுக்கினால். 'ஸ்திரமற்ற அரசாங்கம்' என்ற பெயர்தான் மிஞ்சும்.

அப்படியொரு நிலைப்பாடு வந்தால் பொ.ஜ.முன்னணி அரசில் உள்ள சிறிமணி அத்துலத் முதலி குழுவினரும் 'பிகு' பண்ணுவார்கள். உள்பிரச்சனைகளை சமாளிக்கவே சந்திரிக்காவுக்கு நேரமில்லாமல் போகலாம்.

# புலிகள் வைத்த 'செக்' தப்பிக்கொண்டார் சந்திரிக்கா



பிரபாவுடன் மட்டக்களப்பு தளபதி கருணா

அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாகவும், இப்போதுபோல ஆரவாரமாகப் பேசிக் கொண்டிருக்கவும் முடியாமல் போகும்.

ஏனெனில் சிறிமணி அத்துலத் முதலி குழுவினர் அரசியல் தீர்வுக்கு எதிரானவர்கள். குறைந்த பட்ச அரசியல் தீர்வுக்குக்கூட விடமாட்டார்கள்.

பாராளுமன்றத்தில் சிறிமணி அத்துலத் முதலி குழுவை நம்பியிருக்க வேண்டிய நிலையில், அவர்கள் கருத்துக்கு மாறாக ஜனாதிபதியோ நீதியமைச்சரோ செயற்பட மாட்டார்கள்.

அதுதவிர "சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவோம்" என்றும் துணிந்து கூறமுடியாது.

அரசியல் தீர்வு யோசனைகளை முன் வைத்தமையால்தான் உள்ளூராட்சித் தேர்தலில் பாதகம் ஏற்பட்டதோ என்றும் அரசாங்கம் யோசிக்கத் தொடங்கும். மெல்ல மெல்ல தீர்வுப்பொதி பற்றிய பேச்சுக்கள் அடங்கிப் போகும்.

அதனால் புலிகளுக்கு என்ன இலாபம்?

"அரசியல் தீர்வுக்கு நாம் தயார்! பொதியை முன்வைத்திருக்கிறோம். புலிகள்தான் தயாராக இல்லை. அதனால் போரைத்தவிர

நாரதர்

வேறு வழியில்லை" என்று சர்வதேச அரங்கில் அரசு கூறமுடியாமல் போகும். தனக்கு செல்வாக்கை தேட முடியாமல் போகும்.

அதுமட்டுமல்ல, 'குறைந்த பட்ச தீர்வு யோசனைகளைக் கொண்ட பொதியைக்கூட சிங்கள மக்கள் தூக்கியெறிந்துவிட்டனர். சந்திரிக்காவுக்கு ஆதரவும் இல்லை. எனவே ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு சாத்தியமில்லை' என்று ஆதாரம் காட்டவும் புலிகளால் முடியுமானதாக இருக்கும்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தான் பொதுஜன முன்னணியின் தேர்தல் வெற்றிக்கு புலிகள் 'செக்' வைத்தனர்.

**புலிகள் 'செக்' வைத்தபோதும் ஐக்கிய தேசியக் கட்சியின் பலவீனம் காரணமாக சதுரங்கக் காய்களை விவேகமாக நகர்த்தினார் சந்திரிக்கா. அதனால் புலிகள் வைத்த 'செக்'கில் இருந்து தந்திரமாக மீண்டதுடன், ஐ.தே.கட்சியால் காய் நகர்த்த முடியாமலும் செய்துவிட்டார்.**

**சந்திரிக்காவை விட்டால் வேறு சுறுசுறுப்பான, [illegible] உள்ள தலைவர் வேறு யார் என்ற கேள்விக்கு பதில் இல்லாததால் தெற்கில் சந்திரிக்காவின் கொடி தான் பறந்து கொண்டிருக்கிறது.**

ஜனாதிபதி சந்திரிக்காவின் பிரதான போட்டியாளர்களை ஒழித்துக் கட்டியதும் புலிகள்தான். அதன்மூலம் தனக்கு ஈடான எதிர்த்தரப்பு போட்டியாளர் இல்லாமல் முஷ்டியைத் தூக்கிப் பலம் காட்டுகிறார் சந்திரிக்கா.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் புலிகள் சந்திரிக்காவுக்கு 'செக்' வைத்தனர். அவரது பிரதம போட்டியாளரான காமினியை புலிகள் கொன்றனர்.

காமினியினின் மரணத்தால் ஏற்படும் அனுதாப அலையால் சந்திரிக்காவுக்கு அமோக வெற்றி கிடைக்காமல் போகும். ஒருவேளை ஐ.தே.கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றால் தெற்கில் ஸ்திரமற்ற அரசாங்கம் ஏற்படும் என்று புலிகள் நினைத்தனர்.

அப்போதும் ஐ.தே.கட்சி வெள்ளைச் சேலையுடன் காமினியின் பாரியாரை நிறுத்தி அழுது வடியும் பிரசாரம் நடத்தியது.

விளைவு சந்திரிக்கா அமோக வெற்றி பெற்றார். புலிகள் வைத்த 'செக்'கில் இருந்து தப்பிக்கொண்டார்.

அதுமட்டுமல்லாமல், சமீபகாலத்தில் தனக்கு பெரும் தலைவலியாகக் கூடிய பிரதம அரசியல் எதிரியும் சந்திரிக்காவுக்கு இல்லாமல் போனார்.

காமினி இருந்திருந்தால் இப்போது ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு பெரும் பிரச்சனையாகவே இருந்திருப்பார்.

குறுக்கு வழியில் திட்டங்கள் தீட்டுவதிலும் காமினி சமர்த்தர். இந்திய அரசு மட்டத்திலும் செல்வாக்கு உள்ளவர்.

**ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு பிரதம போட்டியாளர்கள் இல்லாமல் செய்ததும் புலிகள்தான்! இப்போது 'செக்' வைப்பதும் புலிகள்தான்!**

எக்ஸ்ரே ரிப்போர்ட்

**ஆக, மொத்தத்தில் தென்னிலங்கை அரசியல் தலைவர்களை ஒழித்துக்கட்டும் புலிகளின் வேகம் புலிகளுக்கே பாதகமாகத்தான் முடிந்திருக்கிறது.**

**இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் புலிகள் வைத்த 'செக்' சரியாக அமையாமல் போனதுக்கும் அதுவும் ஒருகாரணம்தான்.**

ஆனால் வவுணதீவுத் தாக்குதலும், சீனக்குடா தாக்குதலும் தேர்தல் வெற்றியைப் பாதிக்குமோ, வாக்காளர்களின் மனதை மாற்றிவிடுமோ என்ற எண்ணம் பொதுஜன முன்னணி அரசாங்கத்திற்கு இல்லாமல் இல்லை.

அதுமட்டுமல்லாமல், தேர்தல் திகதிக்கு முதல் நாட்களில் புலிகள் மற்றொரு பாரிய பாய்ச்சலில் ஈடுபடவும் கூடும் என்ற சந்தேகமும் எழுந்தது.

**ஏனெனில் கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல்நாள்தான் கடற்படைக் கப்பல் ஒன்று புலிகளால் தாக்கப்பட்டது. அச் செய்தி பெரிதாக வராமல் அரசாங்கம் அமுக்கியும் இருந்தது.**

எனவே இம்முறையும் கடலிலோ தரையிலோ புலிகள் தாக்கலாம் என்று அரசாங்கமும், படையினரும் நினைத்தே இருப்பர்.

அதனால்தான் வன்னியில் மணலாற்றில் (வெலிஓயா) 'திரிவிட செரய' என்னும் படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக படையினர் அறிவித்தனர்.

ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் மணலாற்று காட்டுப் பகுதியில் மின்னல் நடவடிக்கை என்ற பெயரில் படையினர் ஊடுருவித் தாக்கினார்கள். ஆயினும் மின்னல் வேகம் இறுதியில் ஆமை வேகமாகி படையினர் இடைநடுவில் திரும்பினார்கள்.

தற்போதைய 'திரிவிட செரய' நடவடிக்கை முன்னைய மின்னல் நடவடிக்கை போலவும் அமையவில்லை.

**மணலாற்றில் உள்ள முகாம்களை புலிகள் தாக்கக்கூடும். புலிகளின் அடுத்த குறி அதுவாக இருக்கலாம் என்று கருதி முகாமை அண்டிய பகுதிகளில் சுத்திகரிப்பு நடத்துவதும் படையினரின் நோக்கமாக இருந்தது.**

அதனால் கடல், தரை, ஆகாய மார்க்கமாக மும்முனைத் தாக்குதலில் ஈடுபட்டதாகப் படையினர் அறிவித்தனர்.

எனினும் தரைவழியாகப் படையினர் நெடுந்தொலைவுக்கு முன்னேறவில்லை. காடுகளுக்கும் ஊடுருவவில்லை. வான்மூலமும், கடற்படைக் கப்பல்களில் இருந்த பீரங்களின் மூலமுமே எறிகணை மற்றும் குண்டுவீச்சுக்கள் இடம்பெற்றன.

"புலிகளின் பாரிய முகாம் அழிக்கப்பட்டது. புலிகள் நூறு பேர்வரை கொல்லப்பட்டனர்" என்று செய்திகள் சொல்லப்பட்டன.

வானத்தில் இருந்தும், கடலில் இருந்தும் நடத்திய தாக்குதலின் விளைவுகளை- அதுவும் அடர்ந்த காடுகளுக்குள் ஏற்பட்ட விளைவுகளை அத்தனை துல்லியமாகப் படையினர் கூறியதுதான் ஆச்சரியமாக இருந்தது.

கண்ணுக்கு முன்னால் நடைபெறும் தரைப்போரில்கூட படையினரால் தமது தரப்பு இழப்பையோ, எதிர்த்தரப்பு இழப்பையோ துல்லியமாகக் கூற முடியாமல் இருப்பதும் கவனிக்கத்தக்கது.

**'திரிவிட செரய' நடவடிக்கையின் பின்னர் புலிகள் விடுத்த அறிக்கையில் தமது தரப்பில் இழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவித்துள்ளனர்.**

"வவுணதீவு, சீனக்குடா தாக்குதல்கள் ஏற்படுத்திய அதிர்ச்சியும், அரசுக்கு ஏற்பட்ட தர்ம சங்கடமும்தான் 'திரிவிட செரய' நடவடிக்கைக்குக் காரணமாக அமைந்தன. அதனால் எவ்வித பயனும் இல்லை. ஏமக்குப் பாதிப்புமில்லை." என்கிறது புலிகளின் அறிக்கை.

'வன்னியில் மற்றொரு பாரிய நடவடிக்கை' என்று அரச செய்தி நிறுவனங்கள் அமர்க்களமாக அறிவித்தாலும் போர்முனை நிலவரம் அதற்கு நேர்மாறாகவே அமைந்திருந்தது. பாரிய அளவிலான நடவடிக்கையாக மேற்கொள்ளும் யோசனையும் படையினருக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

எட்டுமணி நேரத்துக்குள் திரிவிட செரய நடவடிக்கை முடிவுற்றது.

உள்ளூராட்சித் தேர்தல் நேரத்தில் 'பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக'க் கூடிய 'ரிஸ்க்'கான தாக்குதல்களில் படையினர் ஈடுபட முன்வரமாட்டார்கள். அரச தரப்பும் பச்சைக் கொடி காட்டாது.

'வவுணதிவு-சீனக்குடா' தாக்குதலையடுத்து தென்னிலங்கை ஆங்கிலப் பத்திரிகைகளும் அரசாங்கத்தை கேலி செய்துள்ளன.

"புலிகள் பலவீனமாகியது உண்மை என்றால், ஒரே நேரத்தில் இருமுனைத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார்களே- ஈடுபட முடிந்துள்ளதே? இது எப்படி?" என்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் பாதுகாப்பு விமர்சகர் இக்பால் அத்தாஸ் கேள்வி எழுப்பியிருந்தார்.

'சண்டே லீட'ரும் காரசாரமாக விமர்சித்தது. ஆயினும் அத்தாக்குதலில் புலிகள் தரப்பிலும் உயிரிழப்புக்கள் அதிகமாக இருந்ததுதான் அரசாங்கத்திற்கு ஓரளவு ஆறுதலான விஷயம்.

விமர்சனங்கள் ஏற்படுத்திய தாக்கத்தைப் போக்கத்தான் 'திரிவிட செரய' பற்றிய ஆரவாரமான அறிவிப்புக்கள் உரத்துச் செய்யப்பட்டன.

இதற்கிடையே 'புக்காரா' விமானம் ஒன்று கடந்தவாரம் வெடித்துச் சிதறியுள்ளது. புலிகள் ஏவுகணையால் தாக்கியிருக்க வாய்ப்பில்லை. அப்படி ஏவுகணையால் தாக்கியிருந்தால்கூட விமானி உயிர் தப்பி பாய்ந்திருக்க சந்தர்ப்பம் இருந்திருக்காது. ஆயினும் புலிகள் இதற்கு உரிமை கோரினால் யாரும் நம்பாமலிருக்க மாட்டார்கள்.

**விமானப்படைக்கு இந்த வருடம் அதிஷ்டம் கெட்ட வருடம். இலங்கை விமானப்படை வரலாற்றில் இதுபோல தொடர் இழப்புக்கள் முன்னர் ஏற்பட்டதே இல்லை.**

விமானிகள் மத்தியில் அச்சம் தொற்றிக் கொண்டுள்ளது போல் இருக்கிறது. சிறு கோளாறு என்றாலும் கதவைத் திறந்து வெளியே குதித்துவிடுகிறார்கள்.

அன்ரனோவ் விமானத்தை ரஷிய விமானிகள்தான் இப்போது ஓட்டிச் செல்கிறார்கள். சமீபத்தில் இரத்மலானையில் விபத்துக்குள்ளான அன்ரனோவை ஓட்டிச்சென்றதும் ரஷிய விமானிகள்தான். அதனால்தானோ என்னவோ பாரிய உயிரிழப்பு இன்றி உள்ளிருந்தவர்கள் தப்ப முடிந்தது.

**நம்நாட்டு விமானிகளுக்குப் போதிய பறப்பு அனுபவமின்மை, தொடர் விபத்துக்களால் ஏற்படும் மனச் சஞ்சலம், புலிகளின் ஏவுகணை அச்சுறுத்தல் போன்றவற்றால் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது.**

எனினும் தொடர் விமான விபத்துக்கள் அரசாங்கம்மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் விடயமல்ல. விமானப்படை, விமானப்படைத் தளபதி, விமானிகள் போன்றோர் மீதுதான் விமர்சனங்கள் எழும்.

விமானப்படைத் தளபதி விரைவில் ஓய்வு பெற உள்ளார். ஆயினும் விமான விபத்துக்களுக்கான பழியை தளபதிமீது போட முடியாது. அது விமானிகளின் உளவியல் நிலை, திறமை, விமானத்தின் தொழில் நுட்பத்தரம் பராமரிப்பு சம்பந்தப்பட்ட பிரச்சனை.

இன்னொன்று, வெளிநாடுகளில் பறப்பில் ஈடுபட்ட விமானங்களைத்தான் நம்நாடு போன்ற நாடுகளுக்கு குறைந்த விலையில் தலையில் கட்டிவிடுகிறார்களோ என்பதும் ஒரு சந்தேகம்தான்!

# அதிரடி அய்யாத்துரை



**யாழில்** மொட்டைக் கடுதாசிகள் காரணமாக தபாலகங்களில் கடிதங்கள் மலையாகக் குவிவது ஒருபுறம் இருக்க, கைதுகளும் அமோகமாக நடக்குதாம். பச்சை உடையினர் என்ன சொல்கிறார்கள் தெரியுமோ? "எங்களை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? உங்கள் ஆட்கள்தான் தகவல் தருகினம்; கடிதம் போடுகினம். நாங்கள் எப்படிச் சும்மாயிருக்கிறது? பிடிச்சு விசாரிக்காமல் விட்டு ஏதாவது நடந்து தொலைச்சா மேலிடத்தில் இருந்து நாளைக்கு கேள்வி வருமல்லோ!" என்கிறார்களாம். எங்கடை சனத்தில் ஒரு செக்சனை கொப்பரையில் போட்டாலும் திருத்த முடியாதுங்கோ?

**அவள்** ஒரு பல்கலைக்கழக மாணவி. சக மாணவனைக் காதலித்தார். மாணவியின் அண்ணன்காரனுக்கு பிடிக்கவில்லை. காதலுக்கு வில்லனாக மாறிய அண்ணன் பச்சை உடையினருக்கு தகவல் கொடுத்தான். என்ன தகவல் தெரியுமோ? தன் சகோதரியைக் காதலிக்கும் மாணவன் ரெண்டு எழுத்து ஆள் எண்டுதான் டுப் தகவலை அள்ளி விட்டானாம் வில்லன். பச்சை உடைத்தரப்பார் அள்ளிக் கொண்டு போய் நாலு தட்டுத் தட்டிப்போட்டு உள்ளே வைச்சிருக்கினமாம். மாணவி ஒப்பாரிவைத்துக் கொண்டு இருக்கிறார். "அண்ணன்தான் காட்டிக் கொடுத்தவன். என்னவர் ரெண்டு எழுத்தார் அல்ல நாலெழுத்துக்காரர்" என்கிறார் மாணவி. அதென்ன நாலு எழுத்து? அப்பாவி! நடந்தது யாழ்ப்பாணத்தில்!

**பொத்துப் பொத்தென்று** பனங்காய் விழுந்தமாதிரி வான் பறவைகள் விழுவது பற்றி ரெண்டு எழுத்தாரின் கட்டுப்பாட்டு பகுதிகளில் ஒரு கதை உலாவுகிறதாம். "ஆன்மா சாந்தியடையாத ஆவிகள்தான் இழுத்து விழுத்துவதாகச் சொல்லிக் கொள்ளுதாம் அங்குள்ள சனம். நான் உந்த ஆவிகளை நம்புறதில்லை. அதுசரி கடைசிப் பறவை வெடித்தல்லோ விழுந்ததாம்! அப்படியெண்டால் ஆவி என்ன 'புக்' என்று ஓங்கிக் குத்திப்போட்டுதோ?!"

**இணுவிலில்** ஒரு இளம் பெண்ணை சீருடையில் வந்தோர் இரவு நேரத்தில் கைது என்று மடக்கப் பார்த்தினமாம். பெண் வீட்டார் கூச்சல் போட அயல் சனம் விளக்குகள், தீப் பந்தங்களோடு திரண்டு வந்தவையாம். பலத்த பாடுபட்டுத்தான் கைது செய்து கொண்டு போனவையாம்.

**வடக்கு-கிழக்கு** முன்னாள் அதிகாரக் கட்சியினர் யாழ் சென்றுள்ளனர் அல்லோ, யாழ் சென்ற குழுவினருக்கு தலைவர் கருத்துரை வழங்கி உற்சாகப்படுத்தினாராம். "யாழில் ஜனநாயக தமிழ் கட்சி உறுப்பினர்களும் நம் பக்கம் வருவார்கள்," என்று உற்சாகப்படுத்தி அனுப்பினாராம். ஆனால் பாருங்கோ நினைப்பதெல்லாம் நடக்காது, நடப்பதெல்லாம் நினைத்ததாக இருக்காது. அதுதான் பாருங்கோ கரெக்ட். முன்னாள் அதிகாரக் கட்சியில் இருந்து 6 பேர் ஜனநாயகத் தமிழ்க் கட்சிப் பக்கம் போய்ச் சேர்ந்து போட்டினமாம். 'எங்கடை வலையிலை எதுவும் மாட்டாமல் போனது பற்றிக் கவலையில்லை, எங்கள் குளத்திலிருந்த மீன்களும் அல்லோ போட்டுது!' என்று முன்னாள் அதிகாரக்கட்சியினர் கவலைப்படுகினமாம்.

**வவுனியாவின்** முன்னாள் வெகுஜனப் பிரதிநிதி குகனார் கட்சி மாறிய பட்சியாகிப்போட்டார். ஜனநாயகக் கட்சி பக்கமும் செல்ல அப்பிளிக்கேஷன் போட்டவராம். ஏதோ மிஸ் ஆகிப்போட்டுது. பின்னர் மற்றொரு இயக்கத்திலே சங்கமமாகிப் போட்டார். வெகுஜனப் பிரதிநிதி எண்ட பந்தாவிலை குடும்பத்துக்கு சொத்துச் சேர்த்த புண்ணியவான் அவர். சனத்தை மிரட்டி சொத்துக்களை- தவித்த முயல் அடிச்ச சூரர் அவர். ஆதாரம் பல உண்டு அவரைப் பற்றி. இப்படியான சொதப்பல் ஆட்களையெல்லாம் வெகுஜனப் பிரதிநிதியாக போட்டதும் ஏன்? பெரிய ஆட்களாக குணம் அறியாமல் தலையில் தூக்கி வைத்ததும் ஏன்? எல்லாம் பிசகாகச் செய்துபோட்டு அவர் விலகின பின்னர், விலக்கிப் போட்டம் எண்டு அறிக்கை விடுவானேன்? வேடிக்கை என்னதெரியுமோ? "நான் விலகினேன்" எண்டு அறிக்கை வருகுது முதல்நாள். அவரை விலக்கியாச்சு எண்டு அறிக்கை வருகுது மறுநாள்! 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் எண்ட கதைதானே!" ஆனால் ஒன்றுபாருங்கோ, தங்களுக்கு பிரச்சனை இல்லையெண்டால் சமூக விரோதிகளையும் தட்டிக் கொடுப்பதும், பின்னர் தீட்டிய மரத்தில் அவை கூர் பார்க்கும்போது திட்டித் தீர்ப்பதும் பல தமிழ்க் கட்சிகள் செய்துவரும் பெரும் பிழை! பிறகென்ன தர்ம நியாயம்?!

எதிலும் வெற்றி பெறத் தேவையானவை என்ன? படித்ததில் பிடித்தது.

## வெற்றிக்கு எட்டு

| | |
|---|---|
| தேவையானது | : முயற்சி |
| தேவையற்றது | : தளர்ச்சி. |
| உச்சரிக்கவேண்டியது | : நாம் |
| உதறவேண்டியது | : நான் |
| உயரவேண்டியது | : நம்பிக்கை |
| மறக்கக்கூடாதது | : நன்றி. |
| மதிக்கவேண்டியது | : நல்ல நண்பர்களை. |
| மிதிக்கவேண்டியது | : கஷ்டம் வந்தால் கைவிட்டுச் செல்பவர்களை. |



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# பரவலாய் நடந்த பாலியல் வன்முறைகள்!

121 அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

## பாலியல் வன்முறைகள்

இந்தியப் படை உயரதிகாரிகள் சிலர் தமது படையினரின் பலவீனங்களை நன்கு அறிந்துவைத்திருந்தனர்.

1987 நவம்பர் மாத தொடக்கத்தில் இந்தியப் படையினரின் பாலியல் வன்முறைகள் அதிகமாகத் தொடங்கின.

இந்தியப்படை அதிகாரிகள் சிலர் பொது மக்களிடம் ஒரு யோசனை தெரிவித்தார்கள்.

"இந்தியப் படையினர் அத்துமீறி நடந்தால் அவலக்குரல் எழுப்பி சத்தமிடுங்கள். அவர்கள் ஓடிவிடுவார்கள்" என்பதுதான் அவர்கள் சொன்ன யோசனை.

உண்மையில் பல இடங்களில் அந்த யோசனை பலன் அளித்தது. சத்தம் போட்டுக் கத்தினால் இந்தியப் படையினர் ஓடிவிடுவார்கள் என்பதை மக்களும் அறிந்து கொண்டனர்.

இந்தியப் படையினர் வீடுகளுக்குள் புகுந்து கெட்ட நோக்கத்துடன் நெருங்கும்போது வீட்டில் இருப்பவர்கள் கத்திக் குரல் கொடுக்க அயலவர்கள் திரண்டு வந்துவிடுவர். படையினர் நைசாக நழுவி ஓடிவிடுவார்கள்.

வயது வித்தியாசம் இல்லாமல் இந்தியப் படையினரால் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர்.

'முறிந்தபனை' ஆவணத்தில் பாலியல் பலாத்காரங்கள் தொடர்பாக திரட்டப்பட்ட சில தகவல்களை இங்கே தருகிறேன்.

பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட 38வயதான ஒரு பெண்மணி கொடுமையை விபரிக்கிறார்.

## 'செக்கிங்'

நவம்பர் 12ம் திகதி காலை 8 மணியளவில் மூன்று இந்திய இராணுவத்தினர் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். அப்போது எனது அம்மா சமையலறையில் இருந்தாள். நானும் என்னுடைய மகளுமே அவர்களைப் பார்த்தோம்.

"செக்கிங்" என்று மட்டுமே சொல்லிவிட்டு எனது மகளை ஒரு அறைக்குள் தள்ளினார்கள்.

நான் அவளைப் பற்றி இழுத்துக் கொண்டு கத்தினேன். "அம்மா அம்மா தேடுகிறார்கள்" என்று சொல்லிக் கத்தினேன்.

உடனே எங்கள் வீட்டுக்கு அருகில் இருந்த காவல் நிலையத்திலிருந்த படையினர் வீட்டுக்குள் ஓடிவர ஆரம்பித்தனர்.

எனது வீட்டுக்குள் இருந்த மூன்று படையினரும் "தாங்கள் சோதனையிட மட்டுமே வந்ததாகவும், உடனடியாகப் போய்விடுவோம்" என்றும் கூறினார்கள்.

எனது தங்கச் சங்கிலியை அவர்கள் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். நாங்கள் நல்லாகப் பயந்து போயிருந்தோம். பின்னர் எனது மகளை பெட்டி போன்று இருந்த பின்பக்க சிறு அறையில் ஒளித்து வைத்துக்கொண்டேன்.

பின்னர் 9.30 மணியளவில் அதே மூன்று இராணுவத்தினர் மீண்டும் வருவதைக் கண்டேன்.

இப்போது அவர்கள் இராணுவக் காவல் நிலையை நோக்கி இருந்த வீட்டின் முன்வாசல் வழியாக வராமல், காலியாக இருந்த இன்னொரு வீட்டின் ஊடாக வீடுகளுக்கிடையே தடுப்புச் சுவரைத் தாண்டி வந்தனர்.

பின்னர் அவர்கள் எனது பெற்றோரை ஒரு அறைக்குள் தள்ளிப் பூட்டினார்கள்.

என்னை ஒரு அறைக்குள் தள்ளிக் கொண்டுபோய், துப்பாக்கி முனையில் ஒருவர் பின் ஒருவராக மூன்றுபேர் என் மீது பாலியல் வன்முறையை மேற்கொண்டனர்.

நான்கூச்சல் போடவில்லை. கூச்சல் போட்டு அதனால் என் பெற்றோரை சுட்டுவிட்டால் என்ன செய்வது?

கொழும்புக்கு பஸ்கள் ஓட ஆரம்பித்த முதல்நாளே நான் யாழ்ப்பாணத்தைவிட்டு, எனது கிராமத்தை விட்டுப் போய்விட்டேன். பயங்கரக் கனவுகள் அடிக்கடி தோன்ற ஆரம்பித்தன. அவர்களுடைய முகங்கள் அடிக்கடி தோன்றின. அவர்களுடைய குரல்கள் அடிக்கடி கேட்பது போல தோன்றின.

பின்னர் எனது மகளைக் கூட்டிக் கொண்டு வெளிநாடு சென்றேன். ஒரு மனநல வைத்தியரைக் கூடச் சந்தித்தேன். அவர் ஒரு அந்நியராக இருந்தமையால் அவரிடம் என்னால் எல்லாவற்றையும் சொல்ல முடிந்தது. அவர் எனக்கு மருந்துகள் தந்தார். அவை ஓரளவுக்கு என்னைச் சாந்தப்படுத்தினாலும், என்னுடைய மனநிலைப் பாதிப்பை முற்றாக நீக்கிவிடவில்லை.

என் நிலைமையோ இன்னும் மோசமாகிக் கொண்டே போகிறது. என் மகளையாவது என்னால் காப்பாற்ற முடிந்ததே புண்ணியம்.

என்னுடைய கணவருக்கு இதைப்பற்றி எழுதியபோது 'ஒன்றுக்கும் கவலைப் படாதே' என்று எழுதியிருந்தார். உங்களுக்குத் தெரியுந்தானே எங்களுடைய ஆண்களைப் பற்றி? அவர் என்னை ஏற்றுக்கொள்ளுவார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இந்த உலகத்தில் இருந்து தனிமைப் படுத்தப்பட்டவள் மாதிரி உணர்கிறேன். எனக்கு என்னவோ மாதிரி இருக்கிறது!"

## மற்றொரு 'தேடல்'

இன்னுமொரு இளம் பெண்ணின் கதை இது. அவளுக்கு வயது பதின்மூன்று. ஒருகாலத்தில் அவளுடைய வீடு புலிகளின் முகாமாக இருந்தது.

'தேடல்' என்ற பெயரில் வந்த இந்திய இராணுவம் அச்சிறு பெண்ணை வீட்டிலிருந்த மற்றவர்களிடமிருந்து பிரித்துத் தனியே கொண்டுபோய் வைத்து அவளைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியது.

பின்னர் அச் சிறுபெண்ணும் குடும்பம் முழுவதும் கொழும்புக்கு ஓடிவிட்டனர். அவர்கள் மிகவும் நல்ல நிலையில் இருந்த மத்தியதர வர்க்க குடும்பத்தினராவர். தங்களுக்கு குற்றமிழைத்த நபர்களை அடையாளம் காட்டுவதிலோ, அல்லது வேறெந்த வழிகளில் இறங்கவோ அவர்கள் விரும்பவில்லை. அந்தக் கொடூர நிகழ்ச்சியை நினைவில் ஒரு இடுக்கில் போட்டுப் புதைத்துவிடவே அவர்கள் விரும்பினார்கள்.

வறிய ரோமன் கத்தோலிக்கர்கள் வசிக்கும் ஒரு பகுதியில் 55 வயதுடைய ஒரு விதவையையும், 22 வயதுடைய இன்னொரு பெண்ணையும் இரண்டு இந்தியப் படையினர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினார்கள்.

நவம்பர் 18ம் திகதி பிற்பகல் 2 மணிக்கும் 3 மணிக்கும் இடையில் நடந்த சம்பவம் அது.

ஒரு கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகில் இந்தியப்படை நிலைகொண்டிருந்தது.

வயதான பெண்ணைத்தான் இந்தியப் படைவீரர்கள் பார்த்திருக்கிறார்கள். அவள் தனது குடிசைக்குள் சென்றதும், அவரைப் பின்தொடர்ந்து சென்ற இந்தியப்படையினர் அப் பெண்மணி கூச்சலிட்டபோது, அவர் வாயைப் பொத்தியபடி பாலியல் வல்லுறவு கொண்டனர்.

அந்த நேரத்தில் கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற இளம்பெண் வீட்டின் பின்பக்க வளவில் நின்றிருக்கிறாள். ஏதோ குழப்பமாய் சத்தம் கேட்பதை உணர்ந்த அப்பெண் கதவருகில் சென்று 'ஆச்சி, ஆச்சி' என்று கூப்பிட்டிருக்கிறாள்.

கதவு திறக்கப்பட்டு உள்ளே இழுக்கப்பட்ட அப் பெண்ணும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டாள்.



சென்னையில் ஈ.பி.டி.பி. அலுவலகம் (1987)

அந்த இளவயதுப் பெண் தன்னை விடுவித்துக்கொண்டு வீதிவழியே ஓடிப்போய் கத்தினாள். அவள் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

## முகாமுக்குள் புகுந்தனர்

அதனால் ஆத்திரம் கொண்ட மக்கள் ஒன்றுதிரள ஆரம்பித்தனர். கிட்டத்தட்ட 400 பேர் கொண்ட மக்கள் கூட்டம் இராணுவ முகாமுக்குள் புக ஆரம்பித்தது.

துப்பாக்கிகள் சகிதம் இராணுவத்தினர் உஷாராக இருந்தனர். கோபமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்து உள்ளே செல்ல முற்பட்டனர்.

அப்போது அந்த முகாமின் கட்டுப்பாட்டு அதிகாரி வெளியே வந்தார். மக்களை அங்கேயே நிற்கச் சொல்லிவிட்டு மூன்றுபேரை மட்டுமே விசாரணைக்காக உள்ளே கூப்பிட்டார். அவர்கள் அப் பெண்ணையும் கூட்டிச் சென்று நடந்தவற்றை எடுத்துச் சொன்னார்கள். குடிசையில் இருந்த வயதான பெண்ணையும் அழைத்துப் போனார்கள்.

அடையாள அணிவகுப்பு நடந்தது. அந்த இரண்டு குற்றவாளிகளும் அடையாளம் காணப்பட்டனர். விசாரணைக்குப் பின்னர் அந்த இரண்டு இராணுவத்தினரும் தண்டிக்கப்படுவார்கள் என்று அந்த அதிகாரி உறுதி கூறினார்.

பதினெட்டு வயதான ஒரு பெண்ணின் கதை இது.

அவளுடைய தகப்பனார் ஒரு சுருட்டுச் சுற்றும் தொழிலாளி. இருந்தாலும் மகளை க.பொ.க. உயர்தரம் வரை படிக்க வைத்திருந்தார்.

இந்தியப் படையினர் கோழி பிடிப்பதற்காக அவர்களுடைய வளவுக்குள் சென்றனர். குறிப்பிட்ட தினத்தன்று அங்குவந்த இரண்டு இராணுவத்தினர் தாயை மகளிடமிருந்து பிரித்து துப்பாக்கி முனையில் தாயை நிறுத்தி வைத்தனர்.

கூச்சலிட்டால் தாயைக் கொன்று விடுவோம் என்று மகளை மிரட்டினார்கள். தாயின் முன்பாக மகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார்கள்.




தமிழ்நாட்டில் பிரபாகரனுக்கு ஆதரவான சுவரொட்டிகள் (1987 நவம்பர்)

அந்தப் பெண் மற்றவர்களைப் போல் அல்லாமல் அந்தச் சண்டாளப் பாதகர்களை அடையாளம் காட்டி தண்டனை வாங்கிக் கொடுத்தாள்.

இன்னொரு பாலியல் வல்லுறவுச் சம்பவத்தை ஆராய்ந்த ஒரு டாக்டர் பின்வருமாறு கூறுகிறார்.

"அது யுத்தத்தின் ஆரம்பக் கட்டம். கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் இளம் பெண்ணை இந்தியப் படையினர் கைது செய்தனர்.

நவம்பர் 16ம் திகதி இச் சம்பவம் நடைபெற்றது. அவளுடைய பெற்றோர்கள் விவசாயிகள். வயதானவர்கள்.

ஒரு புகைப்படம் சம்பந்தமாக விசாரிப்பதற்காகவே அவள் கைது செய்யப்பட்டாள். புகைப்படத்தில் அவளும் அவளுடைய பள்ளிச் சிநேகிதியும் இருந்தனர். அந்தச் சிநேகிதியின் சகோதரன் புலி என்று சந்தேகிக்கப்பட்டார்.

அந்த இளைஞன் தற்போது எங்கிருக்கிறான் என்பது பற்றியும், அவன் அவளது காதலன் என்றும், அந்த இளைஞன் தொடர்பான உண்மைகளைச் சொல்லாவிட்டால் அவளை அடித்து நொறுக்கப்போவதாகவும், அவளை பாலியல் வல்லுறவு செய்யப்போவதாகவும் இராணுவக் கப்டன் மிரட்டினான்.

## 24 மணிநேரம்

பின்னர் அப் பெண்ணை வீட்டில் கொண்டுபோய் விட்ட கப்டன் "24 மணிநேர அவகாசம் தருகிறேன். அதற்குள் யோசித்து உண்மைகளைச் சொல்லிவிடு" என்று மிரட்டிவிட்டுப் போய்விட்டான்.

சிறிது நேரம் கழித்து இரண்டு படையினர் அந்த வீட்டுக்கு வந்தனர். பெற்றோரை ஒரு பக்கத்தில் நிறுத்திவிட்டு, அவளை ஒரு அறைக்குள் கொண்டு சென்றனர். ஒருவன் பாலியல் வல்லுறவு கொண்டான். அவளுக்கு இரத்தம் கசியத் தொடங்கியது.

"நாங்கள் மறுநாளும் வருவோம். நடந்ததை யாரிடமும் சொல்லக் கூடாது." என்று எச்சரித்துவிட்டு சென்றுவிட்டனர்.

பயந்துபோன அப் பெண் கிணற்றுக்குள் குதித்துவிட்டாள். அதிஷ்டவசமாக அயலில் உள்ளவர்களால் அவள் காப்பாற்றப்பட்டாள்.

அவ்வழியாக ரோந்துப் பணிக்காகச் சென்ற கப்டன் அங்கே வந்தான். அவனுடன் பாலியல் வல்லுறவில் ஈடுபட்ட இரண்டு பேரும் வந்திருந்தார்கள்.

தான் பயமுறுத்தியதால்தான் அப்பெண் கிணற்றில் குதித்திருக்க வேண்டும் என்று நினைத்த கப்டன் அவள் தலையைத் தடவி, தான் பயமுறுத்தியதுபோல் செய்யப் போவதில்லை என்றும், ஏதாவது பிரச்சனைகள் இருந்தால் தன்னிடம் கூறும்படியும் கேட்டான்.

அவளைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய இருவரும் அங்கு நின்றதால் கப்டனிடம் அவள் உண்மையைச் சொல்லவில்லை.

பின்பு, அப் பெண்ணை டாக்டரிடம் குடும்பத்தினர் கூட்டிச் சென்றபோதுதான், அந்தச் சம்பவத்தை முறையீடு செய்யும்படி டாக்டர் கூறினார். பின்னர் அப் பெண் முறையீடு செய்ததுடன், குற்றம் செய்த நபர்களையும் அடையாளம் காட்டினாள்.

## தொடர் சோகம்

மற்றுமொரு இளம்பெண்ணின் துரயக் கதை இது.

1987 ஜனவரியில் அவளது பெற்றோர்கள் இலங்கை இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் பலியாகிப் போனார்கள்.

அந்தப் பெண்ணுக்கு 30 வயது. அவளும் அவளோடு கூட இரண்டு பெண்களும் வீட்டில் இருந்தனர்.

இந்தியப் படைவீரர்கள் வந்து கதவைத் தட்டினார்கள். கதவைத் திறப்பதா வேண்டாமா என அவர்கள் யோசித்துக் கொண்டிருக்கும்போது, விடாமல் கதவு தட்டப்பட்டது. அவர்களே கதவை உடைத்து உள்ளே புகுந்தபோது பெண்கள் ஓடித் தப்பினார்கள். அந்த முப்பது வயதுப் பெண்ணை மட்டும் காணவில்லை.

பின்னர் அந்தப் பெண்ணின் சடலம் அவளது வீட்டுக் கிணற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டது.

பிரேத பரிசோதனை செய்த நீதித்துறை மருத்துவ அதிகாரி அப்பெண்மீது பாலியல் வன்முறை பிரயோகிக்கப்பட்டதற்கான தெளிவான அடையாளங்கள் இருப்பதாகத் தெரிவித்தார்.

அகதி முகாம்களில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் தம் வீடுகளுக்கு திரும்பிச் சென்று கொண்டிருந்தபோதுதான் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் அதிகமாக நடந்திருக்கிறது.

## வீதிச் சேதனை

கிராமம் விட்டுக் கிராமம் ஓடித்திரிந்து கொண்டிருந்த நேரத்தில் ஒரு இளவயதுப் பெண்ணும் அவளது சிறுதங்கையும் இந்தியப் படையினர் சோதனைச் சாவடிகளைத் தாண்டிச் செல்ல வேண்டி இருந்தது.



சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அலுவலகம்- பத்மநாபா (1987)

"எங்களுடைய உடலின் அந்தரங்கப் பகுதிகளை எல்லாம் எவ்வாறு இந்தப் படையினர் நகங்களால் கீறியும், தடவியும் அநாகரிகமாக நடந்துகொள்ள முடியும்?" என்று அந்தப் பெண் குமுறினார்.

இந்திய இராணுவ அதிகாரிகள் எமது பெண்களை இழிவாக நோக்கினர். ஈவு இரக்கமில்லாமல் நடந்துகொண்டனர்.

காரசாரமான ஒரு கலந்துரையாடலின் போது ஒரு இந்திய இராணுவ அதிகாரி பின்வருமாறு குறிப்பிட்டார்;

"இத்தகைய கதைகள் வெகுவாக மிகைப் படுத்தப்பட்டுள்ளன. நேற்று ஒரு பாலியல் வன்முறைச் சம்பவம் பற்றி நாங்கள் விசாரணை மேற்கொண்டபோது, கடைசியில் பார்த்தால் அது வெறும் மானபங்கப்படுத்தல் சம்பவமாகவே முடிந்திருக்கிறது."

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் குற்றச்சாட்டுக்களுக்கான ஊர்ஜிதங்கள் பலமாக இருந்தபோதும், இதே அதிகாரி சிறிது சமரசத் தொனியில் பேசவேண்டி வந்த போது பின்வருமாறு சொன்னார்;

"பாலியல் வல்லுறவு என்பதை கொடிய குற்றமாக நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இது எல்லா யுத்தங்களிலும் நடக்கிற ஒரு சம்பவம். யுத்தத்தில் ஏற்பட்ட களைப்பு போன்ற உளவியல் காரணங்களை இதற்கு அடிப்படையாகச் சொல்லலாம்."

'முறிந்தபனை' நூலாசிரியர்களில் ஒருவரான ரஜினி திரணகம பின்வருமாறு கூறியிருந்தார்.

"பெண்களாகிய நாங்கள் இதனை ஜீரணித்துக்கொள்ள முடியாது. எமது உடல் எமக்குரியது. உங்களின் களை தீர்ப்பதற்கானதல்ல."

ஒரு இந்திய இராணுவ அதிகாரி இப்படியும் எதிர்ப்புக்குரல் எழுப்பியிருக்கிறான்.

"நாங்கள் வேண்டுமென்றே பெண்களைச் சோதனையிடுவதில்லை. இதோ பாருங்கள்! எங்கள் அதிகாரிகளில் ஒருவர் திறந்த வாகனத்தில் செல்லும்போது வீதியில் இரண்டு பெண்கள் நின்று கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பெண் கையசைக்க, மற்றப் பெண் ஸ்கேர்ட்டை உயர்த்தி தானியங்கி துப்பாக்கியை எடுத்து எங்கள் அதிகாரி மற்றும் ஜவான்மீது சுட அரம்பிக்கிறாள். பெண்களையும் நாங்கள் சோதிக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லையா? தொடைகளுக்கிடையேயும், ஜாக்கெட்டுக்குள்ளும் ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பவர்கள் பெண்ணாகவே இருக்கின்றனர்."

## கட்டுக்கதையா?

சோதனைச் சாவடிகளில் நூற்றுக்கணக்கான பெண்களைச் சோதனையிடுவது முழுவதையும் ஆண்களே செய்தனர். ஆயுதங்களைத் தேடுதல் என்பது சகல பெண்களின் உடலிலும் கைவைத்தல் என்பதற்கான அனுமதியாகிவிட்டிருந்தது. ஒரு சோதனைச் சாவடியில் ஒரு சிறு பெண் அழுது கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணின் மாதவிலக்குக்குப் பயன்படுத்தும் உள்துணியைக்கூட காட்டச் சொல்லிக் கேட்டார்களாம்.

இதெல்லாம் நடந்தும் இந்தியப் பத்திரிகைகள், ஏன் அனிதா பிரதாப் போன்ற பெண் பத்திரிகையாளர்கள்கூட பாலியல் வன்முறை என்பது வெறும் வதந்தி என்றும், இந்தியப் படைக்கு எதிராக கட்டிவிடப்பட்ட கட்டுக்கதை என்றும் எழுதியிருந்தனர்.

பெண்களைச் சோதனையிடுவதற்காக இந்திய மத்திய ரிசர்வ் பொலிஸ் படையின் பெண்கள் பிரிவு வெகு அமர்க்களமாக கொண்டுவரப்பட்டது.

குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே பெண் காவல் நிலைகள் அமைக்கப்பட்டன. தொடர்ந்தும் ஆண் இராணுவத்தினரே பெண்களைச் சோதனையிட்டனர். ஆனையிறவில் ஒவ்வொரு பெண்ணும், இந்தியப் பொலிசாரால் சோதனையிடப்படும் கூண்டுக்குள் இருந்து ஆண் ரிசர்வ் பொலிசார் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி அகதி முகாமுக்குள் புகுந்த இந்திய இராணுவ வெறியர்கள் ஆண்களில் இருந்து பெண்களைத் தனியாகப் பிரித்தெடுத்தனர். பெண்களை மானபங்கம் செய்தனர். பெண்கள் ஒன்று சேர்ந்து கூச்சலிட்டதால் இந்தியப் படை வெறியர்கள் ஓடிவிட்டனர்.

வீடு வீடாக நடைபெற்ற தேடுதல் ஒன்றின்போது பாசையூரில் உள்ள ஒரு வீட்டில் பெண் ஒருவரின் கீழாடையை தூக்கியிருக்கின்றனர்.

ஆத்திரம்கொண்ட பெண்கள் குழு அப்பகுதியின் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் முறையிட்டனர். அதன்பின்னர் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டு சம்பந்தப்பட்ட இராணுவ வீரர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

# பீரங்கியின் வாய்களில் இருந்து தோன்ற முடியாத சமாதானம்!

"பீரங்கிகளால் அல்ல; தர்மத்தினால்மட்டுமே நிரந்தர சமாதானத்தைக் கொண்டுவரமுடியும்!"

"குரோதத்தைக் குரோதத்தால் ஒழிக்கமுடியாது; காருண்யமே குரோதத்தை வெல்லும்!"

மேற்குறிப்பிட்ட உயரிய வார்த்தைகளை அண்மையில் பத்திரிகையொன்றுக்கு வழங்கியிருந்த பேட்டியொன்றிலேயே வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா கூறியிருந்தார்.

திரு.காமினி பொன்சேகா கடந்த ஆட்சிக்காலத்தில் பிரதி சபாநாயகராகவும் பதவிவகித்தவர். இலங்கையின் மூத்த சிங்களத் திரைப்பட நட்சத்திரங்களில் ஒருவரான காமினி பொன்சேகாவுக்கு அனைத்து மட்டங்களிலும் இரசிகர் கூட்டம் உண்டு.

1977ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியமைப்பதற்கு திரு.காமினி பொன்சேகா நடித்து வெளிவந்த 'சாகரயக்மெத' என்ற திரைப்படமும் ஒரு பிரசாரமாக இருந்தது

'சமுத்திரத்தின் நடுவே' என்பதே அத்திரைப்படப் பெயரின் தமிழ் அர்த்தமாகும். கொலயுண்ட பிரபல பத்திரிகையாளரான றிச்சார்ட் டி சொய்ஸாவும் அதில் முக்கிய பாத்திரமேற்று நடித்திருந்தார். அன்றைய சுதந்திரக்கட்சி ஆட்சியின் சீர்கேடுகளை அத்திரைப்படம் வெளிக்காட்டியிருந்தது.

இது தவிர 'கொட்டி வலிகய' (புலியின் வால்), 'நொமியன மினிசு' (அழிவற்ற மனிதர்கள்) என்ற வடக்கு-கிழக்குப் பிரச்சினையை மையமாக வைத்த திரைப்படங்களைக்கூட தாமே தயாரித்து அதில் முக்கிய வேடமேற்று காமினி பொன்சேகா நடித்திருந்தார்.

ஐ.தே.க. ஆட்சியில் இருந்தவர்களால் பிரதி சபாநாயகர் பதவி வழங்கிக் கௌரவிக்கப்பட்ட காமினி பொன்சேகா இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்களால் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராக்கப்பட்டுள்ளார்.

"தர்மத்தினால் மட்டுமே சமாதானத்தைக் கொண்டு வரலாம்!" என்று திரு.காமினி பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்துவது என பொதுஜன ஐக்கிய முன்னணி கூறிவருகின்றது.

ஆனால் தர்மத்தினால் மட்டுமே சமாதானத்தை ஏற்படுத்த முடியுமென ஆளுநர் காமினி பொன்சேகா கூறியிருப்பது, அரசியலுக்கும் அப்பாற்பட்ட விதத்தில் ஆட்சியாளர்கள் சிந்திக்கவேண்டியிருப்பதையே வலியுறுத்துகின்றது.

தர்மம் என்பது ஒரு பொதுமறையாகும்: அனைத்து மானிடர்களையும் நெறிதவறாத நிலையில் இருப்பதற்கு வழிகாட்டுவதே தர்மமாகும்.

புத்தரின் போதனை, பகவத்கீதை, விவிலிய வேதம், அல்-குர்ஆன் என்பவை அனைத்துமே தர்மத்தை இடித்துரைத்து நிற்கின்றன.



"தர்மம் குன்றி அதர்மம் எப்போது தலையெடுக்கிறதோ, அப்போது தர்மத்தை நிலைநாட்ட அவதாரமெடுப்பேன்!" என்று பகவத் கீதையில் கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனிடம் கூறுகின்றார்.

உலகில் இன்று திரும்புமிடமெல்லாம் அதர்மச் செயல்களே தலைவிரித்தாடுவதைக் காணமுடிகின்றது.

விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்பன முன்னேறியுள்ளன என்று குறிப்பிடலாம். ஆனால் இந்த முன்னேற்றங்கள் யாவும் மனிதர்களை மனிதர்களாக வாழவைக்கத் தவறியவையாகவே இருக்கின்றன.

நினைத்துப்பார்க்கக்கூட முடியாத குற்றச் செயல்கள், வன்செயல்கள் என்பவற்றில் மானிடசமூகம் ஈடுபட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இன்றையக் காலகட்டத்தில் தர்மம் என்பது உதாசீனப்படுத்தப்பட்டு அதர்ம நெறிமுறைகளே மேலோங்கி நிற்பதைப்பார்க்க முடிகின்றது.

எனவே இன்றையப் பிரச்சினைகளுக்கு 'தர்மம்' என்பதன் அடிப்படையில் அமையும் தீர்வே நிரந்தரமானதாகவும், நேர்த்தியானதாகவும் அமையமுடியும்.

வடக்கு-கிழக்கு ஆளுநர் என்ற வகையில் அப்பிரதேசங்களில் நிலவும் எண்ணிலடங்காத மானிடப் பிரச்சினைகளைக் காணவும், கேட்பதற்குமான வாய்ப்புகளை திரு.காமினி பொன்சேகா கொண்டுள்ளார்.

கடந்த 13 வருடகாலமாக இடம்பெற்று வரும் வடக்கு-கிழக்கு யுத்தம் அப்பிரதேசத்தை மோசமான மனிதாபிமானப் பிரச்சினைகளைக் கொண்டதாக மாற்றிவிட்டுள்ளது.

அகதிகள், அநாதைகள், அபலைகள் என்று பல்லாயிரக்கணக்கானவர்கள் பரிதவித்து நிற்கும் ஒருநிலையே வடக்கு கிழக்கில் காணப்படுகின்றது.

**'சாண் ஏற முழஞ் சறுக்குவது'போல வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் போதெல்லாம், அம்முயற்சிகள் பாழாகிப் போய்விடுகின்றன. இதனால் எதுவும் அறியாத இலட்சக்கணக்கான வடக்கு-கிழக்குப் பிரதேச வாசிகள் தமது எதிர்காலத்தை நொந்தவர்களாக இருக்கக் காணப்படுகின்றனர்.**

யுத்தம் என்று கூறி எல்.ரி.ரி.ஈ.யும் ஆயுதப்படையினரும் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் முழுநாட்டையுமே நாளுக்குநாள் படுகுழிக்குள் ஆழமாகத் தள்ளிவிடுகின்றன.

இரு தரப்புமே தமது மேலாதிக்கத்தை நிலைநாட்ட யுத்தத்தைப் புரிகின்றன. ஆனால் எவ்விதத்திலும் ஓர் உறுதியான வெற்றியைப் பெற முடியாதிருக்கின்றது.

**இந்நிலையில் "பீரங்கிகளினால் அல்ல; தர்மத்தினால் மட்டுமே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியும்!" என்று ஆளுநர் காமினி பொன்சேகா காலமறிந்து கூறியிருப்பதையே காணமுடிகின்றது.**

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு சாராருமே தர்மம்-அதர்மம் ஆகியவற்றைப் பிரித்தறிய வேண்டியவர்களாகவுள்ளனர்.

தமது தரப்பிலேயே நீதி, நியாயம் உண்டென இரு சாராருமே போரில் குதித்து நிற்கின்றனர். ஆனால் போர் என்பதே அதர்மம் சார்ந்ததாக இருக்கும் போது, அதனூடாக தர்மத்தை எவ்விதத்திலும் நிலைநிறுத்த முடியாது!

தர்மத்துக்கான முதற்படி யுத்தத்தை நிறுத்தி அமைதி வழியில் செல்வதேயாகும்.

இலங்கையில் எவருக்குமே பயன்தராத யுத்தத்தினால் நாளுக்கு நாள் பல உயிர்களும், பலகோடிப்பணமும் விரயமாவதைத் தவிர்ப்பதற்கு அனைத்துத்தரப்பிலிருந்தும் உளப்பூர்வமான சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் போராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கடந்தவாரம் கலந்து கொண்ட கருத்தரங்கொன்றில் உரையாற்றியபோது, "சமாதானத்துக்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவே" என்று கூறியிருந்தார்.

தமது அரசு முன்னெடுக்கும் சமாதானத்திட்டத்தை அவர் தீவிரமாகவே பிரசாரஞ்செய்து வரக் காணப்படுகின்றார். ஆனால் அவரால் இத்தீவிர முயற்சியில் எவ்வளவுதூரம் வெற்றி பெறமுடியுமென்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

முன்னர், ஏப்ரலில் தீர்வுத்திட்டம் தயாராகிவிடும் என்று கூறிய நீதியமைச்சர் தற்போது அடுத்த 'பட்ஜெட்டின்' முன்னர் தீர்வுத்திட்டம் தயாராகும் எனக் கூறியிருப்பதும் நம்பிக்கையீனங்களையே தோற்றுவித்துள்ளது.

நாளுக்குநாள் யுத்தத்தினால் அதிகரித்துச்செல்லும் செலவுகளையும், அதேசமயம் சமாதானத்துக்கான அவசர தேவையையும் ஒருங்கே நன்குணர்ந்தவராக பேராசிரியர் விளங்குகிறார்.

ஆயினும் அவரால்கூட அரசியல் சூதாட்டத்தின் நிர்ப்பந்தங்களை மீற முடியாமலேயே இருக்கிறது.

இந்நிலையில், தற்போதைய சூழ்நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு முன்னெடுக்கும் சமாதான முயற்சிகள் தென்னிலங்கை எதிர்க்கட்சிகளினதும், தமிழ்க்கட்சிகளினதும் ஆதரவைப்பெற வேண்டியவையாகவுள்ளன.

இவற்றுக்கு மேலாக எல்.ரி.ரி.ஈ.யின் ஆதரவு பெரிதும் தேவைப்படுகின்றது.

பேராசிரியர் பீரிஸின் சமாதானத்தைக் காண்பதற்கான அரசியல் தீர்வுத்திட்டமென்பது முதலில் மேற்குறிப்பிட்ட சக்திகளின் இணக்கத்தையே பெறவேண்டும்.

ஆயினும் அத்தகைய இணக்கப்பாட்டைப் பெறக்கூடிய அரசியல் சூழலை உருவாக்க அரச தரப்பு முன்வருவதாகத் தோன்றவில்லை.

கருத்தரங்குகளையும், விரிவுரைகளையும் நடத்தி மக்களுக்கு அனைத்தையும் விளக்கலாம். ஆயினும் அதனால் மட்டும் பயன் ஏற்பட்டுவிடாது. எந்தவொரு இனத்தையும் சேர்ந்த சாதாரண மக்கள் அமைதியையே விரும்புவர்.

பல்வேறுபட்ட அரசியல் சித்தாந்தங்களைக்கொண்ட அரசியல் கட்சிகளிடையே அரசியல் தீர்வுகுறித்து தெளிவான கண்ணோட்டமும் ஒருமைப்பாடும் தேவை.

இந்நிலையில் சகல அரசியல் சக்திகளுமே தமது நிலைப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு 'தர்மம்', நீதி, என்ற உயர்வான நிலையிலிருந்து சிந்திக்கத் தலைப்படும்பட்சத்திலேயே 'பீரங்கிகளினால் அல்ல; தர்மத்தினாலேயே சமாதானம் ஏற்படும்!' என்று ஆளுநர் காமினி பொன்சேகா கூறியிருப்பது சாத்தியமாகும்.

# திசைமாறிய ஈழப் பிரச்சினை

**ஆர். நாகராஜன் 1989ல் தி.மு.க. அரசில் உள்துறை செயலாளராக இருந்தவர். நிழல் முதல்வர் என்று அழைக்கப்படும் அளவுக்கு கருணாநிதியின் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருந்தவர். இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பான அவரது தற்போதைய கண்ணோட்டம் இது.**

ஈழத் தமிழர்களின் உரிமைக்கும், போராட்டத்திற்கும் குரல் கொடுத்து- நேசக் கரம் நீட்டி உதவிகள் செய்த தமிழ்நாட்டில் ஒரே அமைதி! இந்திய அரசுக்கும்-இன்றைய இலங்கை அரசுக்கும் நெருக்கமான உறவு! ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசுக் கும்-தமிழக அரசுக்கும் ஒரே கொள்கை! ஒரே உணர்வு! ஒரே பார்வை! இந்த மாற்றம் சந்திரிகா அரசுக்குக் கிடைத்த மிகப்பெரிய ராஜதந்திர வெற்றி!

**ஈழப் போராளிகளுக்கு ஆயுதம் தந்தது இந்திரா காந்தி அரசு. கஜானாவைத் திறந்து கோடிகளை எடுத்துக் கொடுத்தது எம்.ஜி.ஆர். அரசு. ஈழத் தமிழர்களுக்கு உணவு இல்லை என்ற ஒரு கட்டத்தில் இந்திய விமானத்தின் மூலம் உணவுப் பொட்டலங்களை மழையாய்ப் பொழிந்தது ராஜீவ் காந்தி அரசு. இவைகளெல்லாம் பழைய பாச நினைவுகள்.**

1987-ல்தான் போராளிகளுக்கு ஆயுத உதவி கிடையாது என்ற முடிவுக்கு இந்திய அரசு வந்தது. 1987 ஜூன் மாதம் ஏற்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம், ஈழத்தமிழர் பிரச்சினையில் ஒரு திருப்புமுனை. இந்த ஒப்பந்தத்தை ஈழப் போராளிகள் எதிர்த்த காரணத்தால் இந்தியாவின் தார்மிக ஆதரவை முதலில் போராளிகள் இழந்தார்கள். இருப்பினும் தமிழகம் அவர்களைக் கைவிடாத நிலை நீடித்தது.

1989ல் தி.மு.க அரசு ஆட்சிக்கு வந்தவுடன் மறுபடியும் ஈழத் தமிழர் நல்வாழ்வுக்கான அறிகுறிகள் தென்பட்டன. ஈழத்தமிழர் கோரிக்கைக்கு எதிராகப் பணி செய்பவர்கள் இலங்கையில் மட்டும்தானா இருக்கிறார்கள்? இந்தியாவிலும் இருக்கிறார்கள்.

இலங்கைப் போராளிகளின் பல்வேறு பிரிவுகள், இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களின் அரவணைப்பில் செயல்பட்டதால், இலங்கையில் உள்ள ஈழத்தமிழர் கோரிக்கை பற்றிய ஒருமித்த கருத்து இந்தியாவில் உருவாக வாய்ப்பில்லாமல் போய் விட்டது. இதுதான் ஈழத் தமிழர்களின் இன்னல் களுக்கு முதல் காரணம்.



ஆர். நாகராஜன்

இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கான காரணத்தை முன்னாள் பிரதமர் நரசிம்மராவ், ஜெயின் கமிஷன் முன்பு சாட்சியம் தந்தபோது தெளிவுபடுத்திவிட்டார். ஈழத்தமிழர் பிரச்சினையின் முடிவுக்காகத்தான் இந்தியாவும் இலங்கையும் ஒப்பந்தம் செய்து கொண்டன என்ற வாதத்தை ராவ் வாக்கு மூலம் தவிடு பொடியாக்கிவிட்டது.

**"1987ல் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே இந்தியா மீது கோபமாக இருந்தார். ஈழத் தமிழர்களுக்கு இந்தியா பரிவு காட்டி ஆதரவு தருவதை ஜெயவர்த்தனே விரும்பவில்லை.**

**இலங்கையில் உள்ள திருகோண மலையில் அமெரிக்கர்களின் கம்பெனி ஒன்று கேந்திரம் அமைத்துச் செயல்பட ஜெயவர்த்தனே அரசு அனுமதி தரும் நிலையில் இருந்தது. இந்த முடிவு இந்தியாவின் பாதுகாப்பிற்குப் பாதகமானது. இதைத் தடுக்கும் பொருட்டுத்தான் இந்தியா-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. அதற்கான பூர்வாங்க வேலைகளை நான் கவனித்தேன்" என்பது நரசிம்மராவ் தந்த வாக்குமூலம்!**

**இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் வெளித்தோற்றம் வேறு, உள்நோக்கம் வேறு என்பது இப்போதுதான் புரிகிறது.**

1991-ல் நடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்பு, மத்தியில் நரசிம்மராவ் அரசின் உள்துறை அமைச்சராக இருந்த சவாண் சமீபத்தில் ஈழப் பிரச்சினை பற்றி சில உண்மைகளைச் சொன்னார். **1987க்கு முன்பு, ஈழத்தமிழர் பற்றிய மத்திய அரசின் செயல் பாடுகள் அடங்கிய எந்தவித ஆவணங் களையும் தான் பார்க்க உளவுத் துறை ஒத்துழைக்கவில்லை** என்று சவாண் கூறியுள்ளார்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் ஏற்பட்ட சிக்கலுக்கு இந்தியாவிலும் சில அரசியல் பிரச்சினைகள் அடிப்படைக் காரணமாக இருந்துள்ள செய்திகள் மிகவும் தாமதமாக நாட்டு மக்களுக்கு வந்து கொண்டிருக் கின்றன.

ராஜீவ் காந்தியின் மரணத்திற்குப் பிறகு, ஈழத்தமிழர் பிரச்சினை முற்றிலுமாக வேறு திசைக்குச் சென்றுவிட்டது. கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விசாரணைக்கு உட்படுத் தப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. கொலைக்காக நடந்த சதி பற்றி பல்வேறு கருத்துகள் உண்டு. அதுபற்றிய விசாரணையும் ஆறு ஆண்டுகளாக நீதிபதி ஜெயின் தலைமையில் உள்ள கமிஷன் முன்பு விசாரிக்கப்பட்டு வருகிறது.

ஈழப் போராளிகளின் ஒரு பிரிவினருக் கும் இந்தக் கொலைக்கும் தொடர்பு உண்டு என்ற குற்றச்சாட்டு நீதிமன்றத்தின் முன்பு இருக்கும் தருணத்தில் ஈழப்பிரச்சினையில் முற்றிலுமாக ஒரு கொள்கை மாற்றம் இந்தியாவில் ஏற்பட்டுள்ளது. **தமிழீழம் என்ற கோரிக்கையை ஒரு நேரத்தில் ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றிய தமிழ்நாட்டின் பெரிய அரசியல் கட்சிகள், இப்போது பேசா மடந்தைகளாக மாறிவிட்டன. இன உணர்வு, தன்மான உணர்வு பற்றியெல்லாம் குரல் எழுப்பிய தமிழகம் மௌனமாகி விட்டது.**

போட்டி போட்டுக்கொண்டு ஈழப் போராளிகளுக்கு உதவிய காலம்மாறி, "எங்களுக்கும் அவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை" என்று அறிவிப்பதில் இப் போது போட்டி வந்துவிட்டது.

ஈழத்தமிழர்கள் என்று கூறினால் ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று, இலங்கைத் தமிழர் என்று மறுபடியும் பழைய பாட்டையே பாட ஆரம்பித்து விட்டனர்.

அண்டை நாடு என்ற அடிப்படையில் சந்திரிகா அரசுக்கு இந்திய அரசு முழு ஆதரவு தருகின்ற நிலையில், தமிழகத்தில் உள்ள தமிழ் இனத் தலைவர்களின் 'பாரா முகம்' காட்சி தரும் வேளையில், ஈழத்தமிழர் பிரச்சினைக்கு விடிவுதான் எப்போது?

விடுதலைப்புலி அமைப்பை ஒதுக்கி விட்டு, மற்றவர்கள் ஈழப் பிரச்சினைக்குத் தலைமையேற்கும் வாய்ப்பு ஒன்று இருந்திருப் பின் அது ஈழத்தில் எப்போதோ நடந்திருக் கும்! அந்த வாய்ப்புகள் அனைத்தும் கைநழுவிப் போய்விட்ட காரணத்தால்தான், இப்போது இலங்கை அமைச்சர் தொண்டமான்கூட, புலிகளின் அமைப்புதான் ஈழத்திற்கு விடிவு காண முடியும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்.

புலிகள் அல்லாத மற்ற போராளி அமைப்புகள் ஒற்றுமை தேவை என்று உணர்ந்து சகோதர யுத்தத்தைத் தவிர்த்து ஒன்றுபட வேண்டுமென்று ஈழத்தில் குரல் கொடுக்கும் வேளையில், தமிழ்நாடு ஒதுங்கி விட்டது. ஈழப்பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப்பிரச்சினை என்று இந்திய அரசும் கூறிவிட்டது.

**இந்தியாவில் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தின் கோரிக்கையை இந்தியா ஆதரிக்க முடியாத நிலை! இந்திய அரசின் விருப்பத் திற்கு மாறாக இனி நடப்பதில்லை என்ற முடிவு தமிழக அரசுக்கு!**

**ஈழத்தில் விடுதலைப் புலிகளின் தலைமையை மாற்றியமைக்க முடியாத நிலை மற்ற போராளிகளுக்கு!**

**இராணுவ பலத்தால் ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியாத நிலை சந்திரிகா அரசுக்கு!**

**இலங்கை இராணுவத்தின் அட்டூழியத் திற்கு எதிராகத் தங்களைக் கேடயமாக நின்று காப்பாற்றும் புலிகளைக் கைவிட்டால் வேறு கதி என்ன என்ற நிலை ஈழத்தமிழர் களுக்கு!**

இந்நிலையில் ஈழத்தில் தமிழினம் தேய்பிறையாகி வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான் தேவி

தருவது ரசிகன்

36

**கடந்த வாரம்**

**விக்கிரம் மல்லா கோஷ்டிக்கும் பொலிசாருக்கும் இடையே மோதல் ஏற்படுகிறது. விக்கிரம் மல்லா கோஷ்டியினர் பொலிஸாரில் எட்டுப்பேரை சுட்டுவீழ்த்துகின்றனர். பூலானும் அதில் ஒரு பொலிஸ்காரரை சுட்டு வீழ்த்துகிறாள். பூலானை மல்லா பாராட்டி அவள் தலையில் சிகப்புத்துணி கட்டுகிறான்.**

**இனி......**

விக்கிரம் மல்லா என் தலையில் சிகப்புத்துணியைக் கட்டிப் பாராட்டியபோது என் உள்ள மெல்லாம் பூரித்தது.

"உனக்கு இது எடுப்பாக இருக்கிறது. இனிமேல் இதையே அணிந்துகொள். கம்பீரமாக இருக்கும்" என்றான் மல்லா. அப்படிச் சொன்னபோது மல்லா தன் கண்களை விழித்து என்னைப் பார்த்தான். அது ஆச்சரியமா அல்லது ஆசையா என்று புரிந்துகொள்ள முயன்றேன்: முடியவில்லை.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை முகாமுக்குக் கொண்டு சென்றோம்.

யார் யார் பொலிஸ்காரர்களை குறி தவறாமல் சுட்டார்களோ அவர்களுக்கு அந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டன. அவர்களிடம் இருந்த பழைய ஆயுதங்களை மல்லா வாங்கிக் கொண்டான்.

எனக்கும் ஒரு புதிய துப்பாக்கி கிடைத்தது. நானும் ஒரு பொலிஸ் காரனைச் சுட்டுக் கொன்றதற்கு மல்லா தந்த அன்புப் பரிசு.

என்னிடம் இருந்த துப்பாக்கியைக் கொடுத்துவிட்டு அதனை வாங்கிக் கொண்டேன்.

இரவு மல்லா அருகேதான் படுத்திருந்தேன். மல்லாந்து படுத்திருந்த மல்லா ஏதோ யோசனையில் இருந்தான்.

அவன் கவனத்தை என் பக்கம் திருப்புவதற்காக தொண்டையைச் செருமினேன். ம்ஹீம், மல்லா திரும்பிப் பார்க்கவில்லை.

மீண்டுமொருமுறை செருமினேன். சிந்தனை கலைந்த மல்லா என்புறம் திரும்பிப் பார்த்தான். ஏதோ நினைவு வந்தவன் போல என்னிடம் கூறினான்:

"பூலான் நீ கெட்டிக்காரி. முதல் சண்டையிலேயே பலியெடுத்துவிட்டாய்! நான் நம்புகிறேன்! உன்னை நான் நம்புகிறேன்! தைரியமாக இரு. புரிகிறதா தைரியமாக இரு!" என்று சொல்லிவிட்டு சட்டென்று மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தவன்போலத் தெரிந்தான்.

இப்போது இருவருக்கும் இடையே மௌனம் நிலவியது. நான் மூச்சுவிடும் ஓசை எனக்கே கேட்குமளவுக்கு அமைதி நிலவியது.

திடீரென்று மல்லா அந்தக் கேள்வியைக் கேட்டான். நானே எதிர்பாராத கேள்வி.

"உன் அம்மா அப்பாவைப் பார்க்க விரும்புகிறாயா பூலான்? நான் உன்னை அழைத்துப் போகட்டுமா? எந்தக் கழிசடை நாய்க்கும் நீ பயப்படத் தேவையில்லை. நான் உன் பக்கத்தில் இருப்பேன். பயப்படாமல் சொல், பார்க்க விரும்புகிறாயா?" என்றான்.

விக்கிரம் மல்லா கேட்டதும்தான் எனக்கு அம்மா, அப்பா, தம்பி, தங்கைகளின் முகங்கள் எல்லாம் மனக் கண்ணில் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றின.

பயிற்சி, மல்லாமீதான பிரியம், பொலிஸ்காரர்களோடு சண்டை என்று அலைந்ததில் வீட்டு நினைவே மறந்து போயிருந்தது; அல்லது நினைக்கவே நேரமில்லாமல் இருந்தது.

இப்போது மல்லா கேட்டதும், ஆறின புண்ணைக் கிழறிவிட்டதுபோல் ஆகிவிட்டது. என் கட்டுப்பாட்டையும் மீறி அழுகை பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

படுக்கையில் இருந்து எழுந்து முழங்காலில் முகம் புதைத்துக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழத்தொடங்கிவிட்டேன்.

நான் கொள்ளைக் கோஷ்டியால் கடத்தப்பட்டேன் என்றதும், இல்லாத பொல்லாத கதையெல்லாம் சொல்லி எங்கள் கிராமம் முழுவதும் அம்மா அப்பாவை என்ன பாடுபடுத்தியிருக்கும்!

பாவம் தம்பி சிவநாராயணன்; வெட்கத்தில் பள்ளிக்கூடமே போகாமல் இருக்கிறானோ என்னவோ. அப்பா துரும்பாக இளைத்திருப்பார்.

ஐயோ.... சாப்பாட்டுக்கு என்ன செய்வார்கள்? அந்தப் பிசாசு மையாதீன் என் குடும்பத்தை என்ன பாடுபடுத்துகிறானோ?

'ஐய்யோ அம்மா...! என்னைப் பெற்ற தாயே..! என்னால்தானே இத்தனை கஷ்டமெல்லாம்... இல்லை.. என்னால் எந்தக் கஷ்டமும் இல்லை. எல்லாம் அந்தப் பாவிகள் செய்த கோலம் அம்மா.'

நினைக்க நினைக்க கண்ணீர் கட்டுக்கடங்காமல் கொட்டிக் கொண்டிருந்தது.

நீண்டநாட்களின் பின்னர் கண்ணீர் வற்றும் வரை அழுதேன். மூக்கைச் சிந்தினேன். அழுததால் பாரம் குறைந்தது போல் இருந்தது.

என் முதுகில் ஏதோ ஊர்வது மாதிரி இருந்தது. திடுக்கிட்டு நிமிர்ந்து திரும்பிப் பார்த்தேன். விக்கிரம் மல்லாவும் படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்து என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கை ஒன்றுதான் என் முதுகைத் தடவிக் கொண்டிருந்தது.

முதன் முதலாக மல்லா என்னை பரிவோடும் பாசத்துடனும் தொட்டது அப்போதுதான்.

"ஏன் அழுகிறாய்? வீட்டுக் கவலையா? என்னை மன்னித்துக் கொள் பூலான்! நீ இப்படி அழுவாய் என்று தெரிந்தால் நான் கேட்டிருக்கவே மாட்டேன்," என்றான்.

இப்போது முதுகில் இருந்த அவனது கை என் தலையைத் தொட்டு ஆதரவாக வருடிக்கொண்டிருந்தது.

மல்லா செய்தது ஆறுதலாக இருந்தது. கவலையிலும் மெல்லிய இன்பமாக இருந்தது.

சட்டென்று தன் நெஞ்சோடு என்னை இழுத்துக் கட்டிக்கொண்டான் மல்லா. நான் அதை எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் மறுக்கவும் இல்லை. மல்லாவின் நெஞ்சில் முகத்தைப் புதைத்துக்கொண்டு மெல்லக் குலுங்கினேன்.

மல்லா என் முகவாயைத் தொட்டு நிமிர்த்தினான். "அசடு மாதிரி ஏன் அழுகிறாய்? இப்போது நீ யார் தெரியுமா? ராணி. மகாராணி! நீ அழலாமா?" கேட்டவன் திடும்மென்று என் உதடுகளில் தன் உதடுகளைப் பொருத்தி ஆழமாக, வலிமையாக முத்தமிட்டான். என் கீழ் உதட்டை தன் உதடுகளால் கவ்விக்கொண்டு தன் பற்களால் மெல்லியதாகக் கடித்தான். அவன் கைகளில் ஒன்று என் பின்னங் கழுத்தையும், முதுகையும் இதமாகவும் பதமாகவும் வருடித் தடவிக்கொண்டிருந்தது.

எனக்கு இந்த அனுபவம் புதுமையாக இருந்தது. இந்த அனுபவம் தொடர வேண்டும் போலவும் இருந்தது. என்னை இத்தனை இதமாக யாரும் அணைத்துக் கொண்டதில்லை, அம்மாவைத் தவிர.

கோழிக் குஞ்சு தன் தாயின் அணைப்பில் கதகதப்பாக இருக்குமாம், அது போலத்தான் மல்லாவின் அணைப்பிலும், வருடலிலும் கதகதப்பாக இருந்தது. நம்பிக்கையான புகலிடம் ஒன்று கிடைத்தது போல இருந்தது.

என் உதடுகளை விட்டுவிட்டு என் காதுகள் இரண்டையும் தன் கைகளால் திருகினான். காதுமடல்களை மெல்ல மெல்ல விரல்களால் வருடினான். நான் அரைக் கண்களால் மல்லாவைப் பார்த்தேன். மல்லாவும் என் முகத்தைப் பார்த்தான்.

"வேண்டாமா?" என்றான். அவன் குரல் பிசிறடித்தது. நான் பதில் சொல்லாமல் அவன் மார்பில் சாய்ந்து கொண்டேன். அந்தச் செய்கையில் என் பதில் தெரிந்திருக்க வேண்டும். தன் மார்பில் சாய்ந்திருந்த என் தலையில் முத்தமிட்டான். என் பின் கழுத்திலும் மல்லாவின் உதடுகள் ஒத்தடம் கொடுப்பதுபோல பதிந்து மீண்டன.

"பூலான்!" என்று கிசு கிசுப்பான குரலில் என் காதருகே குனிந்து கூப்பிட்டான். விளக்கு எப்போதோ காற்றில் அணைந்திருந்தது. ஒரே இருட்டு. இருட்டு தைரியம் தந்தது. மல்லாவின் கிசுகிசுப்பான குரல் கிறக்கம் தந்தது.

"ம்" என்றேன். "என்றும் என்னுடன் இப்படியே இருப்பாயா?" என்றான் காதுக்குள். அப்படிக் கேட்டபோது காதில் அவனது உதடுகள் உரசியது இன்ப வேதனையாக இருந்தது.

"இ..இருப்பேன்" என்றேன். பேச முடியாமல் நாவு குழறியது. உடம்பு நெருப்பாகத் தகித்தது.

மல்லா என்ன நினைத்தானோ தெரியாது; என்னை தன் அணைப்பில் இருந்து விடுவித்தான். என் தலையைத் தொட்டு வருடிக்கொண்டே சொன்னான்:

"பூலான் நீ எனக்குரியவள். என்ன வேண்டுமானாலும் என்னிடம் கேள். இதை நான் அனுதாபத்தில் சொல்லவில்லை. உன் மீதுள்ள அன்பினால்தான் சொல்கிறேன். இப்போது நான் நடந்துகொண்ட முறை உனக்குப் பிடிக்கவில்லையா?"

"இல்லை" என்று சொன்னால் என்னைத் தப்பாக நினைப்பானோ எனப் பயமாக இருந்தது. மௌனமாக இருந்தேன்.

"மன்னித்துக்கொள்!" என்றான் உடைந்த குரலில், நான் பதறிப்போனேன்.

"தப்பாக நினைப்பதாக யார் சொன்னது? அப்படி நினைத்திருந்தால்... நினைத்திருந்தால்..." என்றுவிட்டு மேலே சொல்லத் தயங்கினேன்.

"நினைத்திருந்தால்.. ம்.. நினைத்திருந்தால் என்ன செய்திருப்பாயாம்? என்னை சுட்டுக் கொன்றிருப்பாயா? உன் கையால் சாவது என்றால் சந்தோசம்தான். என் உயிர் வேண்டுமா, எடுத்துக்கொள்! நான் தடுக்கமாட்டேன்," என்றவனின் வாயைப் பொத்தினேன்.

வாயைப் பொத்திய விரல்களில் ஒன்றை தன் உதடுகளால் பிடித்துக்கொண்டு இறுகக் கடித்துவிட்டான்.

"ஐயோ அம்மா" என்றேன். விரலை விட்டான். பொய்யான கோபத்தை குரலில் நிரம்பிக்கொண்டு, "இப்படியா கடிப்பது?" என்றேன்.

"எப்படிக்கடிக்க வேண்டும்? நீதான் சொல்லித்தாயேன்," என்றான் விஷமக்குரலில்.

"சே.. வெட்கமேயில்லையோ?" என்று அவன் மார்பில் குத்திவிட்டு புரண்டுவந்து என் படுக்கையில் கிடந்தேன்.

எப்போது தூங்கிப் போனேன் என்று தெரியவில்லை. எழுந்து பார்த்தபோது மல்லாவைக் காணவில்லை. வெளியேயும் மல்லா காணப்படவில்லை.

மாதுசிங்கை அழைத்தேன். இப்போதெல்லாம் நான் அவர்களின் மரியாதைக்குரியவள் ஆகிவிட்டேன்.

"மல்லாஜி எங்கே?" என்று மாது சிங்கிடம் கேட்டேன்.

"காலையில் எழுந்து போனார். எங்கே போகிறேன் என்று சொல்லவில்லை."

"யார் கூடப் போனார்கள்?"

"கேட்டேன். எவ்வளவோ தடுத்தும் பார்த்தேன். யாரும் துணைவர வேண்டாம் என்று கூறிவிட்டுப் போய்விட்டார்," என்றான் மாது சிங்.

அவன் சொன்னது எனக்குப் பேரிடியாக இருந்தது.

"ஏன் தனியாகச் செல்லவிட்டீர்கள்? அவர்தான் சொன்னார் என்றால் உங்கள் புத்தி எங்கே போனது? தலைவரைத் தனியாக விடலாமா?" என்று காட்டமான குரலில் கேட்டுவிட்டேன்.

நான் நின்ற தோரணையும், என் குரலில் தெரிந்த அதிகார வாசனையும் மாது சிங்கை சிறிது ஆச்சரியப்படுத்தியிருக்கலாம் என்று நினைக்கிறேன்.

அப்படிப் பேசிய பின்னர்தான் ஏன் அப்படி நடந்து கொண்டேன் என்று எனக்கே ஒரு மாதிரியாக இருந்தது. மல்லா ஆபத்தில் சிக்கினால் என்னாவது என்ற கவலையில் தான் அப்படி- பருத்தி வெடித்ததுபோல பட்டுப்பட்டென்று பேசிவிட்டேன்.

மாது சிங் பணிவைக் கைவிடாமல் தலைகுனிந்து நின்றுவிட்டுப் போய்விட்டான்.

மதியம் நான் சாப்பிடவேயில்லை. மல்லா மல்லா என்றுதான் என் இதயமும் துடித்தது போல இருந்தது.

இரவான போதுதான் மல்லா வந்தான். மல்லாவைக் கண்டதும் ஓடிப்போய் கட்டிக் கொண்டு அழவேண்டும் போலிருந்தது.

ஆனாலும் ஏதோ கோபமாக இருப்பது போல படீரென்று எழுந்து உள்ளே சென்றுவிட்டேன்.

சற்று நேரம் செல்ல உள்ளே வந்த மல்லா சொன்ன செய்திகளால் நான் நிலைகுலைந்து நின்றேன்.

**(தொடர்ந்து வரும்)**



பூலான்

## பாபாவுக்குப்போட்டி பாபா

புட்டப்பர்த்தி சாயிபாபாவுக்கு உலகெங்கும் பக்தர்கள் இருக்கிறார்கள். மாதந்தோறும் பல்லாயிரம் பக்தர்கள் பாபாவைத் தரிசிக்கச் செல்கிறார்கள். மாதாந்தம் அன்பளிப்புக்களாக மட்டும் பல இலட்சம் ரூபாய்கள் சேர்கிறது.

இப்போது பாபாவுக்கு கடும் போட்டி உருவாகியிருக்கிறது. தமது பெயருடன் 'பாபா' என்பதை இணைத்துக்கொண்டு பல பாபாக்கள் கிளம்பிவிட்டார்கள்.

போட்டி பாபாக்களில் பிரபலமானவர்கள் மாண்டியா பாபாவும், சிர்டி பாபாவும் தான். இவர்கள் இருவருக்கும் ஏகப்பட்ட கூட்டம் அலைமோதுகிறது.

மைசூரில் இருக்கிறார் மாண்டியா பாபா. அவரது பக்தர்களும், சாயிபாபா பக்தர்களும் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர் கள்போல அடிக்கடி மோதிக்கொள்கிறார்களாம். கிட்டத்தட்ட சாயிபாபா போலவே காட்சியளிக்கிறார் மாண்டியா பாபா.

சிர்டி பாபா கொஞ்சம் மாறுபட்டவர். சாயிபாபாபோல முடியெல்லாம் கிடையாது. அருள் வாக்குகளை அள்ளிவிட்டுக் கொண்டிருக்கிறார். அவருக்கும் படு கிராக்கி. பக்தர் கூட்டம் முட்டி மோதுகிறது.

இதிலும் ஆச்சரியமான செய்தி யாதெனில், சிர்டி பாபாவைத் தரிசித்த சில பக்தர்கள் உணர்ச்சி மேலிட்டு தற்கொலை செய்து முள்ளனர். சிர்டி பாபா ஆசிரமம் இந்தியாவில் மகாராஷ்டிராமா நிலத்தில் இருக்கிறது. அங்கு பல தற்கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதனால் சிர்டி பாபாவின் பக்தர்களுக்கு ரூம் கொடுக்க ஹோட்டல் உரிமையாளர்கள் தயங்குகின்றனர். ரூமில் தற்கொலை செய்து கொண்டால் பொலிஸ்- கேஸ் என்று அலைய வேண்டுமே!



சிர்டி பாபா

"சிர்டி பாபா தன் பக்தர்களை தற்கொலை செய்யாமல் தடுத்தாளக் கூடாதோ?" என்று கேட்கிறார்கள் ஹோட்டல் உரிமையாளர்கள். நியாயமான கேள்விதான்!

## நாயின் சாகசம்

அமெரிக்காவில் வாஷிங்டனில் நடந்த சம்பவம் இது:

பஸ் ஒன்றைக் கடத்திச் சென்றுவிட்டான் ஒருவன் என்று பொலிசுக்குத் தகவல் கிடைத்தது. உடனடியாகச் செயலில் இறங்கியது பொலிஸ்.

இரண்டு ஜீப்புக்களில், கடத்தப்பட்ட பஸ்ஸை விரட்டிச் சென்றார்கள் முன்னால் சென்ற ஜீப்பில் பொலிஸ் நாய் ஒன்றும் இருந்தது.

கிட்டத்தட்ட இரண்டரை மணிநேரத் துரத்தலின்பின்னர் பஸ்ஸை சுற்றி வளைத்தது பொலிஸ். உடனே கடத்தல்காரன் இறங்கிஓடத் தொடங்கினான். அவன் ஓடுவதைக் கண்டதும் ஜீப்பைச் செலுத்திய பொலிஸ் அதிகாரியும் இறங்கி அவனைத் துரத்திக் கொண்டு ஓடினார். அவனைப் பிடிக்கும் அவசரத்தில் ஜீப்பை நிறுத்தாமல் ஓடிவிட்டார்.

ஜீப் உருண்டுகொண்டிருந்தது. அதற்குள் இருந்த பொலிஸ் நாய் என்ன செய்வது என்று ஒரு கணம் திகைத்தது. மறு நொடியே சாரதி ஆசனத்தில் பாய்ந்து பிரேக்கை கஷ்டப்பட்டு அழுத்தியது.



சற்றுத்தூரம் ஓடிய ஜீப் பிடிபட்ட கடத்தல்காரன்மீது மோதிய பிறகே நின்றது. கடத்தல்காரன் செத்துப்போனான். ஆனாலும் சமயோசித செயலுக்காக நாய்க்கு விருது வழங்கிக் கௌரவித்துள்ளனர். புத்திசாலி நாய்!

## அங்கேயும் விஷமம்

அமெரிக்காவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சகல சமாச்சாரங்களிலும் சுதந்திரம் இருக்கிறது. ஆனாலும் அங்கும் செக்ஸ் குற்றங்கள் இல்லாமல் இல்லை. பெண்களிடம் விஷமம் செய்வதில் அமெரிக்க ஆண்களும் சளைத்தவர்களில்லை.

சமீபத்தில் வெளியாகியுள்ள திடுக்கிடும் செய்தி இது:

அமெரிக்க இராணுவத்தில் சேரும் பெண்களின் தொகை குறைந்துவருகிறதாம். அமெரிக்காவில் தெற்கு கரோலினா மாநிலத்தில் உள்ள இராணுவப் பயிற்சிப் பள்ளியில் சேருவதற்கு பெண்கள் அஞ்சுகிறார்களாம். விஷயம் தெரியாமல் சேரும் பெண்களும் அலறியடித்துக்கொண்டு விலகி வருகின்றனர்.

பயிற்சி கொடுக்கும் ஆண் அதிகாரிகளின் தொல்லைகளும், தொடுகைகளும் தாங்க முடியவில்லையாம். பயிற்சி கொடுக்கும் சாக்கில் கண்டபடி அத்துமீறுகிறார்களாம்.



சமீபத்தில் இராணுவப் பள்ளியில் இருந்து விலகியிருப்பவர் மெகர் என்னும் இளம்பெண். "சின்னச் சின்ன சில்மிஷங்கள் சகஜம். ஆனால் இந்த பயிற்சி முகாமிலோ... சொல்லவே வாய்கூசுகிறது..." என்கிறார் மெகர்.

வெளியேறியது மட்டுமல்லாமல் நீதிமன்றத்தில் வழக்கும் தொடுத்துள்ளார் மெகர்.

## ஹொலிவூட் இளவரசி

'பேசிக் இன்ஸ்டிங்க்ட்' படத்தின் மூலம் ஹொலிவூட் பட ரசிகர்களை தூக்கம் இல்லாமல் செய்தவர் ஷரோன் ஸ்டோன். ஷரோனுக்கு இப்போது வயது 39 என்றால் யாரும் நம்பவே மாட்டார்கள். எமக்குத்தான் விளாச



வருகிறார்கள். அத்தனை இளமை செழுமை.

கையளவு துணிகூட இல்லாமல் 'பேசிக் இன்ஸ்டிங்க்' படத்தில் நடித்து புயல் கிளப்பிய புண்ணியவதி ஷரோன்.

படத்தில் மட்டுமல்ல சொந்த வாழ்க்கையிலும் மிகத் தாராளமானவர் ஷரோன் ஸ்டோன்.

ஒரு குத்துமதிப்பாகக் கணக்கெடுத்ததில் இதுவரை ஏழு ஆண் நண்பர்களுடன் மிக அந்தரங்கமாக ஆழமாகப் பழகியுள்ளார் ஷரோன். அதில் முக்கியமான ஒருவர் ஹொலிவூட் படத்தயாரிப்பாளர் மைக்கேல் கிரீன்பர்க். மற்றொருவர் கிதார் இசைக் கலைஞர். நன்றாக இசைமீட்டக்கூடியவர் என்று ஷரோன் பாராட்டி இருக்கிறார் என்றால் பாருங்களேன்.

ஆண் நண்பர்களுடன் நட்பாக இருந்து சலித்துப் போய்விட்டது. அதனால் ஒரு உயிர் தோழியைத் தேடிக் கண்டுபிடித்துள்ளார். அந்தப் பெண் மருத்துவமனை ஒன்றில் நர்சாக வேலை பார்ப்பவராம். கிறிஸ்டி மார்ஷல் என்பது அந்தப்பெண்ணின் பெயர்.

"என்னுடன் பழகிய ஆண் நண்பர்கள் திறமைசாலிகள் அல்ல. அசடு வழிவதைத் தவிர வேறு எதிலும் மனம்வைத்து முன்னேறத் தெரியாதவர்கள்" என்று பேட்டி அளித்துள்ளார் ஷரோன்.

தனது வாழ்க்கை அனுபவங்களை சுயசரிதையாக ஒரு புத்தக ஆசிரியரிடம் சொல்லியுள்ளார் ஷரோன். வர்ணப் புகைப் படங்களுடன் வெளியாகி உள்ளதாம்.

ஷரோன் பற்றி ஹொலிவூட்டில் பேசப்படும் விஷயம் இதுதான்: "திறமையுள்ளவர்கள் என்றால் ஷரோனிடம் நண்பர்களாக முடியும். ஆனால் நிரூபித்தாக வேண்டும்."



படிப்பகம்

www.padippakam.com




## உளவு விமானம் வெள்ளோட்டம்

← ஆளே இல்லாமல் வானில் பறந்து செல்லும் உளவு விமானம் இலங்கை விமானப்படையிடமும் இருக்கிறது. அதில் ஒன்றுதான் காணாமல் போயிருந்தது. இங்கிருப்பது சிறிய விமானம். விரலுக்கு ஏற்ற வீக்கம்போல கட்டுப்படியாகக் கூடிய விலையில் வாங்கப்பட்டது. பெரிய நவீன உளவு விமானங்களும் வெளிநாடுகளில் இருக்கின்றன.

உலகில் உள்ள ஆளில்லாமல் பறக்கும் உளவு விமானங்களில் மிகப் பெரிய உளவு விமானம்தான் படத்தில் இருக்கிறது. இது அமெரிக்காவின் தயாரிப்பு. சமீபத்தில்தான் அமெரிக்காவில் சான்டியாகோவில் இதனை வெள்ளோட்டம் விட்டுப் பார்த்தனர். 14 ஆயிரம் மைல்கள் வரை ஒரே சமயத்தில் பறந்து செல்லும் திறன் படைத்தது. ஏனைய நாடுகளை உளவறிய அமெரிக்காவுக்குத் தான் எத்தனை செலவு? எத்தனை முயற்சிகள் பார்த்தீர்களா?

# தகவல் பெட்டி

## அசலும் - நகலும்





↑ அசப்பில் ஒருவர் போலவே ஏழுபேர் உலகில் இருப்பார்களாம். ஏழுபேர் இருக்கிறார்களோ இல்லையோ குறைந்தது இரண்டுபேராவது இருப்பார்கள் என்று நம்புவதற்கு ஆதாரங்கள் உண்டு.

படத்தில் பாருங்கள். ஹிட்லர் போலவே தெரிகிறார் அல்லவா. இவர் ஹிட்லரே அல்ல! போலிக் ஹிட்லர்.

தன் உயிருக்கு எந்நேரமும் ஆபத்து வரலாம் என்று நினைத்து ஹிட்லர் தன்னைப் போல் இருந்த இன்னொரு நபரை தனது டூப்பாக பயன்படுத்தினார்.

இப்படம் வியன்னா மிருகக்காட்சிச் சாலையை ஹிட்லர் பார்வையிட்டபோது எடுக்கப்பட்டது. சுற்றிப்பார்க்கிறார் ஹிட்லர். டூப் ஹிட்லர் சற்றுத் தள்ளி நிற்கிறார். ஹிட்லரை கொல்ல யாராவது வந்தால் ஏமாந்துபோய் இந்தப் போலி ஹிட்லரைச் சுட்டுவிட்டுப் போய்விடுவார்கள். அதிகாரிகள்கூட ஏமாந்துபோய் போலி ஹிட்லருக்கு சல்யூட் பண்ணினார்களாம். படத்தில் முதுகைக் காட்டியபடி நடந்து செல்பவர்தான் உண்மையான ஹிட்லர்.

## உடையா இது உடையா?



→ பலப் பல ரகங்களில் ஆடைகள் வந்துவிட்டன. 'பெஷன்' சோக்களில் விதம் விதமான ஆடைகளோடு ஒய்யார அழகிகள் தோன்றி மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒய்யார அழகர்களும் போஸ் கொடுக்கிறார்கள்.

ஆனாலும் இங்குள்ள ஆடைதான் உலக சாதனை படைத்திருக்கிறது. உலகிலேயே மிக மிக நீ..நீ..நீ..ள..ள..மான ஆடை இதுதான். ஆடை அணிந்து நிற்பவர் ஸ்பெயின் நாட்டு சுந்தரி அனாலிகியு. ஆள் பாதி ஆடை பாதி என்பார்கள். இங்கே ஆடை 99% வீதம். ஆள் 1% வீதம் என்பதால் ஆளையே தெரியவில்லை. குச்சிமாதிரி மத்தியில் தெரிகிறார்.

இந்த ஆடையின் சுற்றளவு 28 அடி. ஆடையின் நீளம் 330 அடி. கின்னஸ் புத்தகத்திலும் இடம்பிடிக்கப் போகிறதாம். 'ஆளைப் பாராதே, ஆடையைப் பார்'.

## சீரடி பாபா அண்ணல் காந்தி

→ படத்தில் இருக்கிறார் பாருங்கள் யார் தெரிகிறதா? இதென்ன இவரைத் தெரியாதாக்கும். அண்ணல் காந்திதான் என்கிறீர்களா? தப்பு. இவர் காந்தியே அல்ல.

இவரது பெயர்: எஸ்.கே.கங்கண்ணா. இந்தியாவில் பெங்களூரைச் சேர்ந்தவர். தற்போதும் உயிரோடு இருக்கிறார். அசல் காந்தி போலவே காட்சி தருகிறார். மகாத்மா போலவே மூக்குக் கண்ணாடி, கதர் ஆடை அணிகிறார். மக்கள் திரளும் இடங்களில் போஸ் கொடுத்து பணம் திரட்டுகிறார். எல்லாம் வயிற்றுக்காகத்தான். கையேந்தும் காந்தி.

பக்கம் 8 இல் சீர்டி பாபா என்று ஒருவரது படம் வெளியாகியுள்ளதல்லவா. அசப்பில் முன்பிருந்த சீரடி பாபாபோலவே இவர் இருக்கிறார். சீரடி பாபாதான் சாய்பாபாவின் குரு. இந்த போலி சீர்டி பாலா சீரடி பாபா போலவே தோற்றத்தை வைத்து பக்தர்களை ஏமாற்றி வருகிறார். அரிதாரம் பூசாமல் தோற்றத்தை வைத்தே ஏமாற்றுகிறார்கள். மேக்கப் செலவு மிச்சம்.



## மீனம்மா... மீனம்மா

↓ 'பாடுவோர் பாடினால் ஆடத்தோன்றும்.' வலை வீசுவோர் வீசினால் சிக்காத மீனும் சிக்கும். (அதற்கெல்லாம் ஒரு மச்சம் வேண்டும்.)தமிழ்நாட்டில் சென்னைக் கடலில் 22 அடி நீளமான ராட்சத மீன் ஒன்று சிக்கியது. மீனின் எடை: இரண்டு தொன். மீனின் அகலம் 3.5 அடி. உயரம் 3 அடி.

படகொன்றில் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்தனர் ஐந்து மீனவர்கள். பாத்திபன், செல்வராஜ், முத்து, சசி, பன்னீர் செல்வம் ஆகியோரே ஐந்து மீனவர்கள்.

கடற்கரையிலிருந்து 2 கிலோமீட்டர் தூரத்தில் வலையை விரித்தனர். திடீரென்று வலையுடன் சேர்த்து படகும் இழுக்கப்பட்டது. பயந்துபோன மீனவர்கள் படகை வேகமாக கரைக்கு இழுத்துவந்தனர். கரையில் வந்து பார்த்தபோதுதான் ராட்சத மீன் ஒன்று வலையில் சிக்கியிருப்பது தெரிந்தது. உடனடியாக கிரேன் ஒன்றின் உதவியுடன் தூக்கி லொறியில் ஏற்றினார்கள். ஆனால் மீன் இறந்துவிட்டது. அதன்பின்னர் ராயபுரம் கடற்கரையில் மீனை மக்களின் பார்வைக்கு வைத்தனர். ராட்சத மீனைக் காணக் கூட்டம் திரண்டது. சிறுவர்கள் மீனில் ஏறி இறங்கி விளையாடினார்கள். மீனம்மா... மீனம்மா ராட்சத மீனம்மா!



## ஒரே நாளில் டும் டும்! ஒரே நாளில் குவாகுவா!



← இந்தியாவில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த இரட்டையர்களான ராமதாஸ், இலட்சுமணகுமார் ஆகியோருக்கு ஒரு நல்ல ஆசை. இரட்டையர்களான பெண்களைத்தான் திருமணம் செய்ய வேண்டும் என்பதுதான் அந்த ஆசை.

மணமகள்களை தேடினார்கள். தேடுதல் வெற்றி. லதா,லதிகா என்ற இரட்டைச் சோதரிகளை மணந்தனர். கடந்த ஆண்டு திருமணம் நடந்தது. இரு தம்பதிகளுக்கும் ஒரேராசி. ஒரே நட்சத்திரம். மிதுன ராசி. விசாக நட்சத்திரம். இச்செய்தி கடந்த வருடம் முரசில் வெளியாகி இருந்தது நினைவிருக்கலாம்.

இப்போது மற்றொரு அதிசயம் நடந்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் 11ம் திகதி இந்த இரட்டைத் தம்பதிகளுக்கு ஒரே நாளில் குழந்தை பிறந்துள்ளது. லதாவுக்கு காலை ஆறரை மணிக்கும், லதிகாவுக்கு பிற்பகல் மூன்றரை மணிக்கும் குழந்தை பிறந்தது. ஒன்று பெண் குழந்தை. மற்றொன்று ஆண் குழந்தை. இதில் என்ன அபூர்வ ஒற்றுமை தெரியுமா? இரண்டு குழந்தைகளின் நட்சத்திரமும் ஒன்றுதான்! அது மட்டுமல்ல குழந்தைகள் பிறந்த அதே நாளில்தான் கடந்த ஆண்டு திருமண நிச்சயார்த்தம் நடந்தது. இன்னமும் இவர்கள் வாழ்க்கையில் என்னென்ன அதிசயங்கள் நடக்குமோ?



படிப்பகம்

www.padippakam.com

# கமலின் மகள் பாடுகிறார்

கமலஹாசனுக்கு இரண்டே இரண்டு பிள்ளைகள். இரண்டும் பெண் குழந்தைகள். முதல் பிள்ளையின் பெயர் சுருதி. வயது பதினொன்று.

'தேவர் மகன்' படத்தில் சிவாஜியுடன் ஒரு பாடலைப் பாடியிருந்தார் சுருதி. 'போற்றிப் பாடடி பெண்ணே, தேவர் காலடி மண்ணே....' என்ற பாடல்தான் அது.

அஜித்குமார்- மகேஸ்வரி ஜோடியாக நடிக்கும் படம் உல்லாசம். இளையராஜாவின் மகன் கார்த்திக்ராஜா இசையமைக்கிறார். 'உல்லாசம்' படத்திற்காக கமலஹாசன், இளையராஜா, இளையராஜாவின் மகள் பவதாரிணி ஆகியோர் பின்னணி பாடியுள்ளனர். இப்போது கமலஹாசனின் மகள் சுருதியும் ஒரு பாடலைப் பாடியுள்ளார்.

'ஜாலி ஜாலி லைப், இட்ஸ் ப்ரிலி ப்ரிலி லைப், வாலிபம் வாழச் சொல்லும் சாலையோரம் ஊர்வலம், வாழ்க்கையே இன்பலோகம், எல்லாம் மாயஜாலம்...' என்று தொடரும் பாடலைத்தான் சுருதி பாடியிருக்கிறார். சுருதியுடன் இணைந்து பாடியிருப்பவர் பிரபுதேவா.

'உல்லாசம்' படத்தில் விக்ரம், எஸ்.பி.பாலசுப்பிரமணியம், ரகுவரன், ஸ்ரீவித்யா, இந்து அஜய் ரத்தினம், பாலாசிங் ஆகியோர் நடிக்கின்றனர்.

அமிதாப்பச்சனின் தயாரிப்பான 'உல்லாசம்' படத்தின் சென்னை விநியோக உரிமையை கமலஹாசன் வாங்கியுள்ளார்.

# எங்கே அந்தக் காதலன்? தேடுகிறார் மோகினி

'சேரன் சோழன் பாண்டியன்' படத்தில் நடித்துவருகிறார் மோகினி. நல்ல உடல்கட்டு இருந்தும், அழகு இருந்தும் போதிய வாய்ப்பு இல்லாமல் இருப்பவர்களில் ஒருவர் மோகினி. (முகப்பைப் பாருங்கள், மோகினியிடம் ஏதுகுறை?)

சினிமாவில் ஒரு புளியங்கொம்பைப் பிடித்தால்தான் முன்னேறலாம். மோகினியும் புளியங்கொப்பைப் பிடித்திருப்பார். இடையிலே ஏற்பட்ட காதலால் அந்த முயற்சியில் ஈடுபடாமல் சறுக்கி விட்டார்.

மோகினியுடன் நடித்த இளம் நடிகர் ஒருவருக்கும் மோகினிக்கும் காதல் மலர்ந்தது. இருவரும் ஒருவர்மீது ஒருவர் பைத்தியமாக இருந்தார்களாம்.

குறிப்பிட்ட நடிகரின் காதலை மலையாக நம்பிய மோகினி அவருக்கு மட்டுமே உண்மையாக இருக்க விரும்பினாராம். அதனால்தான் ஏனைய பெரிய ஹீரோக்கள், பெரும் இயக்குநர்கள் சிலர் விடுத்த அன்பான அழைப்புக்களைத் தட்டிவிட்டாராம். அதனால் கோபமடைந்த இயக்குநர்கள் மோகினிக்கு வாய்ப்புக்கள் கொடுக்காமல் ஒதுக்கிவிட்டார்கள்.

பாவம் மோகினி, குறிப்பிட்ட நடிகரும் மோகினிக்கு அல்வா கொடுத்துவிட்டு நழுவிவிட்டார். நடிகரின் மார்க்கெட்டும் டல்லாகிவிட்டது.

காதலர் வருவார், கைகொடுப்பார் என்று காத்திருந்து தேடிக்கொண்டிருந்தார் மோகினி. காதலர் வந்தபாடில்லை.

மனதைத் தேற்றிக் கொண்டு மறுபடி வாய்ப்புத் தேட ஆரம்பித்தார். மறுத்த அழைப்புக்களை ஏற்க முன்வந்தார். கவர்ச்சிக்கும் பச்சைக் கொடி காட்டினார். ஆனாலும் காலம் கடந்த ஞானம்.

மோகினி மறுபிரவேசம் செய்தபோது புது நடிகைகள் பலர் எந்தத் தியாகத்துக்கும் துணிந்த நிலையில் தமிழ் சினிமாவில் இடம் பிடித்துவிட்டனர்.

எப்படியோ சில இயக்குநர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு கைவசம் சில படங்களைத் தேடிவைத்திருக்கிறார் மோகினி.

தன் முன்னாள் காதலரை நேரில் நாலுவார்த்தை கேட்க தேடிக்கொண்டிருக்கிறார் மோகினி.

# புதுமுகம் சோனா

'மல்லிகைக்கு மருதாணி' படத்தில் புதுமுகமாக அறிமுகமாகிறார் சோனா. புதுமுகம் என்றாலும் படவுலக சமாச்சாரங்கள் தெரிந்தவராக நடந்து கொள்கிறாராம்.

கதாநாயகன் விக்னேஷ். அவர் புது முகங்களுக்கு பயிற்சி கொடுப்பதில் கெட்டிக்காரர். சோனாவை சுற்றி சுற்றி வருகிறார் விக்னேஷ். சோனாவும் ஹீரோவின் மனம் அறிந்து ஃப்ரியாகப் பழகுகிறாராம்.

# மீனா போட்ட

'தொட்டாச்சிணுங்கி' படத்தை இயக்கியவர் புதிய படம் சொர்ணமுகி.

முதலில் மீனாதான் பிரகாஷ்ராஜுடன் ஜோ
இப்போது மீனா அவுட். தேவயாணி நடிக்கிற

காரணம் என்ன? இயக்குநர் அதியமான
முதல்நாள் படப்பிடிப்புக்குச் சென்ற மீனா
சாக்கில் கையை இசகு பிசகாக நீட்டிவிட்டாரா
மீனாவின் உதட்டைப் பற்றியும் ஜொள் ஒழுக வி
போட்டுவிட்டு நடையைக் கட்டிவிட்டார் மீனா

அதன்பின்னர்தான் தேவயாணியை
தொட்டாச்சிணுங்கி படத்தில் தேவயாணியி
உரித்து கவர்ச்சி காட்ட வைத்தவர் அதிய
அறிமுகம் செய்த நன்றியை மறக்காத தேவயா

மீனாவைப் பற்றி மற்றொரு செய்தி மீனா
மெருகேறிக் கொண்டிருக்கிறது. நடிப்பும் மு
மொழுப்பைக் கண்டு நக்மாவே திகைத்து
நீங்களும்தானா?!



# "என்னைக் கடத்துங்கள்"

'பகைவன்' படத்தில் ரௌடி வாசுவாக நடிக்கிறார் சத்யராஜ். பிரபு என்ற பாத்திரத்தில் நடிக்கிறார் அஜித்குமார்.

சத்யராஜிடம் எப்படியோ தாஜா பண்ணி, பகமையான நினைவுகளை நினைவூட்டி வாய்ப்புப் பெற்றுவிட்டார் ரஞ்சிதா. பகைவனில் சத்யராஜின் ஜோடி ரஞ்சிதா. அஜித் ஜோடியாக புதுமுகம் அஞ்சலா நடிக்கிறார்.

மன்சூர் அலிகான் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார், இயக்குநர் மனோபாலா, நாகேஷ், அஜய் ரத்தினம், விவேக், டெல்லி கணேஷ், சுமித்ரா, பாபு ஆண்டனி ஆகியோரும் நடிக்கின்றனர்.

பகைவனில் பிணியாக நடித்துக்கொண்டிருக்கும் அஜித்குமார் நிருபர்களிடம் சொன்னது இது:

"என்னை யாராவது தீவிரவாதி கடத்திக்கொண்டு போய் 10 நாட்களுக்கு மறைத்து வைத்திருக்க மாட்டானா என்றிருக்கிறது. எத்தனை நாளைக்குத்தான் ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டிருப்பது? யார் தொந்தரவும் இல்லாமல் ஃப்ரியாக படுத்துக் கிடக்க வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்.

ஹீராவுக்குச் சொல்லி அனுப்பலாமே அஜித். அவரும் தீவிரவாதிதானே. யெஸ், காதல் தீவிரவாதி!




# மறுபடி முளைத்த

பார்த்திபன் நடித்த 'பாரதி கண்ணம்மா
ஓடிக்கொண்டிருக்கிறது. தற்போது வெளியாகியு
வெல்லும்' படமும் விறு விறுப்பாக ஓடத்
'அரவிந்தன்' படத்திலும் ஹீரோ சரத்குமாரை
கட்டுமளவுக்கு நடித்திருக்கிறார் என்கிறார்கள்.

'பாரதி கண்ணம்மா' பட வெற்றியால் கொல
கொண்டிருக்கும் பார்த்திபன் பழைய உறவையும் பு

நடிகை சங்கீதாவும் பார்த்திபனும் முன்னர் தீ
லவ் அடித்தது தெரிந்த சங்கதிதான்.

பார்த்திபனின் மனைவியும், முன்னாள் நடி
அழுது புரண்டு அக் காதலை கட்டாக்கி வை
தொடர் தோல்விகளால் சுருண்டிருந்த பார்த்திப
பின்னால் சுற்றுவதை நிறுத்தியிருந்தார்.

'பாரதி கண்ணம்மா' வெற்றிக்குப் பின்ன
லவ்வத் தொடங்கிவிட்டார் பார்த்திபன். நேரில் சந்தி
போனில் அளவளாவுகிறார்களாம். வீட்டுத் தொலை
செல்லூலர் போனில் காதல் மொழி பேசிக் கள

# அம்பிகா புராணம்

'பெரிய மனுஷன்' படத்தில் சத்யராஜ் மூலமாக வாய்ப்புப் பெற்றவர் அம்பிகா. 'பெரிய மனுஷன்' பட இயக்குநர் குரு தனபாலுக்கு என்ன மந்திரம் போட்டாரோ தெரியாது. அம்பிகா புராணம் பாடிக்கொண்டிருக்கிறார் குரு தனபால்.

குருதனபாலின் அடுத்தடுத்த படங்களிலும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் அம்பிகா. படமொன்றுக்கு கதை வசனம் எழுதும் ஐடியாவும் இருக்கிறதாம்.

# இந்தியன் வசூல்

வெளிநாடுகளில் திரையிடப்பட்ட படங்களில் அமோக வசூலாக 50 கோடிவரை அறுவடை செய்திருக்கிறது 'இந்தியன்'.

'இந்தியன்' படத்தின் பின்னர் தனது சம்பளத்தை உயர்த்தியுள்ளார் கமல். இனிமேல் நடிக்கும் படங்களில் தனது சம்பளமாக சென்னை நகர விநியோக உரிமை, கேரளா மாநில விநியோக உரிமை என்பவற்றுடன் வெளிநாடுகளின் விநியோக உரிமையையும். வாங்கப் போகிறாராம் கமல்.




# காதலி எப்படியிருக்க வேண்டும்

இளம் நங்கைகளின் இன்றைய நாயகன் அப்பாஸ். தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு அப்பாஸ் அளித்த பேட்டியில் இருந்து உருவியது இது.

**கே: அப்பாஸ் உங்களின் பயோடேட்டா?**

ப: முழுப்பெயர் மிர்ஸா அப்பாஸ் அலி. வயசு22. அப்பாவுக்கு துபாயில் வேலை. அம்மா இல்லத்தரசி. ஒரே தங்கை. சொந்த ஊர் பெங்களூர். படித்தது மும்பை. பி.ஏ. பட்டதாரி. 10வது படிக்கிறபோதே மொடலிங் போட்டியில் பங்கேற்றேன். ஜோராகப் பொய் சொல்வேன். நிறைய நண்பர்களும், நண்பிகளும் உண்டு.

**கே: 'காதல் தேசம்' வாய்ப்பு கைகூடியது எப்படி?**

ப: கதிர்சார் புண்ணியம். கடவுள் கருணை. பெற்றோர் ஆசீர்வாதம்.

**கே: திடுமென டீன் ஏஜ் கூட்டத்தின் கனவு நாயகனாகியுள்ளீர்கள்?**

ப: இதை இப்போதும் என்னால் நம்பமுடியவில்லை. ரசிகர்களின் அன்பில் நான் திக்குமுக்காடுகிறேன். நான் இதை நேசிக்கிறேன். நான் இதை அனுபவிக்கிறேன்.

**கே: கைவசம் எத்தனை படங்கள்?**

ப: மொத்தம் 15 படங்கள். எல்லாவற்றிலும் ரொமான்டிக் ஹீரோ.

**கே: பொழுது போக்குகள் என்னென்ன?**

ப: நேரம் கிடைப்பதில்லை. கிடைத்தால் ஜிம், நீச்சல், நண்பர்களுடன் அரட்டை. (குஷ்புவின் தம்பி அப்துல்லா நெருங்கிய தோஸ்த்) வேர்க்க விறுவிறுக்க டிஸ்கோ ஆட்டம்.

**கே: பிடித்த புத்தகங்கள்? பிடித்த உடை?**

ப: ஜூராஸிக் பார்க் மாதிரி சயின்ஸ்ஃபிக்ஷன் புத்தகங்கள். பிடித்த உடை கறுப்பு ஜீன்ஸ்.


**கே: தமிழ் பேசுவீங்களா?**

ப: கொஞ்சம் பேசுது! நம்ம டிரைவர் முருகன்தான் குரு.

**கே: காதல் பற்றி உங்கள் கருத்து? காதலி உண்டா? உங்களவள் எப்படி இருக்கவேண்டும்?**

ப: காதல் ஒரு சுகானுபவம். காதலியைத் தேடுகிறேன். என்னவள் அழகானவளாக, அன்பானவளாக, என்னைச் சீராட்டுபவளாக இருக்கவேண்டும். அப்படி ஒருத்தி கிடைத்து அப்பா அம்மா அறிந்து மிரண்டு நிஜம்தானா என்று கேட்டால் அடுத்த நிமிஷம் கால்கட்டு.

**இது முரசின் கேள்வி:** சங்கவியிடம் வசமாக மாட்டிக்கொண்டீர்கள் என்று சொல்கிறார்களே நிஜம்தானா அப்பாஸ்?!






படிப்பகம்

# சி னி வி சி ட்

## ...கும்பிடு

அதியமான். அவர் இயக்கும்
...யாக நடிப்பதாக இருந்தது.
...ர்.
...ன் கை கொஞ்சம் நீளம்.
...க்கு காட்சியை விளக்கும்
... இயக்குநர். அது மட்டுமா?
...ர்சித்தாராம். ஒரே கும்பிடு
...நாடினார் அதியமான்.
... கோழி உரித்ததுபோல
...ான். ஆனாலும் தன்னை
... நடிக்கச் சம்மதித்தாராம்.
...ன் இளமை மேலும் மேலும்
...னேற்றம். மீனாவின் மொழு
... போயிருக்கிறார். என்ன

## நடிகைகளின் தந்திரம்

முன்னர் அம்பிகா-ராதா சகோதரிகள் சொந்தமாக 'ஸ்ருடியோ' கட்டினார்கள். இப்போது ரம்பாவும் ஸ்ருடியோ கட்ட முடிவு செய்துள்ளாராம்.

குறிப்பிட்ட சகோதர நடிகைகள் சில அமைச்சர்களுடன் ராசியாக இருந்துதான் சம்பாதித்தார்கள். ரம்பாவுக்கும் அது தெரியுமாம். பெரும் புள்ளி ஒருவருக்கு குறிவைத்து வலை வீசியுள்ளாராம் ரம்பா.

வருமானவரித் துறையினரின் வேட்டை அதிகமாகி இருப்பதால் அரசியல்வாதிகள் பாடு கொண்டாட்டம். பல நடிகைகள் தூதுவிட்டுக் கொண்டிருக்கிறார்களாம். செல்வாக்குள்ள அரசியல் புள்ளிகளுடன் நெருக்கம் என்று தெரிந்தால் வருமானவரி தொல்லையில் இருந்து தப்பிக்கலாமாம்.

## மலையாளத்தில்

தமிழ், தெலுங்கு, கன்னட மொழிப்படங்களில் மட்டுமே நடித்தவர் ரோஜா. இப்போது முதன் முதலாக மலையாளப் படம் ஒன்றில் நடிக்கப்போகிறார். படத்தின் பெயர் 'கங்கோதரி'.



முரளி-சுவாதி
படம்: கண்டக்டர் மாப்பிள்ளை

"தென்றல் தொட்டு
முல்லை மொட்டு
வாடிப் போகுமா?
கைகள் பட்டு
காதல் சிட்டு
ஓடிப் போகுமா?
பருவம் பார்த்து பழகிவந்தால்
கசந்து போகுமா?
பார்த்து ரசித்த காட்சியெல்லாம்
கலைந்து போகுமா?"



சந்தோஷ்ராஜ்-விசித்ரா
படம்: விடிவெள்ளி

## வருகிறார் 'சின்னராஜா'

பிரபு-நக்மா ஜோடியாக நடித்த படம் 'பெரியதம்பி'. அதனைத் தயாரித்த பட நிறுவனம் காயத்திரி பிலிம்ஸ். அந்தப் பட நிறுவனம் அடுத்துத் தயாரிக்கும் படம்: 'சின்னராஜா'

கதாநாயகனாக நடிக்கிறார் கார்த்திக். ஜோடியாக நடிப்பவர் பூஜாகுமார். அமெரிக்காவில் இருந்து இறக்குமதியான அழகி. ஏற்கனவே 'காதல் ரோஜாவே' படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

விஜயகுமார், மணிவண்ணன், வடிவேலு ஆகியோரும் நடிக்கின்றனர்.

'பெரியதம்பி' படத்தை இயக்கிய சித்ரா லட்சுமணன்தான் இப் படத்தையும் இயக்குகிறார்.

இசை தேவா, பாடல்கள் வைரமுத்து, சித்ரா ராமு, சித்ரா லட்சுமணன் இணைந்து தயாரிக்கின்றனர். படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

## நக்மாவின் வாரிசு

நக்மாவின் தங்கை ரோசிணி கார்த்திக் படம் உட்பட பல படங்களில் நடித்து வருகிறார். இப்போது நக்மாவின் கடைசித் தங்கையும் நடிக்க வந்திருக்கிறார். குஞ்சுமோன் தயாரிப்பில் அவரது மகன் எபி நடிக்கும் கோடீஸ்வரன் படத்தில் கதாநாயகியாக நடிக்கப் போகிறார்.

## முகப்பில்

விஜய்
படம்:– லவ்டுடே

மோகினி
படம்:– சேரன் சோழன் பாண்டியன்

## ...தல்

...டுஜோராக
...வாய்மையே
...கியுள்ளது.
...பின் ஒரம்
...க்கிவிட்டுக்
...ந்துள்ளார்.
...ரகசியமாக
...ான சீதா
...தார். பல
...ங்கீதாவின்
...கீதாவுடன்
...யாதபோது
... பேசாமல்
...ர்களாம்.

## வளரும் 'தேவதை'

நாசர் இயக்கும் இரண்டாவதுபடம் 'தேவதை'. துபாயில் எடுக்கப்படும் முதலாவது தமிழ்ப் படம். இதுவரை எடுக்கப்பட்ட காட்சிகள் வெகு சிறப்பாக வந்திருக்கிறதாம்.

பலரும் பாராட்டுகிறார்களாம். "'அவதாரம்' படத்தின் மூலம் 'கலைப்பட இயக்குநர்' என்று ஏற்பட்ட பெயரை 'தேவதை' மூலம் போக்கிவிடுங்கள்" என்கிறார்களாம். அதனைக் கேட்டு நாசர் நொந்து போனார்.

"ஒரு நல்ல படம் எடுத்தது உலக மகா குற்றமா? இப்படிச் சொல்கிறார்களே?" என்று புலம்புகிறார்.

'தேவதை' படத்தில் வினித், நாசர், தலைவாசல் விஜய் மூவரும் பிரதான பாத்திரங்களில் நடிக்கின்றனர். கதாநாயகி புதுமுகம் கீர்த்தி. அவர்தான் 'தேவதை'.

## வில்லியாகும் பாடகி

பின்னணிப் பாடகர்களில் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பிரபல நடிகராகவும் கலக்கிக் கொண்டிருக்கிறார். விரைவில் பிரபல பின்னணிப் பாடகி ஒருவரும் கலக்க வருகிறார். எல்.ஆர்.ஈஸ்வரிதான் அந்தப் பாடகி. துள்ளிசைப் பாடல்களை காதல் ரசம் சொட்டப் பாடியபடி துள்ளியாடுபவர் எல்.ஆர். ஈஸ்வரி. அதனால் கவர்ச்சியான பாடகி என்றும் பெயர் எடுத்தவர்.

கஸ்தூரிராஜா இயக்கும் படமொன்றில் வில்லியாக நடிக்க சம்மதித்துள்ளார் எல்.ஆர். ஈஸ்வரி. துணிச்சலான வில்லிதான்.

## மினி சினி

* சுப்பர் ஸ்டார் ரஜினி நடித்து தமிழ்ப்புத்தாண்டு தினத்தில் வரவிருக்கும் 'அருணாச்சலம்' படத்தினை கர்நாடக மாநிலத்தில் வெளியிடும் உரிமையை வாங்கியிருப்பவர் யார் தெரியுமா? சுப்பர் ஆக்டர் கமல்.

* பிரபு-மந்த்ரா நடிக்கும் 'தேடினேன் வந்தது' படத்தில் இடம்பெறும் இரண்டு பாடல் காட்சிகள் நெதர்லாந்து நாட்டின் முக்கிய நகரங்களில் படமாக்கப்படவுள்ளன.

* இந்தியில் கமல் நடிக்கும் 'அவ்வை சண்முகி' படத்தில் கமலுக்கு ஜோடியாக முதலில் ஜூஹி சாவ்லா நடிப்பதாக இருந்தது. இப்போது இவருக்குப் பதிலாக தபு ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார்.

* 'இந்தியன்' படத்தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம் தமிழில் முதன் முறையாக இயக்கும் படத்தில் அஜித்குமார் கதாநாயகனாக நடிக்கவிருக்கிறார். கதாநாயகியாக நடிப்பவர் சௌந்தர்யா.

* 'தாயகம்' பட இயக்குநர் ஏ.ஆர். ரமேஷ் தற்போது 'தினமும் என்னைக் கவனி','இனி எல்லாம் சுகமே' ஆகிய படங்களை இயக்கி வருகிறார். இதை அடுத்து இவர் கன்னடப் படமொன்றை இயக்கவுள்ளார்.

* ஜாக்கி ஷெரப், கோவிந்தா, சல்மான்கான் ஆகிய மூவரும் இணைந்து நடிக்கும் இந்திப்படத்திற்கு 'ராஜூ ராஜாராம்' என்று பெயரிடப் பட்டுள்ளது. இப்படத்தை ஜாக்கி ஷெரப் தயாரிக்கிறார்.

* 'கல்கி' படத்தில் கே. பாலச்சந்தரால் அறிமுகமானவர் தமிழக தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் பாத்திமா பாபு. இவர் 'பாசமுள்ள பாண்டியரே' படத்தில் முக்கிய வேடமொன்றில் நடிக்கிறார்.


* பாரதிராஜாவினால் 'கடலோரக் கவிதைகள்' படத்தில் அறிமுகமான ராஜா, இப்போது சில படங்களில் நடித்து வருகிறார். இந்த வருட இறுதிக்குள் இவர் சொந்தப்படம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளார்.

* 'காதல் தேசம்' படத்தினால் அப்பாசுக்குத் தமிழில் பல படவாய்ப்புக்கள் குவிந்ததைப் போன்று, 'காதல் தேசத்'தின் தெலுங்கு வெற்றியால் வினித்திற்குப் பல தெலுங்குப் படங்களில் நடிக்கும் வாய்ப்புக்கு கிடைத்துள்ளது.

* பாண்டியராஜன் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை முக்தா வி. சீனிவாசன் தயாரித்து இயக்கவுள்ளார். 'கதாநாயகன்', 'வாய்க்கொழுப்பு' போன்ற முக்தா சீனிவாசனின் படங்களில் பாண்டியராஜன் ஏற்கனவே நடித்திருக்கிறார்.



பிரபு-சாக்ஷி
படம்: மாப்பிள்ளைக்கவுண்டர்



...கவி
...ம் சுகமே

## டும் டும் கல்யாணம்

நடிகர் விக்னேசும் கல்லூரி மாணவி உமாவும் கல்யாணம் செய்து கொண்டனர்.

விக்னேஷ் நடித்த படத்தைப் பார்த்துவிட்டு நேரில் சந்தித்துப் பாராட்டினாராம் உமா. பின்னர் போன்மூலம் அளவளாவுதல் தொடர்ந்ததாம். அதன் பின்னர் நெருக்கம் இடைவெளியைக் குறைத்தது. உருக்கம் எக்கச்சக்கமாகியதால் கல்யாணத்தில் முடிந்திருக்கிறதாம்.

"நான் தனியாக இருக்கிறேன். படப்பிடிப்பு முடிந்து களைத்துப் போய் வீடு திரும்பும்போது சாப்பாடு பரிமாற, வாய்க்கு ருசியாக சமைத்துப்போட யாருமில்லை. அதனால் பல நாள் பட்டினி கிடந்திருக்கிறேன். அதுதான் திடீர் கல்யாணம்" என்கிறார் விக்னேஷ். அப்படியானால் வயிற்றுக்காக மட்டும்தான் கல்யாணமா விக்னேஷ். இந்த டுப்தானே வேண்டாங்கிறது!

www.padippakam.com

# நடையா இது நடையா?

## உடல் மெலிந்தது போல இருக்குது!

இளமைப் பருவத்திலுள்ள பெண்கள் மட்டும் தங்கள் உடலழகையும் உடலமைப்பையும் பேணுவதில் நாட்டம் காட்டுகின்றனர். பருவப்பெண்கள் தங்களுக்கேற்ற ஓர் ஆடவனைத் தேர்ந்தெடுப்பதற்காகவே தங்களை அழகு படுத்திக்கொள்ள வேண்டும் என்று கருதுகிறார்கள்.

பலர் குடும்பவாழ்க்கையில் ஈடுபட்டதும் தங்கள் உடலமைப்பையும் உடலழகையும் பேணுவதை விட்டு விடுகிறார்கள். குழந்தை ஒன்றுக்குத் தாயானதும், தங்களுடைய காலம் கடந்துவிட்டது என்று உடலைப் பேணுவதை விட்டுவிடுகிறார்கள்.



தங்கள் உடம்பைப் பேணாதவர்களின் அங்கங்களில் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் சதைபிடித்து அவலட்சணமாகி விடுகிறார்கள்.

உடலமைப்பையும் உடலழகையும் பேணுவதற்கு உடற்பயிற்சி இன்றியமையாதது. உடற்பயிற்சி என்றவுடன், "ஐயையோ நம்மாலாகாது!" என்று ஒதுங்கிவிடுவோர்தான் அதிகமாக உள்ளனர். உடற்பயிற்சிக்கு உங்கள் உடலை வருத்தாமலே சில எளிய முறைகளை ஆய்வாளர்கள் கண்டுள்ளனர்.

உடற்பயிற்சி செய்வோரின் உடலுக்கு வேண்டிய பிராணவாயு செறிவுடைய இரத்தத்தை நமது இருதயம் வேகமாக அனுப்புகிறது. உடம்பின் சகல பாகங்களுக்கும் இரத்தோட்டம் சீராகச் சென்றால் ஊளைச் சதை பிடிக்காது. கொழுப்பும் சேராது. அவயவங்களும் அளவோடும் அழகோடும் விளங்கும்.

### நடப்பதற்குச் சில குறிப்புக்கள்

* போக்குவரத்து அதிகமுள்ள பாதைகளைத் தவிர்ப்பது நல்லது. இதனால்
- நெரிசலைத் தவிர்க்கலாம்.
- வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையைச் சுவாசிப்பதைத் தவிர்க்கலாம்.
* நடப்பதற்கு முன்னும் பின்னும் தண்ணீர் போதுமான அளவு பருகலாம்.
* உங்களுக்கேற்ற துணையை-சிநேகிதியை அல்லது ஒரு குழுவையே தேர்ந்து சேர்த்துக்கொள்ளலாம்.
* நடப்பது உங்களுக்குக் களைப்பூட்டாமல் களிப்பூட்டுவதாக அமையட்டும்.

தேகாப்பியாசமற்றவர்களுக்கு பெரும்பாலும் இடுப்புப் பிடிப்பு, முதுகுழைச்சல், கைகால் நோவு போன்றவற்றுடன் மூட்டுவாதமும் வந்து விடுகிறது. இவற்றுக்கெல்லாம் மருத்துவர்களிடம் போகாமல் தத்தமது வீட்டிலேயே முன்தடுப்பு முறைகளைக் கையாளலாம்.

### அன்றாடம் பயிற்சி

அன்றாட வீட்டு வேலைகளில் ஈடுபடுவோர் ஓரளவு தமது தேவைக்கேற்றளவு தேகப்பயிற்சியைப் பெற்று விடுகின்றனர்.

அநேகமாக கிராமங்களிலும் புறநகர்ப் பகுதிகளிலும் வாழும் பெண்களுக்கு இத்தகைய சந்தர்ப்பம் கிட்டுகிறது. ஆனால் நகரங்களில்- ஓரளவு வசதிகளோடு- வீட்டு வேலைகளுக்கு உதவும் வேலைக்காரிகளையோ உறவினர்களையோ வைத்திருப்போருக்கு இது சாத்தியமில்லை. இத்தகையோரின் உடம்பு ஊதவே செய்யும்.

உடலையும் வனப்பையும் பேணிப்பாதுகாப்பதற்கு அழகு நிலையங்களைத் தேடி அலைய வேண்டிய அவசியமில்லை. அன்றாடம் ஓர் அரை மணி நேரத்தை ஒதுக்கினால் போதும். தங்கள் இல்லங்களிலோ, தாம் வாழும் பகுதிகளிலுள்ள தெருக்களிலோ சற்று வேகமாக உலாவினால் போதும். குனிந்து நிமிர்ந்து உங்கள் பொன்னான உடலை வருத்தவும் வேண்டியதில்லை.

வெறும் கால் நடையின் மூலமே போதுமான உடல் வளத்தைப் பாதுகாக்கலாம்; சோம்பல் நீங்கி உற்சாகமும், வாழ்க்கையில் மகிழ்ச்சியும் பெறலாம்.

யோகாப்பியாசம், உடற்பயிற்சி போன்ற 'பெரிய வார்த்தைகளே' வேண்டாம். வெறுமனே நடந்தாலே போதுமானது.

உடல் பருத்தவர்களானாலும், உடல் மெலிந்தவர்களானாலும் நடைமூலம் தங்கள் உடலழகையும் உடலமைப்பையும் பெறுவதுடன் உள்ளத்துக்கும் அமைதியையும் பெற முடியும்.

### நடையால் சிறுக்கும் இடை

தினசரி இரண்டு மைல் நடப்பவர்களுக்கு இருதய நோய் பெரும்பாலும் வருவதில்லை. அமெரிக்காவிலுள்ள ஸ்ரான்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்கள், 20 வயதுக்கு மேற்பட்ட 17,000 பேரைவைத்து ஆராய்ந்துள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வாரமும் 9 மைல்கள் நடந்துள்ளனர். இவர்கள் எவருக்கும் இருதய நோய் ஏற்படவேயில்லை.

ஒவ்வொரு நாளும் நடப்பவர்களின் எலும்புகள் உறுதியடைகின்றன. தசைப் பிடிப்புகளோ நரம்புச் சுளுக்குகளோ ஏற்படுவதில்லை. 35 வயதில் ஒருவருடைய எலும்புகளின் செறிமானம் குறைய ஆரம்பித்துவிடுகிறது. வாஷிங்டன் பல்கலைக்கழக ஆய்வாளர்களின் ஆராய்ச்சியின்படி, ஒரு பெண் தினசரி நடந்து அல்லது படிக்கட்டுகளில் ஏறி இறங்கி வருவாளானால் அவளுடைய எலும்பு மச்சை 5 வீதத்தால் அதிகரிக்கிறது. வயதானவர்கள் மேலும் பயனடைய வாய்ப்புண்டு. அவர்களுடைய அவயவங்கள் சுலபமாக இயங்க வசதி கிடைக்கிறது.

அழகு மெருகேறுவதைப் பொறுத்த மட்டில்- தினசரி நடப்பவரின் தொடைகள் வலுவடைந்து அவற்றின் அமைப்பும் கவர்ச்சிகரமாகிறது. இடையின் அளவு சிறுத்து புட்டமும் கெண்டைக்காலும் அழகாக உருமாறுகின்றன.

# குறைப் பிரசவம் ஏன்? எதனால்?

## டாக்டர் ஷீலா சத்யகுமார்

**கேள்வி: குறைப்பிரசவம் எதனால் ஏற்படுகின்றது?**

சிலருக்கு எட்டு மாதத்திலேயே திடீரென்று நஞ்சுக்கொடி பிரிவதனாலோ, கடுமையான வேலை செய்வதனாலோ, ஹொர்மோனில் நிதானமிழத்தல் ஏற்படுவதாலுலோ வலி வந்து அல்லது இரத்தம் வந்து குழந்தை பிறக்கும். ஆனால் இந்தக் குழந்தை இயல்பான எடையோடு இருக்காது. 2 கிலோவிற்கும் குறைவாக இருக்கும் பட்சத்தில் குழந்தையைப் பாதுகாத்து 'இன்குபேட்டர்' யூனிட்டில் சில நாட்கள் வைத்திருந்துவிட்டு அதன் பிறகு தாயிடம் ஒப்படைப்போம்.

**பிரசவத்திற்குப் பிறகு...**

பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தையைப் பார்க்கும்போது பெற்றோர் உள்ளம் பூரிப்பில் மகிழ்ச்சியடைகிறது. குழந்தையை ஆரோக்கியமாக வளர்ப்பது ஒரு தனிக்கலை. அதை ஒவ்வொரு தாயும் அறிந்து கொள்வது அவசியம். குழந்தை வயிற்றில் இருக்கும் போது எப்படி உணவு சாப்பிட்டார்களோ அப்படிக் குழந்தை பிறந்த பிறகும் சத்தான உணவுகளை உட்கொள்ளவேண்டும். அப்போதுதான் குழந்தைக்குப் போதுமான அளவு தாய்ப்பால் கிடைக்கும்.

குழந்தையை எப்படிப் பராமரிப்பது? குழந்தையை எப்படித் தூக்குவது? எப்படிப் பால் கொடுப்பது? போன்ற விபரங்களையெல்லாம் டாக்டர்களே அருகிலிருந்து சொல்லிக்கொடுத்து விடுவார்கள். குழந்தை பிறந்த முதல் வாரத்திலேயே உட்கார வைத்துப் பால் கொடுப்பது தாய்க்குக் கஷ்டமாக இருக்கும். படுத்துக் கொண்டே பால் கொடுப்பார்கள். அது மிகவும் தவறு. அப்படிப் பால் கொடுக்கும் போது சில குழந்தைகளுக்குப் புரையேறி இறப்பதும் உண்டு. இதைக் 'கிரெடில் டெத்' என்று சொல்வார்கள்.

பால் கொடுக்க ஆரம்பிக்கும்போது முதலில் பால் நிறைய இருக்காது. ஒரு மாதிரி மஞ்சளாக, தண்ணீர் மாதிரி வரும். ஆனால் அதைப் பிழிந்துவிட்டுத்தான் பால் கொடுக்க வேண்டும் என்று சொல்வார்கள். அது தவறு. அதில் தான் வியாதியை எதிர்க்கும் சக்தி உள்ளது. குழந்தைக்கு ஆரம்ப காலத்தில் வரக்கூடிய வியாதியைத் தடுக்கும் சக்தி அதில் உண்டு. எனவே முதலில் வருகின்ற இந்த நீரைக் குழந்தைகளுக்குத் தாய்மார்கள் கொடுக்க வேண்டியது அவசியம். முதல் மாதம் முடியும் போது 'செக்-அப்' செய்து கொள்ள வேண்டும்.

தாயின் உடம்பு, குழந்தையின் எடை எல்லாம் போதுமான அளவிற்கு இருக்கிறதா, எடை கூடியிருக்கிறதா என்று செக் பண்ணுவார்கள். அப்படி இல்லையென்றால், குழந்தைக்குத் தாய்ப்பால் சரியாகக் கிடைக்கவில்லை என்பதால் அதற்கு வேண்டிய ஆலோசனை கூறுவார்கள். இரண்டு, மூன்று மாதங்களுக்குள் அடுத்த கருத்தரிப்பு நிகழ விட்டுவிடக்கூடாது. இரண்டாவது குழந்தையை உடனடியாகச் சுமக்கின்ற சக்தி இருக்காது. முதல் குழந்தையைக் கவனிக்கவும் முடியாது.

எனவே அவர்கள் கருத்தடை மாத்திரைகளை உபயோகப்படுத்த வேண்டும். எந்த மாத்திரையைப் பயன்படுத்தலாம் என்று டாக்டர்களைக் கேட்கலாம்.



**சில 'டிப்ஸ்':**

- பிறந்த 2,3 மாதங்கள் குழந்தை பால் குடித்துவிட்டு, எப்போதும் தூங்கிக் கொண்டே இருக்கும். குழந்தை அழுதால், அது பசியினால் அழுகிறதா, வயிற்று வலியினால் அழுகிறதா, என்பதை உணர்ந்து தாய் செயற்பட வேண்டும்.
- குழந்தைக்குத் தாயின் அரவணைப்பு மிகவும் தேவையானது. அதனால் தாய் குழந்தையை அன்போடு அரவணைத்துப் பாலூட்டி வளர்க்க வேண்டும்.
- குழந்தைக்குப் பாலூட்டும்போது உட்கார்ந்தபடி தான் பால் கொடுக்க வேண்டும். படுத்துக்கொண்டு கொடுத்தால் குழந்தைக்கு மூச்சு முட்ட நேரிடும். எனவே தாய் உட்கார்ந்து பாலூட்டி, தோளில் போட்டு, ஏப்பம்விட்டபின்தான் தொட்டிலில் போடவேண்டும்.
- முதல் 3 மாதம் வரை தாய்ப்பால் மட்டுமே குழந்தைக்குப் போதுமானது. 4வது மாதம் முதல் குழந்தைக்குக் கெட்டி ஆகாரம் கொடுக்கலாம். கெட்டி ஆகாரம் கொடுக்கும்போது சுத்தமான தண்ணீர் ஒரு முறை குடிக்கக் கொடுக்க வேண்டும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? மன்னார் வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | திருமதி யூடித் ஞானராஜ், 68, பெட்டா, மன்னார். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BI

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

கையொப்பம்:.............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 29-03-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# சமைப்போம் சுவைப்போம்

**தொகுத்துத் தருவது சுகந்தினி**

## வெஜிடபிள் சூப்

**தேவையானவை:**

கரட் – 500 கிராம்
போஞ்சி – 500 கிராம்
உருளைக்கிழங்கு – 500 கிராம்
தக்காளி – 500 கிராம்
பீட்ரூட் – 500 கிராம்
கோவா – 200 கிராம்
வெங்காயம் – 100 கிராம்
பச்சைமிளகாய் – 100 கிராம்
பூண்டு – 10 பல்லு
இஞ்சி – 1 சிறிய துண்டு
மிளகு – சிறிதளவு
சீரகம் – சிறிதளவு.

**செய்முறை:**

காய்கறிகளை நன்றாகக் கழுவி, பொடிதாக அரிந்து தண்ணீரில் வேகவைக்க வேண்டும். வெங்காயம், பச்சை மிளகாயை நறுக்கி எண்ணெயில் வதக்கி காய்கறிகளுடன் சேர்க்கவும். பின் அதனை இறக்கி ஆறவைத்து மிக்சியில் அரைத்துப் பிறகு ஒரு லீட்டர் தண்ணீர் ஊற்றி உப்பு, மிளகு, சீரகம் கலந்து மீண்டும் கொதிக்க வைக்கவும். பின்னர் இறக்கிப் பரிமாறவும். இது நோயாளிகளுக்கும், குழந்தைகளுக்கும் மிகவும் நல்லது.

# 'போஸ்' கொடுப்பது எப்படி?

கமெரா முன்னால் போஸ் கொடுப்பது ஒரு கலை. இயற்கையாகவே அழகாக இருக்கும் ஒருவர் கமெராவைக் கண்டவுடன் சற்றுத் திணறி பதட்டமடைந்து புகைப்படத்தில் வருவார். வீடியோ, கமெரா இல்லாமல் சின்ன நிகழ்ச்சிகள் கூட நடைபெறாத இந்தக் காலத்தில் வேர்த்து, விறுவிறுத்துக் கோணல்மாணலாகப் படத்தில் இருந்தால் நன்றாகவா இருக்கும்?

படம் எடுப்பதற்கு முன்பு உங்களைச் சற்று அமைதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

முகத்தை ஒற்றி வியர்வை இல்லாது துடைத்து விடுங்கள். வேண்டுமானால்



கைக் கண்ணாடி ஒன்று வைத்துக் கொள்ளுங்கள்.

கமெராவை நேராக முறைத்துப் பார்க்காதீர்கள். அமைதியான புன்னகை எடுப்பாக இருக்கும்.

சற்றுத் தலையை நிமிர்த்தி, முதுகு நேராக, கைகால்களைப் பாங்காக வைத்துக் கொண்டாலே போதும்.

ஆங்கில வார்த்தையான 'சீஸ்' என்று சொல்லும்போது, உதடு எவ்வாறு விரிகிறதோ? அதுபோல உதட்டை விரித்துப் போஸ் கொடுங்கள். அழகான புன்னகையுடன் கூடிய போஸ் கிடைக்கும்.

எடுக்கும் படங்களை முறையாக அல்பத்தில் வையுங்கள். மலரும் நினைவுகளாக இவை மகிழவைக்கும்.

# உதையோ உதை!



இது சினிமா சூட்டிங் அல்ல; நிஜக்காட்சி. சென்னை அண்ணாசாலையில் "அழகிய லைலா! டொட டொட டொய்ங்! இது அவளது ஸ்டைலா! டொட டொட டொய்ங்!" என்று கல்லூரி மாணவிகளைக் கிண்டல் செய்த ஒரு வாலிபரை, சாதாரண உடையில் மறைந்திருந்த கராட்டி பயிற்சி பெற்ற பெண் பொலிசார் நடுரோட்டில் அடித்துத் துவைத்தெடுத்த காட்சிதான் இது. தமிழ் நாட்டில் கல்லூரிப் பெண்களை கிண்டல் செய்யும் ரோமியோக்களையும், பேருந்துகளில் பெண்களை உரசும் 'இடி– ராஜாக்'களையும் மடக்கிப்பிடிக்க தனியான பெண் பொலிஸ் படை அமைக்கப்பட்டுள்ளது. சுரிதார் அணிந்து பஸ்களிலும், பஸ் நிறுத்தங்களிலும் பெண் பொலிசார் நடமாடுகின்றனர்.

நூற்றுக்கணக்கான இடிராஜாக்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். நம் நாட்டிலும் அப்படிச் செய்தால் என்ன?

## பரிசு பெற்றவர்



முரசின் பட்டுச்சேலைப் பரிசுப்போட்டியில் வெற்றிபெற்ற அதிர்ஷ்டசாலிகளில் ஒருவர் இவர்தான்.
கமலேஸ்வரி ராமலிங்கம்
188/8 கொட்டா வீதி,
பொரல்லை, கொழும்பு–08


## தினமுரசு–அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு– அருள் ஜுவலர்ஸ் பரிசுக் கூப்பன் இல 03

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

## "தேர்"தல் சக்கரங்கள்

* தேர்தல்
புதிது புதிதாய்
வேடமிட்டு
'வேதம் ஓதப்'
புறப்படுகின்ற
புண்ணிய காலம்!

* அரசியல் வாதிகள்
வாமனராய்
வடிவெடுத்து,
வாக்குகளை யாசித்து
'பாட்'வாய்
'மந்திரி'யாய்
பேருரு எடுத்தவுடன்....
முதலாம் அடியை
எங்கள் முதுகிலேயே அளப்பவர்கள்!

* தேர்தல் பிரச்சாரம்
வாய்களால்
கடிபட்டுக் கொள்ளும்
நாய்களுக்கு
வார்த்தைகளால்
கடிபட்டுக் கொள்ளும்
வித்தையை
மேடை போட்டு
விளக்குகின்ற மேன்மை!

* வாக்காளர்கள்
தேர்தலுக்கு முன்....
முகவரிகளாய்
தேடப்பட்டு,
புதிய முகம்
பொருத்தப்பட்டு
புன்னகைப்பவர்கள்!
தேர்தலுக்குப் பின்....
பழைய முகத்தையும்
சேர்த்தே
தொலைத்துவிட்டு
பரிதவித்து நிற்கும்
பாவப் பட்டவர்கள்!

தருமலிங்கம்- நீர்கொழும்பு.

---

வானொலி கேட்டு
டிவி பார்த்து
பத்திரிகை வாசித்து
வாழ்க்கை
ஓடுது
ஏதோ ஒரு பாதையில்!
"
செய்திகளை
கேட்பதும்
படிப்பதும்
பார்ப்பதும்
பயந்து சாவதும்
வாழ்க்கையாகிப் போனது!
"
இன்பமோ
துன்பமோ
இதுதான்
வாழ்க்கையென்றான பின்,
நாளைகளைப் பற்றி
நான்
சிந்திப்பதே இல்லை!
"
சேவல் கூவி
காகம் கரைந்து
பக்ஷிகள் கிளிகளெல்லாம்
பறந்து போனபின்,
பாடசாலைக்குப்
போவதெல்லாம்
மறந்து போச்சு!
"
ஷெல்லடிச் சத்தத்தில்-உடல்
சில்லிட்டு எழுந்து
உறக்கத்தை
தொலைத்துவிட்டு
தூங்கி விழும்
எங்கள் வாழ்க்கை
பள்ளிக்குப் போய்
எதனை
புதிதாகப் படிக்கப் போகின்றது?
"
பயந்து
உத்தியோகம் பார்த்து
முதல்
மாதச் சம்பளத்தில்
உடைகள் வாங்க
கடைகள் ஏற
உயிர்மட்டும்
மிஞ்சிப் போதாது;
உடன் பிறப்புகளும்
மிஞ்ச வேண்டாமா?

எஸ்.பீ.எம். அலியார், பொத்துவில்-01.

---

## திசைகள் யாவும் இருளாக...

### தேன் கிண்ணம்

பெற்றுக் கொள்ளவே முடியாத
பொக்கிஷத்துக்காகத் தானா,
பல யுகங்கள் தாண்டும் வரை
பொங்கியெழுந்து கொண்டிருந்தேன்?
—o—
வாழ்க்கை இடைவழியில்
விபத்தில் விழுந்தாலும்
உன் நாமம் சிந்தே
உள்ளத்தில்
நிலைத்திருக்க
நல்ல பெயருடன்-நான்
வாழ்ந்துவிட்டுப் போகிறேன்!
—o—
கதையாகக்
காவியமாக இருந்திருந்தால்
திடீர்த் திருப்பங்களால்
துயர அத்தியாயங்களைத்
தீர்த்து வைத்திருக்கலாம்;
இது என் வாழ்க்கையாயிற்றே!
—o—
எனது அன்பைப்
பணயம் வைத்து
உனது வாழ்க்கை
உருவாக்கப்பட்டுள்ளது!
—o—
நீ அள்ளி வீசிய
ஏகாந்தத்தில்
என் மனது
எரிந்து போனது!
—o—
ஆசைகள் யாவும்
அம்மாவின் கூண்டுக்குள்
அடங்கி விட்டன!
—o—
உனை மறக்கத் துணிந்த
மன வைராக்கியத்தை
அலட்சியம் செய்துவிட்டு,
நினைவுகள்
மீண்டும் மீண்டும்
மறுஜென்மம் எடுக்கின்றன!
—o—
விதி என்னைத்
தேர்ந்தெடுத்துத்
தண்டனை தந்தது
தவறென்பதை உணர்ந்த,
வாழ்வின் இன்பங்களை
வெறுப்பு விழிகளுடன்
விட்டுவிலகுகிறேன்;
ஆனந்தத்தின் நாதம்
அசைந்து வந்தாலும்
அசைவாத மனதுடன்
துயரத்தில் தரித்திருக்கிறேன்!
—o—
வாழ்வின்
சாயுங்காலத்தில்-நான்
சருகித்துக் கொண்டிருக்கிறேன்;
பார்க்கும்
திசைகளிலிருந்தெல்லாம்
இருளின் பாதங்களே
எனை நோக்கி
ஊடுருவி வருகின்றன!

செல்வி பஹீமா ஜஹான்-
தெமடகொல்ல, மெல்சிரிபுர.

---

## எரிந்த கனவு

நீருயர்ந்த நிர்மலம்
என்கிராமம்-
என் பூ நிலம்.
*
கண்ணுதிர்த்த
நினைவுகளோடு
சோர்ந்து போனது
எல்லாமே.....!
*
கோரச் சுடர்கள்
எரிந்து எரிந்து
என் பூமியிலா
விழவேண்டும்?
*
இன்னும் எத்தனை
இரும்பு விமானங்களையும்
தீப் பிழம்புகளையும்
புதைக்கப்போகிறார்கள்.....
என்றுதான்
பார்ப்போம்!
*
பொருந்துச் சொரிந்த
சச்சங்களோடு
இன்னும்
கற்கால மானுடர்களாய்
எத்தனை பொழுதுகளை
அநியாயமாய்
அழிப்பது?
*
முல்லைக் கடற்கரையில்
மேரியும் நானும்
சங்கு பொறுக்கி,
சீட்டி அடித்து,
வெண்மணலில் கால் புதைய
ஓடிப் பிடித்ததும்....
*
அம்மம்மா
தன் கண் மூடிய
பின்னால்
எனக்கென்று
சுற்றிக் காட்டிய
ஐந்தேக்கர்
நிலக் காணியும்....
*
நிலாவொளியில்
நானும் அம்மாவும்
காவல் காத்த
எங்கள் கச்சான் தோட்டமும்.....
*
வெள்ள வெளியை
அலையடிக்கும்
புளியங்குளத்தின் நீரழும்...
அந்தப் பிள்ளையார்
கோவில் வளாகமும்....
*
'செல்' வடித்த சருகுகளாய்
சாக்காடாய்....
புயல் விழுங்கிய
பூமியாய்....
எல்லாமே
எரிந்த கனவுகள் தானா?
*

மானுடபுத்ரன்

---


## நெருப்பு நிலா

நெருப்புத் துண்டாய்
தெறிக்கும் வார்த்தைகள்!
0–0
ஜூரம் சொட்டும்
பார்வைகள்!
0–0
அவள்–
கண்களால் சிரித்ததாக
ஞாபகமில்லை!
0–0
கண்களில் தெரியும்
வெப்பம் அவளின்
மூக்குக் கண்ணாடியால்
வெளிவரும்!
0–0
பர்தா உறைபோட்ட
கன்னி(வெடி)!
0–0
அச்சம் மடம் நாணத்துடன்
இவளிடம் நெருப்பும் உண்டு!
0–0
இனி–
மழைபெய்தால்
இவள்–
குடைபிடிக்கத் தேவையில்லை!
0–0
அவளை
உஷ்ணத்தில் பெத்திருக்கவேண்டும்!
அல்லது–அவள்
உஷ்ணமாகப் பிறந்திருக்க வேண்டும்.
0–0
நரகம் இவளிடம்
நெருப்புக் கடன் கேட்கலாம்!
0–0

யெம்–யே–தஸ்ரீப்–
அக்கரைப்பற்று.

---

## அந்த நாள் ஞாபகம்



↑ 1981ல் கிளிக் செய்யப்பட்ட சூடான காட்சி. பாகிஸ்தான் அதிரடி துடுப்பாட்டவீரர் மியண்டாட் தனது மட்டையுடன் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் டெனிஸ் லில்லியை நோக்கிப் பாய்கிறார். லில்லியும் மோதலுக்கு ரெடியாக, நடுவர் தலையிட்டு தடுக்கிறார். கிரிக்கெட் நடுவரை மோதலுக்கு மத்தியஸ்தராக்கிவிட்டனர். மியண்டாட்டுக்கு எப்போதும் மூக்கின் மேல் கோபம்தான்.



↑ சிவாஜி- சரோஜாதேவி படம் அருணோதயம் (1971). இந்த ஜோடிக்கு மீண்டும் இளமை திரும்புகிறது. 'ஒன்ஸ்மோர்' படத்தில் மறுபடி இணைகிறார்கள். மலரும் நினைவுகளும் மீட்டப்படுமாம்.



## யார் இவர்?

← தற்போது இந்தியில் பிரபல நடிகை. அக்ஷய் குமாரின் காதலி. தமிழிலும் நடித்திருக்கிறார். 'ர'வில் பெயர் தொடங்கும். தெரிகிறதா? மூளையைக் கசக்குங்கள். சரிபார்க்க பக்கம் 18 க்கு செல்லுங்கள்.

---

## இந்த வாரம் உங்கள் பலன்

(23.03.1997 தொடக்கம் 29.03.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன், புதன், வெள்ளி, சனி, கேது. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |
| மகரம் | - வியாழன். |

★ சந்திரன்- கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், இனசன நன்மை. | பி.ப. | 1 | மணி |
| புதன்- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, அந்நியர் உதவி. | பி.ப. | 4 | மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| சனி- வீண் தொல்லை, பலவித கஷ்டம். | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்: சுப நேரம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பண வரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, தொழிற் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- கடன் தொல்லை, மனக் கவலை. | பகல் | 12 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- வீண் பிரயாணம், செலவு மிகுதி | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்
(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், தேகசுக நன்மை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக் கிலேசம். | பி.ப. | 3 | மணி |
| புதன்- உயர்ந்த நட்பு, பொருள் வரவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- முயற்சி மேன்மை, காரியானுகூலம். | பி.ப. | 4 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், தொழில் சிறப்பு. | பகல் | 12 | மணி |
| சனி- பயனுள்ள செயல், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- மனக் கிலேசம், வீண் தொல்லை. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | மு.ப. | 9 | மணி |
| புதன்- வெளியிடப் பிரயாணம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனப் பயம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, வீண் தொல்லை. | மு.ப. | 10 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- உறவினர் பகை, கடன் தொல்லை. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- காரியானுகூலம், பண வரவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| சனி- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்
(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- ஆடம்பர வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- தொழில் மேன்மை, மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| புதன்- கடன் தொல்லை, வீண் விரயம். | மு.ப. | 9 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| சனி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: சுப நேரம்
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- துயர் அதிகம், வீண் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 3 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| புதன் - பெரியோர் உதவி, பொருள் பேறு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- காரியசித்தி, பண வரவு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 3 | மணி |
| சனி- புதிய முயற்சி, வெளியிட வாழ்க்கை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-8

### சிம்மம்: சுப நேரம்
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், செல்வாக்கு மேன்மை. | பி.ப. | 4 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| புதன்- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- கடன் தொல்லை நீங்கும், புதிய முயற்சி. | பகல் | 12 | மணி |
| சனி- குடும்ப சுகம், உறவினர் உதவி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்வு. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- அந்நியர் நட்பு, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- எதிர்பார்த்த நன்மை, புதிய முயற்சி. | பகல் | 12 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- காரியசித்தி, பொருள் வரவு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், பணச் செலவு. | மு.ப. | 9 | மணி |
| சனி- பெரியோர் நட்பு, காரியனுகூலம். | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- வீண் முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, மனச் சோர்வு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- இனசன விரோதம், மனக் கவலை. | பகல் | 3 | மணி |
| சனி- தொழில் கேடு, கடின உழைப்பு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: சுப நேரம்
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், செல்வாக்கு மேன்மை. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- புதிய முயற்சி, வெளியிட வாழ்க்கை. | பி.ப | 1 | மணி |
| வியாழன்- உறவினர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- செய்தொழில் நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| சனி- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கன்னி: சுப நேரம்
(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன மகிழ்ச்சி, செலவு மிகுதி. | பி.ப. | 4 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, அந்நியர் பகை. | மு.ப. | 9 | மணி |
| புதன்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- செய்தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- காரியசித்தி, பொருள் வரவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- முயற்சி பலிதம், உறவினர் நன்மை. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7



படிப்பகம்





## நீதி வழியில் நடந்திடு

உண்மையை நீயும் உரைத்திடு!
உலகு உய்ய உழைத்திடு!
உள்ளம் நிறைய அன்பினால்
உற்றார் உறவினை வளர்த்திடு!

துன்பம் செய்யும் துஷ்டரை
துணிவு கொண்டு எதிர்த்திடு!
துன்ப வாழ்க்கை என்றுமே
துயரில் போய் முடியுமே!

நன்மை ஒன்றைச் செய்திட்டால்
நன்மை நூறு சேருமே!
நாடி வரும் வறியவரை
நன்மை பேசிப் போற்றுவாய்!

நீதி வழியில் நடந்திடு!
நியாயம் கேட்டுப் போரிடு!
நன்மை என்றும் உயர்ந்திட்டால்
நாடும் நாமும் உயருவோம்!

இராகி

இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே!
இயந்திரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடுவீரே!
கடலில் மூழ்கி நன் முத்தெடுப்பீரே!

–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை



# இதுவே போதும்!

தமது ஊரில் நடைபெறும் கோயில் திருவிழாவுக்காக ரவியின் அப்பா ரவிக்கு புதிய உடுப்புக்கள் வாங்கிக்கொடுத்தார். ஆனால் ரவியோ அதைப் போட முடியாது என்று அடம்பிடித்தான்.

இதற்குக் காரணம் ரவியுடன் கூடப் படிக்கும் பக்கத்துவீட்டு ரகு.

ரகுவின் அப்பா ஒரு தனியார் நிறுவனத்தில் வேலைபார்த்து வருகிறார். அவர் ஆடம்பரமாக வாழ்பவர். தன் மகன் ரகுவிற்கு விலையுயர்ந்த உடுப்புக்களை வாங்கிக்கொடுத்தார்.

அதைப்பற்றி பாடசாலையில் தன் நண்பர்களிடம் பெருமையாகப் பேசினான் ரகு.

தனக்கும் அதே மாதிரி விலையுயர்ந்த உடுப்புக்கள் வேண்டும் என்று தகப்பனிடம் கேட்டான், ரவி.

ரவியின் அப்பா ஒரு சாதாரண தொழிலாளி. கொஞ்சம் ஏழ்மையான குடும்பம். அவர் ரவியைப் பார்த்து,

"ரவி, நமக்கு எவ்வளவு வருமானம் வருகிறதோ அதற்கேற்றபடிதான் செலவு செய்ய வேண்டும். நாமும் மற்றவர்களைப் போல வாழவேண்டும் என்று ஆசைப்படக் கூடாது. நமக்கு எது கிடைத்தாலும் திருப்தியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்!" என்று புத்திமதி சொன்னார்.

ஆனால் ரவி அதை ஏற்றுக்கொள்வதாக இல்லை. விடாமல் அவன் அடம் பிடித்தான்.

அன்று மாலை ரவி தன் நண்பர்களுடன் விளையாடிவிட்டு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தான். அப்போது ரவியின் நண்பன் சுரேஷ் எதிரே வந்து கொண்டிருந்தான். அவன் ரவியிடம்,

"ரவி உனக்கு விஷயம் தெரியுமா? ரகுவின் அப்பாவை பொலிஸார் பிடித்து விட்டார்கள்," என்றான்.

"ஏன்? என்ன நடந்தது?" என்று கேட்டான் ரவி.

"ரகுவின் அப்பா, தான் வேலை செய்யும் நிறுவனத்தில் நிறைய பணத்தைக் கையாடல் செய்துவிட்டாராம். அதனால்தான் பிடித்தார்களாம்," என்று சொன்னான் சுரேஷ்.

இதைக் கேட்ட ரவிக்கு இப்போது தனது தந்தை கூறிய புத்திமதிகள் ஞாபகத்திற்கு வந்தன. அவர் கூறியவை எவ்வளவு உண்மையானவை; 'எதையும் திருப்தியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். தகுதிக்கு மீறி ஆசைப்பட்டு ஆடம்பரமாக வாழ்ந்தால் நமக்கும் இதே நிலை ஏற்படும். ரகுவின் குடும்பத்திற்கு இதனால் எவ்வளவு அவமானம்' என்று அவன் மனம் வருந்தினான்.

வீட்டிற்கு வந்தான்.

"நீங்கள் வாங்கித் தந்த உடுப்புக்கள் எனக்குப் போதும். நான் இனிமேல் தகுதிக்கு மீறி ஆசைப்படமாட்டேன்." என்று தகப்பனிடம் கூறினான் ரவி. ரவியின் அப்பா மிகவும் சந்தோஷப்பட்டார்.

## வாரம் ஒரு நாடு

### தாய்வான்



**தலைநகர்–** தைப்பே
**பரப்பு–** 35,981 சதுரகிலோமீட்டர்
**மக்கள் தொகை–** 2.13 கோடி
**மொழி–** மண்டரின், சீனம், தாய்வான் வழக்குகள்
**எழுத்தறிவு–** 90%
**சமயம்–** புத்தமதம், கொன்ஃபியூஸியனிசம், டாவோயிசம்
**நாணயம்–**நியூ தாய்வான் டொலர்.
**தனி நபர் வருமானம்–**8815 டொலர்.

**அமைவிடம்:**

ஆசியாக் கண்டத்தில் அமைந்திருக்கும் தாய்வான் முன்னர் ஃபார்மோஸா என அழைக்கப்பட்டது. இது பல சிறிய தீவுகளைக் கொண்டுள்ளது.

**வரலாறு:**


1900 முதல் 1945 வரை தாய்வான், ஜப்பானின் ஆதிக்கத்தில் இருந்தது. 1945ல் சியாங் கை ஷேக் ஆட்சி பீடமேறினார். தாய்வானை சீனாவின் தலைநகராக்கினார். ஆனால் சீனாவுடன் தாய்வான் இணைய விரும்பவில்லை. 1986ல் எதிர்க் கட்சிகளும் தேர்தலில் பங்குபெற அனுமதிக்கப்பட்டனர். அதிபரே அதிகாரம் உள்ளவர்.

**பொருளாதாரம்:**

மின்சார சாதனங்கள், துணி மற்றும் பிளாஸ்டிக் தொழில்கள் சிறப்படைந்துள்ளன. அரிசி, இனிப்பு உருளைக் கிழங்கு, தேயிலை, மஞ்சள் முக்கிய விளைபொருட்கள். நிலக்கரி, செம்பு, பளிங்குக்கல் ஆகியன முக்கிய கனிமப் பொருட்கள்.

## லியோ டோல்ஸ்டோய்

'போரும் சமாதானமும்' என்ற உலகப் புகழ்பெற்ற ஒப்பற்ற நாவலை எழுதி இலக்கிய உலகின் இணையிலா எழுத்தாளராக இன்றும் மதிக்கப்படுபவர் கவுண்ட் லியோ நிக்கோலைவிச் டோல்ஸ்டோய் அவர்கள். ரஷ்ய நாட்டில் 1828ம் வருடம் பிறந்த டோல்ஸ்டோய் மனித சமுதாயத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைச் சாடி, கபட வேடதாரிகளைக் கண்டித்து, புதிய சிந்தனைகளை தனது எழுத்துக்களின்



மூலம் பரப்பிவந்தார். அதேவேளை அவருடைய காலத்தில் ரஷ்யாவில் நிலவிய மதக் கோட்பாடுகளைக் கண்டிக்கவும் துணிந்தார். கடவுள் நம்பிக்கை ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டும் என்று போதித்த டோல்ஸ்டோய், கடவுள் பெயரால் நடைபெறும் அட்டூழியங்களைச் சாடினார்.

ரஷ்யாமீது 1812ம் ஆண்டு நெப்போலியன் படையெடுத்தான். அப்போரின் போது ரஷ்யாவில் வாழ்ந்த பல தரப்பட்ட மக்களும் எத்தகைய துன்பங்களை அனுபவித்தார்களோ அவற்றை யெல்லாம் தனது கற்பனை தனது கற்பனை மூலம் கண்டு தனது 'போரும் சமாதானமும்' நூலில் எடுத்துக் காட்டினார்.

பிரிட்டிஷார் இந்தியா, இலங்கை மற்றும் கீழத்தேய நாடுகளை அடிமைப்படுத்தியதை வன்மையாகக் கண்டித்தார். இதனால் இந்தியா போன்ற நாடுகளில் டோல்ஸ்டோயின் புகழ் பரவலாயிற்று. மகாத்மா காந்தி அடிகள் இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் பாடுபட முற்பட்டமைக்கு டோல்ஸ்டோயின் கருத்துக்கள் மீது அவர் கொண்ட நாட்டம் தான் காரணம் என்று கூறப்படுகிறது.

'அன்னா கீரனா', 'எமது கால அடிமைத் தனம்', 'கிறிஸ்துவின் போதனைகள்' மற்றும் 'பிள்ளைகளின் அறிவாற்றல்' போன்ற நூல்கள் டோல்ஸ்டோயின் ஆக்கங்களே. இவர் 1910ம் ஆண்டில்–தனது 82வது வயதில் காலமானார்.

## விடுகதைகளும் விடைகளும்

1. நாலு கால் மண்டபத்தில் நால்வர் மட்டும் நனையவில்லை.
 அது என்ன?
2. இவன் பொங்குவது சோறு அல்ல, வெப்பச்சாறு.
 அவன் யார்?
3. சோகமின்றி அழவைப்பாள், சருகுச் சேலைக்காரி.
 அவள் யார்?
4. தலையில் மரத்தைச் சுமந்தாலும் பயந்த சுபாவம் இவனுக்கு.
 அவன் யார்?
5. நீலப்பந்தலில் மஞ்சள் விளக்கு.
 அது என்ன?
6. வெடித்துச் சிதறியவன் விலைக்கு வருகிறான்.
 அவன் யார்?
7. சந்தைக்குள்ளே சப்பட்டைக்கல்.
 அது என்ன?
8. வயிற்றில் விரல், தலையில் கல்.
 அது என்ன?
9. கந்தல் துணிக்காரி முத்துப் பிள்ளைகள் பெற்றாள்.
 அவள் யார்?
10. பஞ்சைத் தின்றவன் படுத்தே கிடக்கிறான்.
 அவன் யார்?

### விடைகள்


1. பசுவின் மடி 2. எரிமலை
3. வெங்காயம் 4. மான்.
5. நிலா 6. பஞ்சு
7. நாக்கு 8. மோதிரம்
9. சோளக்கதிர் 10. தலையணை.

தொகுப்பு: ஏ. அகல்யா, நுவரெலியா.

## விண்வெளியில் முதல் இடங்கள்

★ **விண்வெளிப் பயண விதிகளை முதலில் வரையறுத்தவர்:**
சேர்.ஐசாக் நியூட்டன்.

★ **பூமியிலிருந்து இயக்கப்பட்ட ஓடம்:**
பூமியில் இருந்து இயக்கப்பட்டு, சந்திரனில் இறங்கிய முதல் ஆளற்ற விண்வெளி ஓடம் 'லூனாகோடி'



என்ற ஓடமாகும். இது 1970 நவம்பர் 17ல் பூமியில் இருந்து சென்றது.

★ **விண்வெளியைச் சுற்றிவந்த முதல் செயற்கைக்கோள்:**
ரஷ்யாவின் 'ஸ்புட்னிக்'– 1957 ஒக்டோபர் 4ல் இது ஏவப்பட்டது. இதன் எடை 83.6 கிலோகிராம்.

★ **முதல் விண்வெளி வீரர்:**
யூரி ககாரின் என்ற ரஷ்யர். 1961 ஏப்ரல் 12ல் 4.65 தொன் எடையுள்ள 'வொஸ் டொக்' என்ற விண்கலத்தில் 89.34 நிமிடங்களில் பூமியை ஒரு முறை சுற்றி விட்டுத் திரும்பினார்.

★ **முதல் விண்வெளி வீராங்கனை:**
வலென்டினா தெரஸ்கோவா என்னும் ரஷ்யப் பெண். இவர் 1963 ஜூன் 16ல் 'வொஸ்டொக்-6' விண்கலத்தில் 2 நாட்கள் 22 மணி 42 நிமிடங்களில் 48 முறை பூமியைச் சுற்றினார்.

★ **விண்வெளியில் இறங்கி நடந்த முதல் வீரர்:**
அலெக்ஸ் ஏ.லியனெவ் என்ற ரஷ்யர். 1965 மார்ச் 18 அன்று தமது 'வொஸ் கொட்-2' விண்கலத்தில் இருந்து இறங்கி வெளியே நடந்தார்.

★ **விண்வெளியில் பயணித்த முதல் தம்பதியினர்:**
அமெரிக்காவின் ஜேன் டேவிசும் அவரது கணவர் மார்க்லியும். 1992 செப்டெம்பரில் இவர்கள் விண்வெளிக்குப் பயணித்தனர்.

★ **நீண்டகாலம் பயணம் செய்தவர்:**
ரஷ்யாவின் போலியாகோவ். இவர் 1988ல் மிர் விண்கலத்தில் 607 நாட்கள் விண்ணில் கழித்ததோடு சுமார் 10,000 தடவை பூமியைச் சுற்றியும் வந்துள்ளார். போலியாகோவின் பெண் உதவியாளர் எலேனா கொண்டா கோவாவும் 169 நாட்கள் விண்வெளியில் வாழ்க்கை நடத்தி சாதனை புரிந்துள்ளார்.

## அறிவோம் மனதில் பதிவோம்



↑ சில நாகபாம்புகள் ஒரே நேரத்தில் 75 முட்டைகள் வரை இட்டு குஞ்சு பொரிக்கின்றன.



↑ ஒரு கிலோ தேனைச் சேகரிக்க, தேனிக்கள் 90 ஆயிரம் தடவை பூக்களில் தேனெடுக்க வேண்டியிருக்கிறது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 29.03.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 185
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 183

பரிசுக்குரியவர்:
முஹமட் சிபான் பஹீறுடீன்,
கமு/ ஸம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வி பாத்திமா முப்ராஸா உசைன், மா/ ஆமினா ம.வி, மாத்தளை. | மொரின் மத்தியூஸ், 172/2 லோவர் வீதி, உவர்மலை, திருகோணமலை. |
| குமாரலிங்கம் தனுஷியா, விவேகானந்த மட்.ம.ம.வி., கல்லடி, உப்போடை. | செல்வி ஃபாத்திமா ஃபய்ஹா ஃபாரீஸ், கேம்பிரிட்ஜ் சர்வதேச பாடசாலை, மாத்தளை. |
| எஸ். முரளிதாஸ், இராமகிருஷ்ணா கல்லூரி, அக்கரைப்பற்று. | எம்.எம்.சஃப்ரான், அல்ஹிரா ம.வி., இ/கொட்டாரமுல்ல. |
| சு. கஜன், விஜயரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், நீர்கொழும்பு. | எம். ஐ. மனாஸிர், அந்-நஜாத் வி. கச்சக் கொடித்தீவு, கிண்ணியா-05. |
| எஸ். கேசாந்தரனி, தமிழ் மகளிர் மகாவித்தியாலயம், பதுளை. | நஸீஹா அன்வர், புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி, கடுகஸ்தோட்டை. |

www.padippakam.com

**புதிய தொடர் அமோகமான முதல் வாரம்**

**கொளுத்தும் கோடை வெயிலுக்கு இதமான - இளமையான ஜில் ஜில் தொடர் இது! சுஜாதாவின் தொடர்களில் பரபரப்பான தொடர் இது!**

# காயத்ரி

## நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா

**கா**யத்ரியைச் சந்திக்கு முன்- சென்னைக்கு வரும்போதெல்லாம் நான் மூர்மார்க்கெட் செல்வேன். அங்கே ஒரு 'பாய்' எனக்குப் பரிச்சயம். பழைய புத்தகக் கடை பாய். எத்தனைதான் மக்களிடையே இலக்கிய உணர்வும் மறுமலர்ச்சியும் விழிப்பும் இருந்தாலும் பணத்தேவை என்ற ஒன்று இருக்கிறதே! எனவே மூர்மார்க்கெட்டில் சில அபூர்வ இலக்கியங்கள் எனக்குக் கிடைக்கும்.

நான் இந்தத் தடவை மூர் வந்தது ஒரு பிரபல வாரப்பத்திரிகையின் இரண்டு வருஷம் பழைய ஒரு இதழுக்காக. அதில் என் கதை வந்திருந்தது. புத்தகமாக வெளியிடுகையில் விட்டுப் போய்விட்டது. எனவே மூர்மார்க்கெட் பாய் அந்தப் பத்திரிகை அடுக்கை என் முன் தள்ளி, "பொறுக்கிக்கிங்க அய்யரே" என்றான்.

தேதி வாரியாக இல்லாத ஐந்து வருஷச் சரக்கில் ஒரு வருஷத்தின் ஒரு மாதத்தின் ஒரு வாரத்தைத் தேடுவது ஏறக்குறைய இயலாத காரியம். முயற்சியைக் கைவிடுகிற சமயம் அந்தப் பத்திரிகைகளின் நடுவே அந்த நீல நிற நோட்டுப் புத்தகம் தலை காண்பித்தது.

நூறு பக்க நோட்டு பைண்டு பண்ணி இருந்தது. அதைத் திறந்ததும்-

***அவசரம்!***

***அவசியம்!***

என்று சிவப்பில் இரண்டு வார்த்தைகளைப் பார்த்துத் திடுக்கிட்டேன். அதன் கீழ் திருக்குறள் போல் இரண்டு வரிகள்-

***அவசியம் நீங்கள் இதைப் படிக்க வேண்டியது.***

அவசரம் நீங்கள் உடனே வரவேண்டியது.

புரட்டினேன்.

***காயத்ரி ராஜரத்தினம் 18-1-76***

புரட்டினேன்.

சின்னச் சின்ன நெருக்கமான கையெழுத்து. பெண்மை நிச்சயம் தெரியும், மல்லாந்த, சற்று இடது பக்கம் சாய்ந்த கையெழுத்து. ஆரம்பப் பக்கங்கள் ஸ்பஷ்டமாக இருந்தன. போகப் போக எழுத்து குளறிக் கொண்டே வந்தது. கடைசியில் ரொம்ப மோசம்.

"என்ன! கிடைச்சுதா அய்யரே?"

"இல்லே பாய். வேறு ஏதோ கிடைக்குது."

"இன்னாது தொடர் கதையா? பைண்டு பண்ணதா?"

"அதெல்லாம் இல்லை. இது புதுதினுசு கதை."

"ஸ்கூல் நோட்டு! இது எப்படி இதிலே கலந்தது?"

"பாய், இந்த நோட்டை விலைக்குக் குடுப்பியா?"

"இப்படிக் கொண்டா."

பாய் தன் கண்ணாடியை 'அஜிஸ்ட்' செய்து கொண்டு அந்த நோட்டைப் புரட்டி ஒரு பக்கத்தை மாதிரி பார்த்தான். அதைப் புத்தகத்தில் சேர்ப்பதா தொடர் கதையா என்று தீர்மானிக்காமல்- என் ஆர்வத்தை அளக்கிற ரீதியில்-

"ஒண்ணார் ரூபா கொடுத்துட்டுப் போய்கினே இரு. இப்பதான் போணியாவுது."

"ஒண்ணரை ரூபாயா! வேண்டாம் பாய்."

"எடுத்துக்க கையால கஷ்டப்பட்டு எழுதியிருக்குது."

"ஒண்ணரை ரூபாய் அக்கிரமம் பாய்!" முதல் பக்கத்தின் வரிகளை மாதிரி படித்தேன்.

'ஸ்டேஷனுக்கு விஜி, ராஜு, அப்பு, அம்மா, அப்பா எல்லோரும் வந்திருந்தார்கள். அவர் சைடிலிருந்து ராமகிருஷ்ணன் என்கிற ஒரே ஒரு மீசை சினேகிதர் வந்திருந்தார். ஹனிமூனுக்கு அத்தனை பேர் வழியனுப்ப வந்திருந்தது எனக்கு வெட்கமா இருந்தது.'

"இந்தா பாய் ஹனிமூன்."

"என்னது?"

"இந்தா பணம் ஒண்ணரை ரூபாய்."

மின்சார ரெயிலில் படித்துக் கொண்டிருந்தேன். பஸ்ஸில் படித்துக் கொண்டிருந்தேன். காப்பி சாப்பிடுகையில், தூங்கப் போகுமுன், தூக்கத்திலிருந்து திடுதிப் என்று எழுந்து, அதிகாலைக்குள் காயத்திரியின்- அதை என்ன என்று சொல்வது, டயரி என்றா, புத்தகம் என்றா, கதை என்றா- அதை முடித்துவிட்டேன்.

இப்போது அவளைச் சந்திக்க அவசர அவசரமாகச் சென்று கொண்டிருக்கிறேன்.

காயத்ரி யாரென்று எனக்குத் தெரியாது. அவளை நேரில் பார்த்திராவிட்டாலும் அவளைப் பற்றிய அன்யோன்யமான பல விவரங்கள் எனக்குத் தற்செயலாகத் தெரிந்திருக்கின்றன.

அவள் உபயோகிக்கும் முகப்பவுடரின் பெயர்....(எக்ஸாட்டிக்கா) அவள் மார்பின் அளவு (முப்பத்துநாலு) எத்தனையோ விவரங்கள், முன்பின் பரிச்சயமில்லாத ஒரு பெண்ணை, அதுவும் மற்ற ஒருத்தனின் மனைவியைச் சந்திக்க இவ்வளவு ஆவல் கொண்டு, பதற்றம் கொண்டு ஓடுவதில் மெலிதான முட்டாள்தனம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும்.

இருந்தும் காயத்ரியைச் சந்திக்க வேண்டியது எனக்குக் கட்டாயமாகி விட்டது. எப்படி? இது உங்களுக்குப் புரிய- காயத்ரியின் நூறு பக்கங்களை நீங்கள் படிக்க வேண்டும். அந்தப் பக்கங்களை இப்போது தருகிறேன்.

* * *

*-1-*

***காயத்ரி ராஜரத்னம்***

***காயத்ரி***

***ஜி. 18-1-76***

**Intensely personal. Bought in Banglore on the day I lost my virginity.**

ஸ்டேஷனுக்கு விஜி, ராஜு, அப்பு, அம்மா, அப்பா எல்லோரும் வந்திருந்தார்கள்.

அவர் சைடிலிருந்து ராமகிருஷ்ணன் என்கிற ஒரே ஒரு மீசை சினேகிதர் வந்திருந்தார். ஹனிமூனுக்கு இத்தனை பேர் வழியனுப்ப வந்திருந்தது எனக்கு வெட்கமாக இருந்தது. இவர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தது கூட வெட்கமாக இருந்தது.

நிமிஷத்திற்கு நிமிஷம், அதுவும் பார்வையா இது? சும்மா உருவி விடுகிற, தடவி விடுகிற பார்வை. அப்பு இரண்டு கூடை நிறையப் பழம் எல்லாம் கொண்டு வந்திருந்தது. என்னைப் பார்த்து ரொம்பச் சிரித்தது.

ஒரு காலத்தில் அப்பு என்னை லவ் பண்ணித்து. லெட்டர் கூட எழுதி, மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, அப்புறம் நீ என் சகோதரி போல, தங்கச்சி போல, அய்யா கிட்ட சொல்லிடாதே என்று சர்ரண்டர்.


**It was fun.** (வேடிக்கையாக இருந்தது.) என்னாலேயும் அவரைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. **Do I deserve him?** (நான் அவரைப் பெற அருகதையானவளா?) ரொம்ப சார்மிங். ரொம்ப அழகு. சற்று ஜாஸ்திதான். என்னைவிட நல்ல சிவப்பு. நல்லநிறம். தலைமயிரை அப்படியே விரலைச் செலுத்திக் கசக்கலாம் போல இருந்ததே ஆசையாக இருக்கிறது. உதடுகள் ஆண்பிள்ளைகளுக்கு எங்கேயாவது ரோஜா நிறத்தில் இருக்குமோ? கருப்பான கண்கள் மூக்குக்குத் தங்க வளையல்களை எல்லாம் அவிழ்த்துத் தந்துவிடலாம்.

அழகில் நான் அவருக்குப் பொருத்தமா என்றுதான் சந்தேகம் வருகிறது. என்னைத் தனியாகப் பார்த்தால் பாய்ஸ் எல்லாம் விஸிலடிப்பார்கள். இருந்தாலும் இந்த ஆளுடன் வைத்தால் ஒன் பல்ப் அணைந்து போய்விடும் என்று தோன்றுகிறது.

அப்பா ஏதோ செல்லக் குழந்தை மாதிரி சிரிக்கிறார். சிரிப்பிலேயே ஒரு சின்ன மரியாதை மமதை. ஆரோக்கியமான ஈறுகள், பற்கள், முந்தாநாள் தான் பிறந்தது போல இருக்கிறார்?

ரத்னா? ஓ மை டியர் ரத்னா! எனக்கு என்ன என்னவோ கதம்பமாக உணர்ச்சிகள்.

அம்மா என் தலையில் பூ வைக்கும் போது அழுகை வருகிறது. யோசித்துப் பார்த்தால் அம்மா அப்பாவிடமிருந்து பிரிந்து இதுவரை ஒரு ராத்திரி கூட இருந்ததில்லை. வீட்டிலிருந்தே படித்து, ஹாஸ்டல் என்றாலே என்ன என்று தெரியாது. ஒரு எக்ஸ்கர்ஷன்! கூட அனுப்பமாட்டார்கள்- முதல் நாள். முதல் ராத்திரி. **With a total Stranger-** (முற்றிலும் அறிமுகமில்லாத ஒருவரிடம்) ரயிலில் ரொம்ப மோசம்.



எதிரே அந்த வயசான தம்பதிகள் இருப்பதைக் கொஞ்சம் கூட மதிக்காமல் ரொம்ப என்னை உடம்பெல்லாம் தொட்டுத் தொட்டு- எனக்கா கூசுகிறது. முதல் தடவை வேறு. அந்தக் கிழவர் என்ன நினைப்பார்? அகலமாகக் குங்குமம் இட்டுக் கொண்டு அரக்குக் கலர் புடவை கட்டிக்கொண்டு மகாலட்சுமி போல இருந்த அந்த அம்மா என்ன நினைப்பாள்? ரத்னாவை ஒரு தடவை சரியாகக் கிள்ளிவிட்டேன். ஸாரி ரத்னா.

**-2-**

பெங்களூருக்கு வருகிறவர்கள் என்ன செய்வார்கள்? லால்பாக், விதான் ஸௌதா என்று திரிய மாட்டார்களோ? போட்டோ பிடிக்க மாட்டார்களோ? அல்லது எத்தனையோ சினிமா தியேட்டர்களில் ஒன்றில் போய் உட்கார மாட்டார்களோ? ம்ஹூம் ரத்னா அப்படி இல்லை. உட்லண்ட்ஸுக்கு வந்தோம். பல் தேய்த்தோம். ரூமிலேயே சாப்பாடு ஆர்டர் ஆகிறது. அந்த சர்வருக்கு எதிரிலேயே ரூம் ஜன்னல் கதவுகளை ஒவ்வொன்றாகச் சாத்தினார். அவன் என்ன நினைப்பான்? எனக்கு வெட்கம் உடம்பெல்லாம் மொய்க்கிறது.

எல்லோருக்கும் தெரியும் நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்று. அவர்கள் கண்களே சொல்கிறது. அந்த ரிஸப்ஷன் இளைஞன், அந்த வெள்ளைக் குல்லாய் சர்வர், சிவப்பான ரூம் பாய். எனக்கு ரத்னா மேல் நிஜமாகக் கோபம் வந்தது.

**"Don't make it so obvious"** (இவற்றை இவ்வளவு வெளிப்படையாக்க வேண்டாமே!) என்றேன். சிரிக்கிறார்.

**-3-**

**வ**லி! அது ஒன்றுதான் ஞாபகமிருக்கிறது. விஜி சொல்லியிருக்கிறாள். அம்மாவும் சொல்லியிருக்கிறாள். இருந்தும் இப்படி வலிக்கும் என்று நினைக்கவில்லை.

இன்பம், அது, இது என்பதெல்லாம் கதை! மாதிரிக்குக் கூட இல்லை. ரத்னாவை அந்த மெலிய இருட்டில் பார்க்கும் போது கொஞ்சம் வியர்வை. பல்லைக் கடித்துக் கொண்டு ஏதோ **Reciprocating Engine** (எதிர்ச் செயலாற்றும் இயந்திரம்) மாதிரி, மிஷின் மாதிரி எனக்கு அச்சமாக இருந்தது. ரத்னா இப்போது அழகாக இல்லை, அப்புறம் ரத்னாவை எழுப்பி வலியைப் பற்றிச் சொன்னேன்.

"கவலைப்படாதே. விரைவில் போய்விடும்."

"ஓ.நோ! வேண்டாம்" என்றேன். சொன்னதைக் கேட்காமல் ரத்னா காலையும் என்மேல் படை எடுத்தார். என்னுள் வேதனை கொப்பளித்தது. கடவுளே! இப்படியா வலிக்கும்!

**-4-**

பதினைந்து நாட்கள் கனவுபோல்தான் சென்றன. டாக்ஸிப் பிரயாணங்கள், ஓட்டல் அறைகள் (எல்லா ஓட்டல் அறைகளுக்கும் ஒருவித வாசனை இருக்கிறது. கொஞ்சம் சிகரெட், கொஞ்சம் ஊது வத்தி, கொஞ்சம் வண்ணான் சலவை, கொஞ்சம் சாவு, கொஞ்சம் கண்ணீர் கொஞ்சம் என்ன என்னவோ!) படகில் பிரயாணங்கள். பச்சைப்புல் வெளிகள். ரத்னா எப்போதும் சிரித்துக் கொண்டு, எப்போதும் என்மேல் பட்டுக் கொண்டு, விளம்பரத்தில் வருகிற கணவன் மனைவி போலவே உலாவினோம். ராத்திரிதான் ஏன் வருகிறது என்று பயமாகவே இருந்தது. இன்றைத் தேதி வரை நான் அதை விரும்பவில்லை.

**-5-**

ரத்னாவின் புன்னகை பற்றி ஸ்பெஷலாக எழுதவேண்டும். ஸ்திரமான அழகான புன்னகை. திகட்டும் புன்னகை. தித்திப்பான புன்னகை. எதற்கெடுத்தாலும் புன்னகை.

"ரத்னா பார்க் போவோமா?"

புன்னகை.

"ரத்னா இன்னைக்கு வேண்டாம்!"

புன்னகை.

"போதும் ரத்னா போதும்."

புன்னகை. அழகாக அதிகப்படியான புன்னகை.

**-6-**

ஒரு சம்பவம். ஊட்டியில் மெலிதான குளிர். எனக்குக் கோட்டு அணிவித்து மிகவும் உற்சாகத்துடன் இருந்தேன். வெயில் தரும் இதம் அற்புதம். போதும் போதாததுமான சூடு. பக்கத்தில் புதிய கணவன், அழகான **Profile.** (பக்கவாட்டுத் தோற்றம். பச்சை, பச்சை, பச்சை, எங்கு நோக்கினும் பச்சை. ஓகோ என்று ஆரவாரம் செய்யும் புஸ்பங்கள்.

காயத்ரி என்று முழுப்பெயர் சொல்லித்தான் கூப்பிடுவார். அம்மா, விஜி மாதிரி 'யத்து' என்று கூப்பிட மறுத்தார். ரொம்ப நேர்மையாகப் பேசினார்.

எஸ்டேட்டிலிருந்து, குத்தகையிலிருந்து, வாடகையிலிருந்து எவ்வளவு வரும்.(ஏராளம்) எவ்வளவு வேலைக்காரர்கள், நான் மெட்ராஸ் போனதும் செய்ய வேண்டியது என்ன? எஸ்டேட் விவகாரங்களில் தலையிட வேண்டியதே இல்லை. கிளப் போகலாம். சினிமா போகலாம். ஹேர் ஸ்டைலை மாற்றிக் கொள்ளலாம். **Irving Wallace** (இர்விங் வாலஸ் எழுத்தாளர்) படிக்கலாம். இஷ்டமிருந்தால் பாப்பா பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு நண்பரின் கார் கொண்டு வந்திருந்தோம். மலைப்பாதையில் ஏறிச் சரிந்து அந்த அருவி தெரியும் இடத்தில் காரை நிறுத்தி, சற்று நேரம் அருவி சொன்ன பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தோம். அழுக்காக ஒரு சின்னப் பையன் வந்து, "கார் துடைக்கிறேன் சார்" என்றான்.

"வேண்டாம்டா" என்றார்.

அவன் எங்களை விடவில்லை. நாங்கள் சென்ற இடம் எல்லாம் நிழல் மாதிரி துரத்திக் கொண்டே வந்தான்.

தூரத்தில் இன்னும் அழுக்காக, சின்னதாக ஒரு தங்கை வேறு. புன்னகையுடன், "போடா..தொந்தரவு செய்யாதே" என்றார் திரும்பத் திரும்ப. எனக்கு அலுப்பாக இருந்தது.

"பையா உனக்குக் கார் துடைக்க எத்தனை பைசா வேண்டும்?" என்றேன்.

"நாலணா" என்றான். ஹாண்ட் பாக்கிலிருந்து நாலணா எடுத்து, "கார் துடைக்க வேண்டாம், இதைக் கொண்டு ஒழி" என்றேன். "இரு" என்று அந்த நாணயத்தை என்னிடமிருந்து புன்னகையுடன் வாங்கித் தன் பையிலிருந்து கொஞ்சம் நாணயங்கள் எடுத்து அவனிடம் காட்டிப் புன்னகையுடன், "எல்லாம் உனக்குத்தான் எடுத்துக்கோ" என்று சொல்லித் தூரத்தில் முள் புதருக்குள் அவைகளை வீசி எறிகிறார். பையன் ஓடிப்போய் அந்தப் புதருக்குள் பாய்ந்து கை விட்டுத் தேட, "எப்படி" என்று என்னைப் பார்த்து புன்னகை செய்கிறார் ரத்னா.

**(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: ஆர். குமார்.
வயது: 27
முகவரி: 55, ஸ்டேஸ் வீதி, கொழும்பு-14.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எம். நியாஸ்.
வயது: 19
முகவரி: 292 அளுத்வத்தை திகன, ரஜவல்ல.
பொழுதுபோக்கு: வானொலி, சினிமா.



பெயர்: எஸ். சுதன்.
வயது: 24
முகவரி: 16, WYNCH GATE, EAST COTE LANE, NORTHOLT, UB5 4HS, LONDON, U.K.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: வை. சுவர்ணலதா.
வயது: 20
முகவரி: காளி கோவில் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எவ். மன்சூர்.
வயது: 19
முகவரி: 5/168, சவளக்கடை, கல்முனை.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: கே. லாபீர்
வயது: 23
முகவரி: P.O.BOX - 177, CODE NO-01003, AL-JAHRA, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனா நட்பு.

பெயர்: எம். சியாம்.
வயது: 19
முகவரி: 214, பொருத்தட, கொச்சிக்கடை.
பொழுது போக்கு: தொலைக்காட்சி.

பெயர்: முஹமட் அனஸ்.
வயது: 20
முகவரி: 209, நாவலப்பிட்டி வீதி, உலப்பனை.
பொழுதுபோக்கு: பேனாநட்பு.

பெயர்: எஸ்.ஜெகன்.
வயது: 27
முகவரி: DURANTE- MOLINO, Via M. TOSELLI-132, 90143, PALERMO, ITALY.
பொழுது போக்கு: உதைபந்து, பத்திரிகை.

பெயர்: எம். மோகன்.
வயது: 18
முகவரி: புட்டுப்பாவளை எஸ்டேட், தெபுவனை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: பி. பத்மநாதன்.
வயது: 18
முகவரி: கல்கடுவ எஸ்டேட், நேபொட.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: எம். இர்ஷாத்.
வயது: 21
முகவரி: 437, கண்டி வீதி, தெரியாகொன்ன, குருநாகல்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



படிப்பகம்

www.padippakam.com

புதுமைத் தொடர்
அத்தியாயம் 03

# கனவு மெய்ப்பட வேண்டும்

**தமிழகத்தின் புதுமை எழுத்தாளர் பிரபஞ்சன் படைத்த சிறந்த கதைகளில் ஒரு முத்து இது! பெண் என்பவள் வெறும் ஜடமல்ல; உணர்ச்சிகள் உள்ள மனுஷி என்பதை உணர்வுபூர்வமாக— அற்புதமான நடையில் தரும் படைப்பு இது!**

– பிரபஞ்சன் –

அந்த இளைஞன் ஓடிச் சென்று ஒரு ஸ்டூலைக் கொண்டு வந்து, அதை உயர்த்தி அவளிடம் தர, அதன் உதவியால் மதிலைத் தாண்டி இறங்கினாள் சுமதி. அந்த இளைஞன் ரொம்ப சாதாரணமாக மதிலேறிக் குதித்து அந்த ஸ்டூலை எடுத்துப் போட்டு மீண்டும் இந்தப் பக்கம் குதித்து வந்தான்.

பெரியவர் பத்து ரூபாய்களாக ஒரு நூறு ரூபாயைக் கொண்டு வந்து அவளிடம் நீட்டினார்.

"பத்து ரூபா போதும்" என்றவள், மிகுதியை அவரிடமே திருப்பிக் கொடுத்தாள். அந்த இளைஞனைப் பார்த்து,

"தம்பி... என்னை ஸ்டேஷன் வரைக்கும் கொண்டுபோய் விடமுடியுமா?" என்றாள், சுமதி. அவன் பதில் சொல்லாமல் விரைந்து சென்று, ஸ்கூட்டரைக் கிளப்பினான். அந்தப் பெரியவருக்கும், அம்மைக்கும், மாமிக்கும் கைகூப்பினாள் சுமதி. மாமி சுமதியைக் கட்டிக் கொண்டு தேம்பினாள்.

"எவ்வளவு அழகா இருக்கே. எவ்வளவு படிச்சிருக்கே. எவ்வளவு பெரிய உத்தியோகம் பண்றே. என்ன இருந்து என்ன! பொண்ணுன்னு உலகத்தில் பிறந்திட்டாலே, கண்ணீரும் அவமானமும்தான் மிச்சம்னு நம்ம தலையில எழுதிட்டான் ஆண்டவன்." என்றபடி அந்த மாமி சுமதியைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

மழைவிட்டு, வெயில் வந்தமாதிரி, சுமதியின் மனம் பாரம் இறங்கி, அவளுக்கே உரித்தான தைரியம் அவளுக்குள் வந்து சேர்ந்தது.

அந்த இளைஞனின் பின் சுமதி அமர்ந்தாள். ஸ்கூட்டர் கிளம்பி ஓடிற்று.

நேற்று மாலை நடந்தது அது.

✤ ✤ ✤

சுமதி அலுவலகத்தில் அமர்ந்து இருந்தாள். எந்த நேரமும் தலைமைச் செயலாளர் தன்னைப் பேச வரும்படி கூப்பிடலாம் என்கிற சூழ்நிலையை எதிர்பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். பிரதமர் அடிக்கடி இப்போதெல்லாம் தமிழ்நாடு வருகை வருவதையொட்டி, தலைமைச் செயலகம் அவ்வப்பொழுது தன் உறக்கத்தைத் துறந்து விழித்துக் கொண்டிருக்கும்படியாகிவிட்டிருந்தது.

சுமதி தன் ஸ்டெனோவை அழைத்து 'டிக்டேக்' செய்து கொண்டிருந்தாள்.

அப்போது டெலிஃபோன் ஒலித்தது.

சுமதி ஃபோனை எடுத்தாள்.

எதிர்முனையில் கணேசன்.

"மணி என்ன?" என்றான் கணேசன்.

சுமதி தன் கை வாட்சைப் பார்த்து "ஆறு பத்து" என்றாள்.

"இன்னும் ஆபீசில் என்ன வேலை செய்து கிழிக்கிறாய்?"

"வந்துங்க..."

அவள் தொடங்குவதற்குள் அவன் குறுக்கிட்டான்.

"தோ பார். அஞ்சு மணியோடு உன் ஆபீஸ் முடிந்து விடுகிறது தானே? அப்புறம் எவனோடு அங்கே குலாவுகிறாய்?"

சுமதி ஸ்டெனோவிடம் "நீ அப்புறம் வா" என்று கூறிவிட்டுப் பேசத் தொடங்கினாள். அவள் அவ்வாறு சொன்னது, ரீசிவரை மூடிக்கொண்டுதான் எனினும், அது அவனுக்குக் கொஞ்சமாகக்கேட்டிருக்க வேண்டும்.

"எவனை அப்புறமாக வரச்சொல்கிறாய்?"

"ஸ்டெனோவைதாங்க."

"சும்மா பொய்சொல்லாதே. உன்னை மட்டுமா, உன் பரம்பரையையே எனக்குத் தெரியும்டி." என்று சிரித்தவன் சொன்னான்.

"நீ உடனே புறப்பட்டு 'சத்யம்' தியேட்டர் வாசலுக்கு வருகிறாய்... உடனே, உடனே, படம் ஆறரைக்கு."

போனை அவன் வைத்தது கேட்டது.

அவன் எப்போதும் இப்படித்தான். சுமதி உடனே கிளம்பி அந்தச் சினிமாவுக்கு, அது தொடங்குவதற்கு முன் சென்று சேரா விட்டால், அவன் அன்று இரவு ராட்சசனாகி விடுவான் என்பதை அவள் அறிவாள். அன்று அவள் பெறப்போகும் அறைகளுக்கும், அடிகளுக்கும் கணக்கே இருக்காது.

அவள் தலைமைச் செயலாளரின் உதவியாளருக்குப் ஃபோன் செய்தாள்.

"என்னம்மா?" என்றது எதிர் முனைக் குரல்.

"நான் அவசரமாக ஒரு இடத்துக்குப் போகணும்."

"என்னம்மா...சி.எஸ். உங்களை உடனே வரச் சொல்லி இப்பத்தான் என்னிடம் சொன்னார். உடனே வாங்க..."

ஸ்டேனோவைக் கூட்பிட்டு அச்சிட்டிருந்த குறிப்புகளை வாங்கிக் கொண்டு, தலைமைச் செயலரின் அறைக்குள் நுழைந்தாள் சுமதி. மீண்டும் அவள் வெளியே வருகையில் மணி ஏழு முப்பது ஆகியிருந்தது. வீடு வந்து சேரும்போது மணி எட்டுக்கும் மேலாகியிருந்தது. பெல்ட்டை உருவிக் கொண்டு வாசலில் நின்றிருந்தான் அவன்.

வீட்டுக்குள் காலை வைக்கும் முன்பாகவே உடம்பில் சரமாரியாக விழத் தொடங்கின அடிகள்.

"ஐயோ...ஐயோ..." என்று அலறுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை அவளால். டிரைவரும், எதிர்வீட்டுக்காரர்களும் திகைத்துப்போய் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்கள்.

✶✶✶

ஸ்கூட்டர் ரயில் நிலையத்தில் போய் நின்றது.

"ஜாக்கிரதையாப் போங்க சிஸ்டர்." என்றான் அந்த இளைஞன்.

"ரொம்ப தாங்க்ஸ் தம்பி" என்று சுமதி அவனைக் கைகூப்பி வணங்கினாள்.

அவன் சென்றுவிட்ட பிறகே அவள் ஸ்டேஷனுக்குள் நுழைந்தாள்.

கௌண்டருக்குள் கையை நுழைத்து, தான்போகவேண்டிய ஊரைக் குறிப்பிட்டு "ஒரு டிக்கெட்" என்று பணத்தை நீட்டினாள்.

அவள் போக வேண்டிய வண்டி ஐந்து நிமிடங்களுக்கு முன்தான் போய் இருந்தது...

"ஐயோ... அடுத்த வண்டி எப்போங்க?" என்று பதறியபடி கேட்டாள், சுமதி.

"எட்டு நாற்பதுக்கும்மா" என்ற அந்த டிக்கெட் குமாஸ்தா விட்ட உறக்கத்தைத் தொடர்ந்தார்.

"சரி அதுக்குத்தான் டிக்கெட் கொடுங்க" என்றாள். டிக்கெட்டைப் பெற்றுக்கொண்டு திரும்பினாள்.

தூரத்தில் ஒரு காரின் விளக்கொளி தெரிந்தது. அவள் காதுக்கு நன்கு பழக்கப்பட்ட ஹாரன் ஒலி கேட்டது. அது கணேசன் பயன்படுத்தும் காரின் ஹாரன்தான்.

விதிர்விதிர்த்துப்போய் நின்றாள் சுமதி.

சுமதிக்குத் தெளிவாகத் தெரிந்தது.....

அந்தக் காரில் வந்து இறங்குபவன் கணேசனாகத்தான் இருக்க வேண்டும் என அவள் யூகித்தாள். அப்படித்தான் நடந்தது. சுமதியின் உடம்பு நடுங்கியது. பனி பெய்து கொண்டிருந்த அந்த இரவு. ரயில் நிலையக் கூரையை நனைத்து நீராய்க் கொட்டிக் கொண்டிருக்கிறது. ரயில் பாதையை நெருக்கிப் போட்டிருந்த சரளைக் கற்கள் நனைந்து கன்னங்கரேல் என்று ஆகி, தூரத்து மின் விளக்கில் மினுங்கியது. எனினும் சுமதிக்கு வியர்த்தது. குப்பென்று உடம்பில் வியர்வை பெருக்கெடுத்து அவள் ஆடையை நனைத்தது. கணேசன் உருவில் அவளுக்கு நேரப் போகும் ஆபத்து விளங்கிவிட்டது. கணேசன் அவளைப் பார்க்க நேர்ந்தால், அந்த இடத்திலேயே பெல்ட்டை அவிழ்த்துக் கொண்டு உடம்பெல்லாம் இரத்தம் பெருக்கெடுக்க அடிக்கத் தயங்க மாட்டான். தலை மயிரைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துப் போய் வண்டிக்குள் தள்ளுவான். அப்புறம் வீடு என்கிற நரகம் என்பது ராட்சஸர்களின் பூமி. எரி நெருப்பில் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பிரை, மனிதர்கள் தள்ளப்படும் அசல் மயானம்.

சுமதி நரகத்திலிருந்து தப்பிக்கவேண்டும்.

அவள் அவசரம் அவசரமாகச் சுற்றுப் புறத்தை ஆராய்ந்தாள். தூரத்தில் இருள் அடர்ந்திருந்த பகுதியை நோக்கி ஓட ஆரம்பித்தாள். நீண்ட பேனாமுட்களை நட்டு வைத்தாற்போன்ற இரும்புக் கிராதி போட்ட தடுப்பை ஒட்டி வந்து நின்றாள். தடுப்புக்கு வெளியே ஒரு கூட்ஸ் வண்டி நின்றிருந்தது தெரிந்தது. இரும்புத் தடுப்பு ஒன்றுக்கும் மற்றதுக்கும் ஊடே ஒரு மெல்லிய ஜீவன் புகும் அளவுக்கு இடைவெளி இருந்தது அவள் அதிர்ஷ்டம் தான். துணியைப் போல் சுருட்டி அந்த இடைவெளியில் தன்னை நுழைத்தாள். முதுகில் ஏதோ ஒரு இடத்தில் கிழந்தது தெரிந்தது. அதைக் கவனிக்கும் நிலையிலா அவள் இருந்தாள்? வெளியே வந்த சுமதி, இருளில் புதைந்து நின்றிருந்த கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கினாள்.

அங்கிருந்தபடியே ஸ்டேஷன் பிளாட்பாரத்தை நோக்கினாள் சுமதி. கணேசன், பிளாட்பாரத்தில் உலவிக் கொண்டு இருந்தது தெரிந்தது. வெள்ளைச் சட்டையும் வெள்ளைப் பேண்டும் அணிந்து, சட்டையை உள்ளிட்டு மேலே நான்கு விரல் அகல பெல்ட் கட்டியிருந்தான். பெல்ட் என்பது கணேசனைப் பொறுத்தவரை ஒரு அணியும் பொருள் என்பதைக் காட்டிலும், ஆயுதம் என்பதே பொருந்தும். கோபத்தை வெளிப்படுத்துவது என்பது கணேசனுக்குக் கைகளைத் தளரவிட்டு, தன் பலங்கொண்ட மட்டும் அறைவது. அடுத்தகணம், பெல்ட்டை உருவி விளாசுவது.

✤✦✧

அப்போது அவள் கல்வித்துறை அதிகாரியாக இருந்தாள். ஒரு கல்லூரியின் முத்தமிழ் விழாவுக்கு சிறப்பு விருந்தினராக அவள் அழைக்கப்பட்டிருந்தாள். தமிழ்த் துறைப் பேராசிரியராக அவளுக்கு கணேசன் அறிமுகப்படுத்தப்பட்டான். ஆறடிக்குக் குறையாத உயரமும், அதற்குக் குறைவில்லாத உற்சாகமும், வசீகரமான முகமும், நகரத்து வாசனை படியாத வார்த்தைப் பிரயோகமாக அவன் அவளுக்குத் தெரிந்தான். ஏனோ, அவன் கவனிக்கப்படத்தக்கவன் என்று அவளுக்குத் தோன்றினான்

✶➳➳

சுமதி தன்னைச் சாத்தியப்பட்ட அளவில் மறைத்துக் கொண்டு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கணேசன் ஒரு அதிகாரியை ஏதோ விசாரிப்பது தெரிந்தது. அவர் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு ஏதோ சொன்னது தெரிந்தது. பத்து நிமிஷங்களுக்கு முன்தான் ஒரு ரயில் புறப்பட்டுச் சென்ற செய்தியை அவர் அவனுக்குச் சொன்னார்.

அவர் அகன்றதும் கையை உதறிக்கொண்டான் கணேசன். அந்த ரயிலில் அவள் போயிருப்பாள் என்றே நினைத்தான் அவன். அவள் தப்பிவிட்டதை அவன் உணர்ந்தான். ஏமாற்ற உணர்வோடு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான் கணேசன்.

அவள் செல்லவேண்டிய ரயில் வந்து நிற்கும் வரையில் சுமதி அந்த இடத்திலேயே இருந்தாள். பிறகு வெளிப்பட்டுப் பெண்கள் பெட்டியில் வந்து அமர்ந்தாள். வானம் வெளுத்து உலகம் ஒளிமயமாகி இருந்தது. மனம் திக் திக்கென அடித்துக்கொள்ள, ரயில் நிலைய வாயில் படியையே கவனித்துக் கொண்டிருந்தாள் அவள். கணேசன் வந்து விடக் கூடாதே என்று மனதில் தோன்றிய கடவுள்களையெல்லாம் பிரார்த்தித்துக் கொண்டாள் அவள்.

ரயில் நகர்ந்ததும்தான் அவளால் ஓரிடத்தில் உட்கார முடிந்தது. ரயிலின் ஓட்டம் வாழ்க்கை ஓட்டத்தையே ஒத்திருந்ததாக அவள் அடிக்கடி அப்பாவிடம் சொல்வது நினைவுக்கு வந்தது. தன் வாழ்வில் ஒரு அத்தியாயம் முடிந்து மறு அத்தியாயம் ஆரம்பித்துள்ளது என்று அவள் எண்ணினாள். நன்கு சாய்ந்து அமர்ந்தாள். ஓரிரவு முழுக்கவும் தான் உண்ணாமலும் உறங்காமலும், ஓய்வு கொண்டு அமைதி கொள்ளாததும் நினைவுக்கு வந்தது. தனக்கு மட்டும் வாழ்க்கை ஏன் இப்படி அச்சாணி கழன்ற வண்டியாகத் தறிகெட்டு ஓடுகிறது என நினைத்தாள். வினைகள் தம்மைத் தேடி வருவதில்லை; நாம்தான் அதனைத்தேடி ஓடுகிறோம். கணேசனை முதல் முதலாகச் சந்தித்த அந்த நிகழ்ச்சி அவள் நினைவில் தோன்றியது.

விழாவில் கவியரங்கம் ஒன்று நடைபெற்றது. ஒரு மாணவனின் கவிதை அவளை மிகவும் கவர்ந்தது.

*'கிணற்றுத் தவளைகள்*
*வெளி உலகத்து*
*ஆறுகளையோ அலைகடலையோ*
*கண்டதில்லை.*
*கிணறு ஒரு வசிப்பிடம் ஆகுமா?*
*முடியாது. ஓடவும்*
*தத்தித் தாவி*
*விளையாடவும் முடியாது.*
*சூரியக் கிரணம் கூட*
*உள் புகமுடியாத கிணறு.*
*கிணற்றில் நீர் நிறைய.*
*வசிக்க உகந்தது,*
*கதகதப்பும் உண்டுதான்.*
*பாதுகாப்பானதும் கூட,*
*ஒருநாள் கிணறு வற்றும்.*
*தவளைகள் ஒவ்வொன்றாய் இறக்கும்.*
*வேறு ஒரு இடத்தில்*
*வேறு ஒரு கிணறு வெட்ட*
*வருவான் ஒரு கிணறு வெட்டி*
*மீண்டும் ஒரு கிணறு*
*புதிதாய்!'*

எவ்வளவு அழகிய கவிதை என வியந்தாள் சுமதி. பெண்ணுக்கு வீடு கிணறாய் இருப்பதை, பெண்கள் கிணற்றுத் தவளையாய் வாழ நேர்ந்திருப்பதை எவ்வளவு அமைதியாய், அதே சமயம் ஆக்ரோஷமாய் சொல்கிறது இக் கவிதை. **(தொடர்ந்து வரும்)**

**இதுவரை**

**சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்துவைத்தார். சுமதி ஒரு அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறை பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகிறது. ஒருநாள் இரவு சுமதியை அடித்து விரட்டுகிறான்.**

**இனி.....**



---

# வர்ணமிழந்த வானவில்

**அவள் விரல்களை அவன் பற்றியபொழுது அவள் விழிகளில் ஈரம்**

"உன்னையல்லால் வேறொரு பெண்ணை உள்ளத்தினாலும் தொட மாட்டேன்...." வசந்த மாளிகை திரைப்படப் பாடல் வானொலி வழியே வந்தது. டி.எம்.எஸ்ஸின் கம்பீரமான குரல் ரகுவை ஈர்த்தது. அது போலவே பாடல் வரிகளும்.

மெதுவாக வந்து பக்கத்திலமர்ந்து பத்திரிகை புரட்டினாள் ஸப்னா. 'சொல்லி விட வேண்டும் இன்று. எப்படியாவது நான் இதுவரை நினைத்திருந்ததை, நினைத்து வருவதை சொல்லிவிட வேண்டும்!' அவள் மனது எண்ணங்களினால் அலைமோதியது.

கவனித்தான். கவனித்ததை உணர்த்தினான். அவள் விரல்களை அவன் பற்றிய பொழுது அவள் விழிகளில் ஈரம். கண்ணீர் துளிகளாய் வழிந்தோடியது. "என்ன ஸப்னா இது? என்னம்மா? ஏனிது?" அரவணைப்பின் இதம் குரலிலும் தெரிந்தது.

"ரகு....இனிமேலும் என்னோட நீங்க வாழ்றதில அர்த்தம் இல்ல.....இ..... இன்னுங் கொஞ்ச நாளில் என் ரெண்டு கண்ணும் தெரியாமப்போயிடும். பிறகு இந்தக் குருடிய வெச்சிகிட்டு...." அவள் முடிக்க முன்பு அவன் அவளது இதழ்களை மூடினான். "ஏய்....என்ன இது? ஏனிப்படியெல்லாம் பேசி என்னை நோகடிக்கிறே? சொல் ஸப்னா, உருவத்தையும் உடலழகையும் வெளித் தோற்றத்தையும் வெச்சு வந்ததில்ல என் நேசம். உனக்கு எது வந்தாலும் நான் உன்னை விட்டுப்போக மாட்டேன் ஸப்னா. அது என்னால முடியாது."

ரகுவின் குரலில் நெகிழ்வுடன் கூடிய கம்பீரம்; உறுதி. ஸப்னா மௌனித்தாள்.

இனி எதைப் பேசுவது? எப்படிப் பேசுவது? புரியவில்லை. அடிக்கடி அவளுக்கேற்பட்ட தலைவலிகள். பரிசோதித்துப் பார்த்த கணங்களில், எதுவுமில்லை என டொக்டர்கள் கைவிரித்த நிலை. விஷேட நிபுணரை அணுகிய சந்தர்ப்பமொன்றில் நீண்ட பரிசோதனைகளும் யோசனைகளும் செய்து முடிவைக் கூறினார். பார்வை நரம்பில் ஏதோ கோளாறு. கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வையிழக்கப்பட்டு பின் ஒரு நாளில் முழுதுமாக உலகமே இருண்டு விடக்கூடிய சாத்தியமுள்ள கொடூர வியாதி.

சாதாரணமாக இரவுகளிலே இருளைக் கண்டு பயப்படும் மென் மனசுக்காரிக்கு இனியொரு நாளில் உலகமே இருளாயிடும் சோகம், இதைத் தீர்க்க மருந்தில்லை; மாற்று வைத்தியம் இதற்கில்லை என்றார்கள்.

ஸப்னா அதிர்ந்து போனாள். அழக்கூடத் திராணியற்ற கணங்களில் மௌனமாய் வேதனைத் தீயில் வெந்து போனாள். மனதுக்குள் மலையளவு வேதனை என்றாலும் வெளியில் காட்டாது மறைத்து விட்டான் ரகு. அவளைத் தேற்ற வேண்டுமே!



ஷர்மிளா இஸ்மாயில்— கண்டி

உருண்டோடிய காலங்களில் ஸப்னாவின் விதி அவளை ஆட்கொண்டது. ஆரம்பத்தில் என்னவோ ரகு மிகவும் கருணையோடிருந்தான். "என் கண்ணின் பாவையன்றோ கண்ணம்மா....." என்ற வரிகளை முணுமுணுத்தபடி அவளை ஆதுரமாய்க் கவனித்தான். ஆனால் நாளாக நாளாக அவனில் ஏதோ ஒரு மாற்றம். அவள் தடுமாறும் கணங்களில் அவசரமாய் உதவுபவன், அரவணைத்து வழிகாட்டுபவன்- அலட்சியமாய் இருக்க முற்பட்டான்.

செயலிலும் பேச்சிலும் அந்த அலட்சியம் அடிக்கடி..... அவள் அவதானிக்கத் தவறவில்லை. மனது ஹோவெனக் கிடந்து அலறியது. இவ்வளவுதானா? அட, இவ்வளவுதானா உன் நேசம்? உன் நிஜ நேசமென்பது வெறும் நிழல் தானா? தனக்குள்ளே கேட்டு மறுகினாள்.

"இ...இப்படி வாழ்றதில அர்த்தமில்ல ரகு. நாம பிரிஞ்சுடலாம் இல்லியா?" அவன் மௌனமாயிருந்த ஒரு கணத்தில் அவள் கேட்டாள். அவன் மௌனம் கலையவில்லை. நீண்ட நேரத்தின் பின் கேட்டான்: "விவாகரத்தில் உனக்குச் சம்மதமா?" நெருப்பாய்ச் சுட்டன வார்த்தைகள். எப்படி இலகுவாய்க்கேட்டு விட்டான்! பழைய ரகுதானா இது? மலைத்தாள். திகைத்தாள். சமாதானப்படாத மனதைத் தேற்றினாள்.

இது தான் உலகம். இது தான் யதார்த்தம். எதுவும் நிலையில்லை. உறவு, பாசம், பந்தம், காதல், நேசம் எல்லாம் அவ்வளவுதான். கண்கள் மட்டுமல்ல இதயமும் இருண்டு போனதாய் உணர்ந்தாள். முடிந்தது. கனவு போல் கலைந்து போனது, ரகுவோடான வாழ்க்கை.

யாருக்காகவும் காலம்காத்திருக்காது போனது. இனிய ஏப்ரல் மாத காலை வேளையில் ரகுவின் திருமண அழைப்பிதழுடன் தோழி வந்தாள். "பார்த்தியா ஸப்னா?" குரலில் சிறிது அங்கலாய்ப்புடன் கேட்டாள். "என்னால் தான் பார்க்க முடியாதே...!" வேதனையாய்ச் சொல்லிச் சிரித்தாள் ஸப்னா.

உதடுகளைக் கடித்துக் கொண்டாள் தோழி. தொலைதூர வானில் தெளிவாய் ஒரு வானவில். முற்றத்துச் செடியில் சிவப்பாய் பல ரோஜாக்கள். தோழியின் கண்ணில் வழியும் நீர். எதையுமே காணாது தன் பாட்டில் யோசித்துக்கொண்டிருந்தாள் ஸப்னா. ●



படிப்பகம்

www.padippakam.com

# கலங்கரை விளக்கம்



**பாண்டியூர் கனி**

உதயசூரியன் விழிக்குமுன்னரே அந்தத் தையல் நிலையம் விழித்துக்கொண்டது. முதல் நாள் அந்திப் பொழுதிலேயே அலங்கரித்துவைத்த வரவேற்பறை, மலர்ச்சாடிகள், திரைச்சீலைகள் எல்லாம் மீண்டும் சீர்செய்யப் பட்டன. அங்கே பணிபுரியும் யுவதிகள் ஒவ்வொருவரும் தங்களை அலங்கரித்துக் கொண்டு காத்திருந்தார்கள்.

வாசலில் கார் வந்து நின்று கதவு திறந்தது. இறங்கினாள். இருளுக்கும் ஒளிக்கும் இடைப்பட்டது போலொரு நிறம். சாயம் பூசாத உதடுகள், கன்னத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் பருக்கள் வந்த தடங்கள். சாதாரண வொயில் சேலையில் வந்து கொண்டிருந்தாள். மாலைகள் இட்டு வரவேற்றனர். அவள்– நிதர்ஷனா– அந்தத் தையல் நிலையத்தின் தலைவியவள்.

வரவேற்புகள் முடிவடைந்ததும் நிலையத்தில் வழமையான தையல் வேலைகள் ஆரம்பமாயின. அவற்றைப் பார்வையிட்டுக் கொண்டு வந்தாள். நாற்பது வயதைத் தாண்டிவிட்ட நிதானத்தோடு நடந்துவந்தவள் சட்டென்று நின்றாள். அந்தப்பார்வை அவள் கால்களை நகரமுடியாமல் கட்டிப்போட்டது. அந்த முகம் அவள் உள்ளத்தில் புதைந்து கிடந்த நினைவுச் சருகுகளை ஒரு புயலைப் போல கிளப்பிவிட்டது. துடைக்கவிரும்பாத குழந்தையின் முத்தத்து எச்சிலைப்போல, அவள் இன்னும் தன் இதயத்தைவிட்டு அகற்றிவிடாத அந்த உருவத்தை நினைவுபடுத்தியது. சற்றுநேரம் அந்தப் பார்வையும் நிதர்ஷனாவின் நினைவுகளும் கோர்வையாகிப் பின் கழன்றுகொண்டன.

> சற்று நேரம் அந்தப் பார்வையும் நிதர்ஷனாவின் நினைவுகளும் கோர்வையாகிப்பின் கழன்றுகொண்டன.

முகாமையாளரின் அறைக்குள் வந்தவள் நிலையத்தின் கணக்கு வழக்குகளை மேற்பார்வை செய்து முடித்து விட்டு, தையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பெண்களை தனித்தனியே அழைத்து வினவினாள். குறை நிறைகளைக் கேட்டறிந்தாள். இறுதியாக அவள்... இன்னும் உலகம் புரியாத மிரட்சிப் பார்வையோடு வந்து நின்றாள்.

நிதர்ஷனா அவளைப் பார்த்துக் கொண்டே "இருங்கள்" என்றாள். அந்த வார்த்தையை எதிர்பார்க்காதவள்போல கண்களில் ஆச்சரியம் காட்டிக்கொண்டு அமர்ந்தாள்.

"பெயர் என்ன?"

"தானா சுரேனி!" குழந்தைத்தனமாக பதில் வந்தது.

"தானா என்றால்?" நிதர்ஷனாவின் குரலுக்குள்ளே ஓர் ஆவல், ஆதங்கம் தொங்கிக்காணப்பட்டது.

"தயாளன்-சுரேனி!" அந்தப் பதிலில்.... நிதர்ஷனாவின் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. சினிமாவின் சந்திப்புக்களைப் போலல்லவா இது நிகழ்ந்துவிட்டது. இவள் நினைவுபடுத்திய முகம் தயாளனுக்குரியது. தயாளனின் மகளா இவள்? சற்றே நிலை குலைந்துபோனவளாய், சுரேனியைப் போகச் சொல்லிவிட்டு தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்தாள்.

கனடாவிலிருந்து வந்தவள் என்பதற்காகவோ அல்லது நிலையத்தின் சொந்தக்காரி என்பதற்காகவோ அந்த அறை வெகு சிரத்தையுடன் அலங்கரிக்கப்பட்டிருந்தது. படுக்கையில் சாய்ந்தாள். பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் சமுதாயத்தில், சுழிவு நெளிவுகளை அறியாத பருவத்தை அசை போட்டாள். ஒரு மெல்லிய பூவேபோல மலர்ந்து முள்ளாய்த் திரிந்து போன அவனது அன்பை அசைபோட்டாள். சோகங்களைச் சுகமாக்கிக்கொண்டு வாழ்க்கையை வசமாக்கிக் கொண்ட தன்னை நினைத்துப்பார்த்தாள்.

நிதர்ஷனா வந்ததிலிருந்து தையல் நிலையம் மெருகேறிக் காணப்பட்டது. இங்கிருந்து அனுப்பப்படும் ஆடைகள் கனடா நகரக் கடைகளில் காட்சிக்கு வைக்கப் பட்டிருப்பதை நிலையப்பெண்களுக்குக் கூறினாள். தையலின் விளக்கங்களைக் கூறி அவர்களுக்கு ஊக்கம் கொடுத்தாள். அவர்களின் மகிழ்ச்சியைப் பார்த்து தனக்குள்ளே பூரித்துப்போனாள்.

நிதர்ஷனா மீண்டும் கனடா செல்ல வேண்டிய நாள் நெருங்கியது. சுரேனியுடன் அவர்களுடைய வீட்டிற்குச் சென்றாள். சின்னதாய் ஒரு ஓட்டுவீடு. நிதர்ஷனாவை சிரித்தமுகத்தோடு வரவேற்றாள் சுரேனியின் தாய். உள்ளே நுழைந்தவளின் விழிகள் அவசரமாகவே தேடின தயாளனை. வந்தான். அமர்ந்தாள் அவனுக்கு எதிரே. கண்டதும் நிதர்ஷனாவின் இதயத்தினுள் பட்டாசுகள் வெடித்துச் சிதறின.

'தயாளன்! நீங்களா இது?' என்று கேட்க நா துடித்தது அவளுக்கு. பல வருடங்களுக்கு முன் அழகாய், கம்பீரமாய், அவளை வசீகரித்து, நேசித்து, திருமணம் என்றதும் அந்தஸ்து, சொத்து இல்லையென்று தூஷித்துவிட்டு, பெற்றோர் பார்த்த பெண்ணை மணந்து கொண்டு, இவள் வாழ்க்கையை முடித்துவிட்டு தன் வாழ்க்கையைத் தொடங்கிய தயாளனா இது? அவளுடைய மனம் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்க....... "தயா ஏன் இப்படி.... மெலிந்து..." வசனத்தை அவள் முடிக்கவில்லை.

அவன் பதில் சொன்னான், சிறுநீரகத்தில் நோய் கண்டது முதல் வேலை பறிபோனது, வறுமை வந்தது, வீடு விற்றது, இன்னும் நோய் தீராமல் மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவதற்கு இலட்சக்கணக்கில் பணந்தேவையென்பது வரை சொன்னான். தலை நிமிர்ந்து நிதர்ஷனாவைப் பார்க்கவில்லை. அவனைப் பார்க்க அவளுக்குத் தைரியமில்லை.

நிதர்ஷனா அவனைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். 'உன்னால் கைவிடப்பட்டதும் மனமொடிந்து இலக்கில்லாமல் சேர்ந்து கன்னியாஸ்திரிகளின் உதவியால் கனடாவிற்குப் போய், அங்கிருந்து ஒரு தையல் நிலையத்தை இங்கே ஆரம்பித்து, பல பெண்களுக்குத் தொழில் வழங்கிவிட்டு, தனிமரமாய் நிற்கும் கலங்கரை விளக்கம் நான். நீ என் வாழ்க்கை சிதைத்து விட்டாலும் நான் ஒடிந்துவிடவில்லை. எனக்கென்று யாருமில்லை. ஆனால் பலருக்காக நானிருக்கிறேன். நீ தந்த ஏமாற்றம் என்னை அழித்து விடவில்லை.

இன்று இந்தத் தையல் நிலையம், இதன் வளர்ச்சி எல்லாவற்றுக்கும் அடித்தளமே நீதான். உன்மீது எனக்குக் கோபமில்லை. நான் வாழாவிட்டாலும் நீ வாழ வேண்டும். ஏனென்றால் நான் இன்னும் உன்னை நேசிக்கிறேன்.' நிதர்ஷனாவின் இதயம் ஊமையாய்ப் புலம்பியது. கண்கள் கலங்கிக்கலங்கி உறைந்து போயின.

இருக்கையை விட்டு எழுந்தாள்.

"தயா உங்கட எக்கவுண்ட் நம்பரத் தாங்க. கிட்னி மாத்துறதுக்கு ஒழுங்கச் செய்யுங்க. நான் காசனுப்புறன்," என்றவளிடம் உதடுகள் துடிக்க ஏதோ சொல்ல வந்த தயாளன் நிதர்ஷனாவின் முகத்தைப் பார்த்ததும் குனிந்துகொண்டான்.

# அஞ்சலா ஒரு அச்சு வெல்லம்



**கல்வியூர்ச் சந்திரன்**

அப்பொழுது நேரம் மாலை ஐந்து மணி. சுபநேரத்தில் சுதனிடம் வீட்டுத் திறப்பினைக் கொடுத்து, "இது உன் வீடு போல அழகா, ஒழுங்கா, பத்திரமா வச்சிருந்தா அதுபோதும்!" என்று கூறிவிட்டு வீட்டுக்கார அம்மாவும் அவளது பேத்தி அஞ்சலாவும் தாங்கள் குடியிருக்கும் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் போகும் திசையை சுதன் கதவு நிலையில் கையைப் பதித்தவாறே பார்த்துக்கொண்டு நின்றான்.

சுமார் பத்து யார் தூரம் அவர்கள் போயிருப்பார்கள், அஞ்சலா சுதனைத் திரும்பிப் பார்த்து மெதுவான ஒரு புன்னகையைச் சமர்ப்பணஞ் செய்துவிட்டு மீண்டும் தன் பாட்டியுடன் நடையைத் தொடர்ந்தாள்.

ஆயிரம் வர்ணத்து மலர்கள் அவன் மேல் தூவப்பட்டது போன்ற நிலை இப்போது சுதனுக்கு.

மாலை ஏழு மணியாகி விட்டது. "சுதன் அண்ணா இண்ணைக்குத் தான் புதுசாக் குடியிருக்க வந்திருக்கீங்க நைற் சாப்பாடு எப்படி? கடைப்பார்சலா? இல்லை.... ஏதாவது சமாளிப்பா?" என்றவாறே வீட்டு யன்னல் ஓரத்தில் வந்து நின்று சிரித்தவாறே கேட்டாள் அஞ்சலா சுதனிடம்.

"இல்ல தங்கச்சி இந்த ஏரியாவுல பிரச்சின அதிகமெண்டு நான் கேள்விப்பட்டிருக்கன். மாலை நேரத்தில வெளியில போறது அவ்வளவு பாதுகாப்பு இல்ல எண்டதால வரும்போதே நான் பாணும், மாஜரீனும் எடுத்து வந்திருக்கன். இரவைக்கு ஒரு மாதிரிச் சமாளிக்கிறது தான். அதோட எனக்கு இன்னும் ஜொப் அடையாள அட்டையும் கிடைக்கவில்ல," என்றான் சுதன்.

அஞ்சலா மீண்டும் க்ளுக் என்ற சிரிப்புடன் துள்ளி ஓடும் புள்ளிமான் போல தன் வீட்டுக்குப் போனாள்.

எடுத்ததற்கெல்லாம் புன்சிரிப்பு. இவளுக்கு ஏதும் 'அங்கொடை' வருத்தமோ? என்று தன் தலையைக் குழப்பினான் சுதன்.

அவன் பிறந்த வீட்டில் மட்டுமல்ல, எங்கு சென்றாலும் இருட்டில் தான் உறங்குவான். போர்வையின் உதவியும் அவனுக்குத் தேவையில்லை. யன்னல்களைக் கூடத் திறந்து வைத்துக் கொண்டே இரவில் தூங்குவது சுதனின் வழக்கம்.

புதுக்கட்டில், புது வீடு, அதனால் புதிய இரவு. புரண்டு புரண்டு படுத்த சுதன் மறுநாள் காலை ஏழு மணிக்குத்தான் நித்திரையால் எழும்பினான்.

யன்னலின் ஊடாகப் பொழுதைப் பார்த்த சுதனுக்கு, எதிரே தங்கள் வீட்டில் நின்று தலைசீவிக்கொண்டு தன் அறையைக் கவனிக்கும் அஞ்சலா சிரித்தவாறே தன் வேலையில் ஈடுபடுவது வெறுப்பாகத் தென்பட்டது.

அவள் பார்வையைத் தவிர்க்க தலையைக் குனிந்துகொண்ட சுதனுக்கு தன் அறையின் யன்னல் உட்பகுதியில் ஓர் எவர் சில்வர் கிண்ணம் மூடப்பட்டிருந்ததையும், அதனை மூடிய அந்த மூடியின்மேலே ஒரு வெள்ளை ரோஜா மலர் வைக்கப்பட்டிருந்ததையும், காண அவன் ஒரு கல்லின் நிலைபோல் விறைத்துவிட்டான்.

இது அஞ்சலாவின் வேலைதான் என்று சுதனின் மனம் அடித்துச் சொல்லிக் கொண்டிருந்தது.

அவன் அந்த வீட்டுக்கு வந்தபின் தொடர்ந்து நாலு நாட்கள் பசுப்பாலும் வெள்ளை ரோஜா மலரும் காலையில் கண் விழிக்க யன்னலின் உட்புறம் அவனுக்குத் தரிசனங் கொடுக்கத் தவறவில்லை. அவை மாயமோ? மந்திரமோ? பயமின்றிப் பாலை அருந்தினான். ரோஜாமலரை அதே யன்னலில் விட்டு வைத்திருந்தான்.

இப்பொழுதெல்லாம் அவனுக்குப் புதிய சிந்தனை. 'இந்தவேலை எதற்காக? நிச்சயமாக அஞ்சலா என்னைக் காதலிக்கிறாளா? அவள் சிரிப்பே....? ஆண்டவா' என்றான் சுதன்.

நாளைக் காலை அவளைக் கையும்மெய்யுமாகப் பிடிக்கணும்.... மூண்டு மணிக்கே எழுந்து, விக்கட் காப்பாளர் போல யன்னல் ஓரத்தில் தன் கைகளைத் தயார் நிலையில் வைத்திருந்தான் சுதன்.

அந்தநேரம் வந்துவிட்டது. அதோ பூவைக் கையில் எடுத்தவன் கிண்ணத்தின் மூடியைத் திறந்தான். சந்தேகமில்லை– பசுப்பால்தான் அது என்பதை உணர்ந்தான். பாலைக் குடிக்கலாம்: அது ஓரளவுக்கு நியாயம். ரோஜாமலர் எதற்கு? அவனால் விடையே காணமுடியவில்லை. அடுத்த வீட்டை யன்னலால் பார்த்தான். "ஸ்கூலுக்குப் போயிற்று வாறன்" என்றுவிட்டு தன் புன்முறுவல் சிரிப்புடன் கையை அசைத்துக் காட்டிவிட்டுச் சென்றுகொண்டிருந்தாள் அஞ்சலா.

> நாளைக் காலையில் அவளைக் கையும் களவுமாகப் பிடிக்க வேண்டும்! மூன்று மணிக்கே எழுந்தான்.

பாற்கிண்ணம் வைக்கப்பட்டுவிட்டது. மூடியும் மூடப்பட்டுவிட்டது.... ரோஜா.... அந்தப் புதிய வெள்ளை ரோஜா மலரும் வைக்கப் பட்டுவிட்டது. இப்பொழுது சுதன் அந்தக் கைகளிரண்டையும் பிடித்துவிட்டான்.

அவளின் முகத்தைப் பார்க்காமல் குனிந்தபடியே...."இதோபார் அஞ்சலா! நான் முதல் காதலிலேயே முறிஞ்சவன், இன்னுமொரு காதல் வந்தா அழிஞ்சே போயிடுவென். குடியிருக்க வந்த எனக்கு நீ பாலும் பூவுந்தந்து என் வாழ்க்கையை பாழாக்கச் செய்திடாதே. தொடர்ந்து நீ இப்படி நடந்தா நான் இங்கிருக்கிறதையும் நிறுத்திட்டுப் போறதுதான் முடிவாவரும்!" சுதன் பேசிக்கொண்டிருக்கையிலேயே மறுமுனையிலிருந்து அழுகையோடு.....

"தம்பி சுதன்! நீ நினைக்கிறது தப்புப்பா.... அஞ்சலா நல்லவள்.... இதோ பாரப்பா.... என் மகன், சிறிமுருகன் எண்டு பேரு: பேப்பர், புத்தகமெல்லாம் நிறையப் படிப்பான். சுமார் ரெண்டு வருசத்துக்கு முன்னால ஒரு அழகுக் குறிப்பொண்ட வாசிச்சிப்போட்டு, என்னிட்ட வந்து தினமும் தனக்கு காலையில ஒரு கப் பாலும் ஒரு வெள்ளை ரோஜாப்பூவும் தவறாமத் தரணும் என்றான். அதுமட்டுமில்ல: அப்படித்தந்தாதான் வெள்ளையாக மொழுமொழுப்பா வருவனாம் என்றான். நான் தினமும் அப்படியே செய்துவந்தன். இப்போ என் புள்ள கப்பலில போய் கரீபியன் கடலோட சங்கமிச்சுட்டான்! இப்பவெல்லாம் அவன் தினமும் வந்து எங்கிட்ட பாலும் பூவும் கேட்டுக்கிட்டே இருக்கான். அதுவும் கனவுல. அதுதான் அவன் இருந்த அந்த ரூமில அவன் ஞாபகமா நான் அதையெல்லாம் வச்சிட்டிருக்கன்." அழுதுகொண்டே சொல்லிக் கொண்டிருந்தாள். அஞ்சலாவின் தாய்.

# பரிதவிப்பு




**ஆத்மாஜா றூத் சந்திரிக்கா**

> "ஏன் சாத்வீ.. அவை சும்மா மாட்டேல்லையே முப்பது இலட்சமெல்லோ தந்தவை"

ஒரு நிர்ப்பந்தமான சந்திப்பு. இருவர் முகத்திலும் அதிர்ச்சி ரேகைகள் வியாபித்தன. சஞ்சு விழியகல ஆச்சரியம் தாவினாள். சாத்வீகன் நிலைதடுமாறிப்போனான்.

'சிவிக் காடின் சென்றரில்' நடந்த உறவினரொருவரின் திருமணத்திற்கு போய் விட்டுத் திரும்பும்போதுதான் சாத்வீகனைக் கண்டாள்.

இது சாத்வீ தானா? அவனே தானா? திடுக்குற்றாள். தளர்ந்த நடை, போதை தலைக்கேறிய கிறுக்கு; ஊதிய பலூன் போன்ற தேகம்; ஒரு தொன் சோகத்தைச் சுமக்கும் முக தேஜஸ்; 'ஓ நோ..' அவளால் அவனுடைய கனேடியப்பிரதியை ஜீரணிக்கவே முடியவில்லை. குழம்பினாள்.

இருவரிடையேயும் அகத்தே மௌனப் புயல். "என்னப்பா சாத்வீகன்! உதென்ன கோலம்?" அவளே ஆரம்பித்து வைத்தாள்.

"ஏன்... நான் நல்லா உருமாறிப் போட்டனே...? ஏன் அப்பிடிச் சொல்றாய் சஞ்சு?"

"அகத்தின்ரை அழகு முகத்திலையெல்லே தெரியுது-எங்க பிறின்ஸஸ்...? உங்கடை இங்கிலாந்து இளவரசி வரேல்லையே?"

"இல்ல அவளுக்கு உதுகளுக்கு வர்றதில இஷ்டமில்ல நான்தான் றிச்மண்ஹில் போட்டு நேரா இந்த வெடிங்குக்கு வந்தனான்."

"ஏன் கிளப்புக்கு போட்டாவே மனுஷி?" சுருக்கென்று தைக்க மௌனமாகிப்போனான் சாத்வீகன்.

"மனுஷிலயும் பிழைசொல்லேலாதுதானே? அவ சின்னன்லையிருந்து லண்டன்லை வளர்ந்து படிச்சுப் பேந்து கனடாக்கு குடியேறினவ. அவட்டை எங்கட பண்பாடுகளைத் திணிக்கிறது வலு கஷ்டமெல்லே?" என்றாள்.

"நான் தான் இளிச்சவாயன். நல்லா மாட்டுப்பட்டுக்கொண்டு திணர்றன்!"

"ஏன் சாத்வீ! அவையுங்களச் சும்மா மாட்டேல்லையே...? முப்பது லெச்சமெல்லே தந்தவை-காசாகமட்டும். பத்தும் இருபதுக்கொரு ட்ரவுண் வீடுமெல்லே உங்கடை தாயவைக்கு கொடுத்தவை? மூண்டு தம்பிமாரையும் ஸ்பொன்ஸர் செய்தவை....."

"அது தான் சொல்லுறன்-அவையெல்லாம் வீணெண்டு."

"சுடலை ஞானமெல்லே சாத்வீ!"

"நீர் குதர்க்கமாய்ப் பேசியே என்ரை மிச்சச் சீவனையும் எடுத்துப்போடுவாயப்பா: அது சரி... இப்ப என்ன செய்யுறாய்?"

"நான் கலியாணத்துக்காக வரேல்ல கனடாக்கு! கோல்டன்ல 'ஜேர்ணலிஸம் ஸ்கொல்' ஒண்டு கிடைச்சுது. அதோட நோத்யோக்ல ஒரு கொண்பிறன்ஸ் முடிச்சுப் போட்டுத்தான் ஒண்டார்யோ-ரொறண்டோ பக்கம் விஸிற்றிங் செய்ய வெளிக்கிட்டனான். என் கேஜ்மென்ற் முடிஞ்சுது. குயின்ஸ் பாக் மூவாட் புளொக்ல தான் அவர் இன்சூரன்ஸ் செக்ஷன்ல வேக் பண்றார்-என்ரை பஜ்மேற் தான்!"

"என்ன கனேடியனோ ஆள்?"

"சே வடமராட்சியாள்... புலம் பெயர் இலங்கைத்தமிழன்!"

"ஓ" சாத்வீகன் சிந்தனை வயப்பட்டான். 'ஐந்து ஆண்டுகளுக்கு முன் யாழ் மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறும்போது கண்ட சஞ்சுவுக்கும் இப்போது நிற்பவளுக்கு மிடையே எத்தனை முரண்பாடுகள்!'

அவன் மருத்துவபீடத்திலிருக்கும் போது அவள் கலைப்பீடத்தில் இருந்தாள். இருவரும் ஒரே கிராமத்தவர்கள் என்ற ரீதியில் வளர்ந்த நட்பு... வலுப்பெற்றது. ஒரு மென்மையான, அழகான, நளினமான அந்த சஞ்சுவின் அத்தனை இயல்புகளாலும் சாத்வீகன் ஈர்க்கப்பட்டான். நாளாக ஆக அந்த ஈர்ப்பே உயிர் மூச்சாகிப் போனபோதுதான் ஒரு பேரிடியிடித்தது.

சாத்வீகன் அதிர்ந்துதான் போனான். "சாத்வீகா உனக்கு அடிச்சிருக்கிற யோகம் ஒருத்தனுக்கும் அடியாதடா மகனே... ஓமெண்டு ஒரு வார்த்தை சொல் ராசா! நாங்கள் அத்தனை பேரும் இறக்கை கட்டிப் பறக்கலாம்!" என்ற தாயை முறைத்தான்; பேசினான்; தர்க்கம் பண்ணினான்.

"சின்னன்லேயே அவை லண்டன் போட்டினம். பெரிய கோடீசுவரரெல்லே, இப்போ ஒண்டாரியோலயும், கியுபெக்லயும், கில்பன்லையும், நிறையத் தோட்டம், காணி சொத்து எண்டு எல்லாரும் சொல்லுகினம். ஒரேயொரு பெட்டைதானே? பெட்டையும் நல்ல லெட்சணம். அம்மன் விக்கிரகம் போலையடா மோன்." இப்படிச் சொல்லிச் சொல்லியே அவன் உறுதியைத் தளர்த்தி எதிர்காலத்தைத் திசை திருப்பி விட்டார்கள்.

பணம், சொத்து, சுகம், வசதியான வாழ்வு.. சாத்வீகன் சில லெட்சங்களுக்கு விலைப்பட்டுப்போனான்.

இறுதியாக சஞ்சுவைச் சந்தித்த நினைவு விரிந்தது "போரின்ர அறுவடையாய் புலம் பெயர்வுகள் தான் மிஞ்சிப் போட்டுது சாத்வீ. வடமராட்சியின்ர நிலமையில புலம் பெயர்வு தவிர்க்க முடியாத ஒண்டுதான், ஆனால் வெளியிலை இருக்கிற எங்கட பெடியள் தான் பாரம்பரியம் பண்பாடு சாதி சமயமெண்டு எதிர்பார்த்து இஞ்சையிருக்கிற பெட்டையளை எடுக்கினம்-நீங்களொரு டொக்டரெல்லே? யாழ்ப்பாணத்திலை உங்கடை தேவை நிறையக் கிடக்கு ஒரு டொக்டர்- அதுவும் ஆண்பிள்ளை இப்பிடி காசுக்காக கப்பலேறுவதை நினைக்கத் தான் துக்கமாகவும் வெட்கமாகவும் கிடக்கெல்லே சாத்வீ. ஒரு வருஷத்துக்குள்ளையே நிறைய உழைச்சிப் போடலாமே இஞ்சையிருந்தாலும்!"

அவன் அவமானத்தில் முகம் சிவந்து புறப்பட்டு வந்து ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டன. அவள் கூற்றுக்கள் எத்தனை உண்மையானவை. செல்வத்தின் செழுமையில் செல்லாக்காசாகக் கணிப்பிடப்படும் அவன்! தினம்தினமாய் கிளப், பாக், போய் பிறன்ட்ஸ் என்று அலையும் ஐரோப்பிய மனைவி– நிம்மதியற்ற வாழ்க்கை, நிரந்தர ஆயுள்தண்டனை விழி கலங்கி நின்றான் சாத்வீகன்.

அளவான பொருளாதாரம், அன்பான கணவன், இன்பமான இல்லறம் என்று வாழும் சஞ்சுவைப்பார்க்கையிலே.. தன் வெறுமை, மனதளவிலான வறுமை, தனிமை எல்லாமே பூதாகாரமாகத் தெரிந்தது அவனுக்கு.

# கல்கி



**எம். சுரேஷ்**

பெரிய வயிறை மறைக்க முடியாமல் கிட்டத்தட்ட ஒரு பிச்சைக்காரியைப்போல் முழித்தாள் கல்கி.

"ஏன்டி! அன்னிக்கு என்னமோ வசனமெல்லாம் பேசிட்டுப் போனியே...இப்ப என்னாச்சு......?"

தாய் கமலம் வாசற்படியால் நின்று வார்த்தைகளை நெருப்பாய் வீசினாள். கல்கி வாய் திறக்கவில்லை. கண்ணீர் மட்டும் சடுதியாக கன்னம் நோக்கி இறங்கியது.

"ஏன்டி அது, இதுன்னு துள்ளிக் குதிச்சது போதாதுன்னு ஊர், பேர் தெரியாத ஒருத்தனோட ஓடிப்போனியே... இப்போ என்னாச்சு?

சினிமாவுக்கு வேணும்னா இதெல்லாம் சரிப்பட்டு வரலாம். நடைமுறை வாழ்க்கையில் இந்த "புதுமைப் பெண்" டயலாக்கெல்லாம் சரிப்பட்டு வராதுடி.

ஏதோ பிச்சுப் புடுங்கின மாதிரி பேசவாளுக, செய்யிறதெல்லாம் செஞ்சி முடிச்சப்புறம் கொண்டு போனவன் கைகழுவி விடுவான். அதுக்கப்புறம் நேரா பெத்தவங்க கிட்ட வந்து, பாசமலர் வசனம் பேசி கண்ணீர் விடுவாளுக..... சேச்சே! ஒங்கள எல்லாம் பாவம்ன்னு சொல்லக் கூடாதுடி!"

கமலத்திற்கு இன்னும் ஆத்திரம் தீரவில்லை. அருகில் நின்ற கணவன் கந்தசாமியை எரிப்பதைப்போல் பார்த்தாள்.

பரமசாதுவான கந்தசாமிக்கு நிலமை புரிந்தது. தனது பங்கிற்கு ஏதாவது செய்ய வேண்டுமே....!

"கல்கீய்ய்....." கத்தியபடியே வந்து கல்கியின் கன்னத்தில் பளீரென்று ஒன்று வைத்தார்.

சாதாரணமாக ஏசினால்கூட கோபம் பொத்துக்கொண்டு வரும் கல்கிக்கு இன்று அழுகையைத் தவிர வேறொன்றும் வரவில்லை!!



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

தருவது ரசிகன்



# சுடும் நினைவு!

காற்று மூர்க்கமாக வீசியது.
சன்னல் திரைகளை தூக்கியது.
மோதிய காற்றில் மரம் அசைந்தது.
வீசிய காற்றில் கிளை முறிந்தது.

காற்றின் வேகம் கண்டவள்
தன் காதலனை நினைத்தாள்.

மூர்க்கம்தான் அவருக்கும்.
காற்று மோத மரம் அசையும்.
காதலன் மோத மனம் அசையும்.
காற்றின் தழுவல் மரத்திற்கு இனிதா?
காற்றின் படருதல் பூவுக்கு சுகமா?
காற்றின் மூர்க்கம் பூமிக்கு இதமா?
காதலன் மூர்க்கம் இனிய வேதனை.
காதலன் வேகம் இரகசியச் சுகமே!

நினைத்தபோது இதழில் புன்னகை.
அணைத்த நினைவுகள் மனதில் முத்திரை!

காற்று வந்து கூந்தல் கோதும்
காற்று தொட்டு துகிலை அசைக்கும்
காற்று எங்கும் தழுவி வருடும்
காற்றுக்கும்- காதலருக்கும்
ஒற்றுமை உண்டு! பொதுக்குணம் உண்டு!
காற்றுக்கும் வெட்கமில்லை-என்
காதலருக்கும் வெட்கமில்லை!

நினைத்தாலும் நெகிழ்ந்தாலும்
வெட்கம் பாதி, வெல்லச் சுகமோ மீதி!
காற்றுக்கும் இசை இருக்கிறது.
காதோடு தழுவிப் பொழியும்.
காதலருக்கும் ஆசை இருக்கிறது.
காதோடு புகழ்மொழி பேசிக் குழையும்!

கைகள் நீள விரல்கள்
எறும்பாய் உடலில் ஊரும்.
மூடிய கண்களை மெல்லத்திறக்க
குறும்பாடும் உதட்டில்
புகழ் மொழிகள் கொப்பளிக்கும்!

"பூவிரிந்தது போலிருந்தது
நீ விழி திறந்தபோது!
மொட்டவிழ்ந்தது போலிருந்தது
நீ புன்னகைத்தபோது!"

புகழ் மொழி
காதலுக்கு சூடப்படும் முத்தாரம்.
மனது இறக்கை விரித்து
எழுந்து பறக்கும்.
முகம் மட்டும் போலியாய்
பொய்க் கோபத்தில் முறைக்கும்!

"வண்டசைந்தது போலிருந்தது
உன் விழியசைந்தபோது
கரும் அலையெழுந்தது போலிருந்தது
உன் பூங்குழல் அசைந்தபோது!"

மனதுக்குள் கர்வம் பொங்கும்.
"புகழ்ச்சிக்கு ஒன்றும் குறைச்சலில்லை
இவ்வளவுதானா? இன்னுமுண்டா?"
விட்டேத்தியாய் உதடு கேட்டாலும்
புகழ்மொழி மேலும் கேட்கும்
ஆசை அதில் ஒளிந்திருக்கும்!

"காமன் வில் தொடுத்தது போலிருந்தது
உன் கண் அழைத்தபோது.
ஒரு கொடியில் இருகனி போலிருந்தது.
உன் கொடி இடை மேல் கண்பட்டபோது!"

உடனே கண் அகட்டி
இதழ் சுருக்கிச் சீறுவாள்.
"மோசம் மோசம் சுத்த மோசம்
நாசம் நாசம் நீர் வாய் திறந்தால்!"

காதலில் காதலியின் சீற்றத்துக்கு
எப்போதும் பொருள்
எதிர்ச் சொல்லில்தான் தேடவேண்டும்!

வேண்டாம் என்றால் வேண்டும்.
போதும் என்றால் போதாது.
சீச்சி என்றால் ஆஹாஹா.
சேச்சே என்றால் ஒஹோஹோ!

அவனுக்கா தெரியாது
காதலின் அகராதி?

"வழுக்குமரம் போலிருந்தது
உன்னை வாரியணைத்த போது;
பின்னிக்கால் அணைத்தபோது!
மதுக்குளம் போலிருந்தது
உன் விழிக்குளத்தில் விழுந்தபோது!"

"ம்ஹூம் எல்லாம் அறிந்தவராக்கும்
அனுபவம் அதிகமுண்டோ?"
பொய்யாய் சீறுவாள்.

"அறிந்ததும் உண்டு கண்ணே
அறியாததும் உண்டு கண்ணே!"

"அறிந்தது என்னவோ?"
"உன் பொன் இதழின் புன்னகை!"

"ஒஹோ, அறியாதது என்னவாம்?"
"உன் பூ இதழின் தேன் சுவை!"

"புரியாததும் உண்டாக்கும்?"
"உண்டு கண்மணியே
உண்டறியாத விஷயங்கள்!"

"புரிந்தது என்னவாம்?"
"உன் நெஞ்சில் எழும் காதல் ஓசை!"
"அடடே...புரியாதது என்னவோ?"
"உன் நெஞ்சில் ஆடும் கனிச்சுவை!"

வெற்றிலைச் சாறு தெளித்ததுபோல
முகம் சிவக்க முறைத்தாள்.

"எப்போதுமே இந்த எண்ணமா?"
"ஆம் மூச்சு முற்றாக அடங்கும் வரை!"
"வயதாகிவிட்டால் என்ன செய்வீர்கள்?"
"நெல்லிக்கனி தரத்தான் நீயிருக்கிறாயே!"

"நெல்லிக் கனியா?"
நெற்றிப் புருவம் உயர்த்தினாள்.

"அவ்வையார் அதியமானுக்கு
கொடுத்தது நெல்லிக்கனி!
என்றும் இளமை- குறைவற்ற ஆயுள்."
கண் சிமிட்டிச் சிரித்தான்.

"நான் என்ன அவ்வையாரா?
நீர் என்ன அதியமானா?"

"அவ்வையார் கொடுத்தது நெல்லிக்கனி
அடி காதலி
உன்னிடமிருப்பது காதல் கனி!
நீ தர நான் பெற
வயதானாலும் வாலிபச் செருக்கோடு
வாழும் காதலடி நம் காதல்!"

சிரித்தே விட்டாள்,
மனதில் இனித்தது அவன் சொற்கள்!

"உள்ளூறும் இனிமையடி காதல்
கள்ளூறும் கிறக்கமடி காதல்.
மடி மடி கிறக்கமடி
மடிமடி மயக்கமடி
மடிதா மடிதா தூக்கமடி
சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சந்தனக் கிளியே சாய்ந்தாடு!"

அருகிலிருந்த பூப்பந்து எடுத்து
அவன் நெஞ்சில் எறிந்தாள்.
ஏந்திக் கொண்டவன்
விழுந்து சிரித்தான்!

காற்று மீண்டும் மோதிச் சென்றது.
கலைந்தது நினைவுகள்- கண் திறந்தது

கனவா இதுவரை கண்டதெல்லாம்.
உள்ளம் நினைப்பில் உருகியது.
எரிந்து தேயும் மெழுகைப்போல்
நெஞ்சம் வெந்து தோய்ந்ததுவே!

ஒரு நாள்கூட மறந்தறியேன்
ஒரு நொடிகூட நினைப்பிழவேன்!
நினைத்துக் கொண்டே இருந்தாலும்
பிரிவுத் துன்பம் சுடுகிறதே!
நெஞ்சுக்குள் தீயாய் விரிகிறதே!

மறந்தேன் என்றால் என்னாவேன்
மாண்டே போவேன் தீ சுட்டு!
மடிந்தே போவேனோ தீ தின்று?!

கண் நிறைந்த காதலனை
நினைத்திருக்கும் போதும் பிரிவுத்துன்பம்
உள்ளத்தின் உள்ளே ஊடுருவிச் சுடுமாம்.
அய்யகோ இப்போதே இப்படியென்றால்
நினைக்க மறந்தால் என்னாகும்?
அதுதான் கேள்வி அதுதான்.
அதுவே அச்சம் அதுதான்!

இதே அச்சம்தான்
திருவள்ளுவர் காட்டும் காதலிக்கும்!

**"மறப்பின் எவனாவன் மற்கொல்**
**–மறப்பறியேன்**
**உள்ளினும் உள்ளம் சுடும்"**

அதிகாரம்: 121, குறள்: 1207.

ஸ்போர்ட்ஸ்

## டெண்டுல்கர் புதிய சாதனை

நடந்த மாதம் தென்னாபிரிக்காவில் இந்தியா, தென்னாபிரிக்கா, ஸிம்பாப்வே ஆகிய மூன்று நாடுகள் கலந்து கொண்ட ஒருநாள் போட்டிகளில் தென்னாபிரிக்க அணி கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது அறிந்ததே.

இந்தப் போட்டிகளின்போது இந்திய அணியின் கப்டன் சச்சின் டெண்டுல்கர் தனது வெற்றிப்பாதையில் மேலும் ஒரு மைல் கல்லைத் தாண்டியுள்ளார். தென்னாபிரிக்காவுக்கு எதிராக டேர்பனில் நடந்த லீக் போட்டியில் இவர் 5000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்துள்ளார். உலகிலேயே ஒருநாள் போட்டிகளில் 5000 ஓட்டங்களைத் தாண்டிய 14வது வீரர் இவர். இந்திய அளவில் இரண்டாவது இடத்தில் இருக்கிறார். முதலாவது இடத்தில் இருப்பவர் முன்னாள் கப்டன் முகமட் அசாருதீன். இவர் குவித்துள்ளது 6610 ஓட்டங்கள்.

தென்னாபிரிக்கா முத்தரப்புப் போட்டிகளின்போது ஒரே ஒரு சதம் அடிக்கப்பட்டது. அந்தச் சதத்தை அடித்தவரும் டெண்டுல்கர்தான்.



இதுவரை 141 ஒருநாள் போட்டிகளில் 138 இன்னிங்ஸ்களில் விளையாடியுள்ள டெண்டுல்கர் மொத்தம் 5055 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் 11 சதங்களும், 31 அரைச்சதங்களும் அடங்கும்.

ஒருநாள் போட்டிகளில் 6000 ஓட்டங்களுக்கு மேல் குவித்தவர்களின் விபரம் வருமாறு:

| வீரர் | நாடு | போட்டிகள் | ஓட்டங்கள் |
|---|---|---|---|
| 1. டெஸ்மன்ட் ஹெய்ன்ஸ் | மேற்கிந்தியத்தீவுகள் | 238 | 8649 |
| 2. ஜாவெட் மியாண்டாட் | பாகிஸ்தான் | 233 | 7381 |
| 3. விவியன் றிச்சட்ஸ் | மேற்கிந்தியத்தீவுகள் | 187 | 6721 |
| 4. முகமட் அசாருதீன் | இந்தியா | 239 | 6610 |
| 5. அலன் போடர் | அவுஸ்திரேலியா | 273 | 6524 |
| 6. சலீம் மாலிக் | பாகிஸ்தான் | 248 | 6340 |
| 7. றிச்சி றிச்சட்சன் | மேற்கிந்தியத்தீவுகள் | 224 | 6248 |
| 8. டீன் ஜோன்ஸ் | அவுஸ்திரேலியா | 164 | 6068 |

★ இவர்களில் அசாருதீனும், சலீம் மாலிக்கும் மட்டுமே தற்போது விளையாடி வருகின்றனர்.

## போட்டி ஒத்திவைப்பு

இந்தியா-பாகிஸ்தான் மூத்த வீரர்களுக்கு இடையே கடந்த மார்ச் 13ம் திகதி முதல் நடைபெறவிருந்த 5 ஒரு நாள் போட்டிகள் வரும் ஒக்டோபர் 17ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியை நடத்துவதற்கான அனுமதி இந்திய அரசாங்கத்தால் தாமதமாகக் கிடைத்ததால் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மாற்றியமைக்கப்பட்ட திட்டப்படி முதல் போட்டி ஒக்டோபர் 17ம் திகதி ஹைதராபாத்தில் நடைபெறும். மற்றைய போட்டிகள் ஒக்.20ம் திகதி கட்டாக்கிலும், ஒக்.22ம் திகதி அகமதாபாத்திலும், ஒக்.24ம் திகதி போபாலிலும் இடம்பெறும். கடைசிப்போட்டி ஒக்டோபர் 27ம் திகதி ஜெய்ப்பூரில் நடைபெறும்.

இப்போட்டியில் பாகிஸ்தான் அணியிலிருந்து அதன் முன்னாள் கப்டன் ஸாஹிர் அப்பாஸ் உட்பட 18 மூத்த வீரர்கள் பங்கேற்கவுள்ளார்கள்.

இவர் தான் அவர்



ரவீனா டாண்டன்

# சிந்தியா பதில்கள்

—●●●—

★ தற்போதைய சினிமாக்களின் தரம் எப்படியிருக்கிறது சிந்தியா?

செல்வி கே.பவானி, மட்டக்களப்பு.

ரொபின்சன் என்பவன் அமெரிக்காவைச் சேர்ந்தவன். வாழ்க்கையில் விரக்தி. தற்கொலை செய்யத் தீர்மானித்தான்.

தற்கொலை ஸ்ரைலின்படி ஒரு கடிதம் எழுதினான். "என் சாவுக்கு யாருமே பொறுப்பல்ல" என்று எழுதிக் கையொப்பம் போட்டு சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.

நேராக கிடு கிடுவென்று ரயில் தண்டவாளம் நோக்கிப்போனான். ரயில் வருவதற்கு நாலு மணிநேரம் தாமதமாகும் என்று தெரிந்துகொண்டான்.

சரி சாகத்தான் போகிறேன். ஒரு படம் பார்த்துவிட்டுச் சாகலாமே என்று தியேட்டருக்குப் போனான். இடைவேளையோடு வெளியே சென்றான். தியேட்டர் மனேஜரிடம் படத்தின் இயக்குநர் முகவரியைப் பெற்றுக் கொண்டு அங்கே சென்றான்.

இயக்குநர் வந்து கதவைத் திறந்தார்.

"ரொம்ப ரொம்ப நன்றி" என்றான்.

இயக்குநருக்கோ, குழப்பம்.

"எதற்கப்பா நன்றி?"

"என்னைத் தற்கொலை செய்யாமல் தடுத்ததுக்கு!"

"என்னப்பா சொல்கிறாய்?" என்றார் இயக்குநர்.

அவன் சொன்னான்:

"படம் எடுத்தே மக்களைக் கொல்லும் நீங்கள் எல்லாம் உயிருடன் இருக்கும்போது நான் ஏன் தற்கொலை செய்யவேண்டும்! என்று உறுதி பிறந்துவிட்டது. அதற்குத்தான் நன்றி சொல்ல வந்தேன்!"

—●●●—

★ வவுனியாவில் இரண்டு பெண்கள் சமீபத்தில் கொலையானதுக்கு யார் காரணம்?

ச.மகிந்தன், வவுனியா.

இப்போதெல்லாம் சில கொலைகள் தொடர்பாக விழுந்தடித்துக்கொண்டு கண்டன அறிக்கை விடுபவர்களைத்தான் முதலில் கவனிக்கவேண்டியிருக்கிறது. கொலைக்குக் காரணம் ஒரு தமிழ் இயக்கம் என்பதே பரவலான பேச்சு. இராணுவத்துக்கு தொடர்பில்லை என்பது உறுதி.

—●●●—

★ யாழ்ப்பாணத்திற்கு செல்வதற்கு அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் முன்வந்துள்ளதாக செய்திகள் வருகிறதே?

ஏ.சதீஸ்வரன், திருமலை.

செல்பவர்களைவிட அங்கிருந்து கப்பலில் திருமலை வருபவர்கள் தொகை அதிகமாக இருப்பதாகத் தெரிகிறதே!

—●●●—

★ ஏப்ரலில் வரும் என்று சொன்ன அரசியல் தீர்வுப் பொதி எங்கே?

எம். புஸ்பநாதன், பூண்டுலோயா.

முரசு அப்படி ஒரு செய்தியைக்கூட வெளியிட்டதில்லையே! நம்பிக்கையோடு செய்தியும், விமர்சனமும் எழுதியவர்களுக்கு அனுப்ப வேண்டிய கேள்வி இது.

—●●●—

★ டி.ஐ.ஜி. ஆரியசிங்கா தமிழ் டாக்டர் ஒருவருக்கு சீருடை கொடுத்தாராமே? அவரும் புலிகளுக்கு ஆதரவாளர்தானா?

வி.சூரியகுமார், கொழும்பு-15.

செய்தி பார்த்தேன். டி.ஐ.ஜி. ஆரியசிங்கா ஏன் கொடுத்தார் என்று விளக்கம் கொடுத்துள்ளார். இதில் உறுத்தலான விஷயம்- உடனடியாக பத்திரிகைகளுக்கு செய்தி கொடுக்கப்பட்ட 'அவசரம்'தான். தமிழ் நண்பர்களே அரச அதிகாரிகளுக்கு இருக்கக்கூடாது என்பதுபோல ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுமோ என்று நினைக்கச் செய்கிறது.

—●●●—

★ மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு உதட்டால் சிரிப்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?

செல்வி சரோஜா குணராசா, கொழும்பு-06.

வில்லியம் பிளேக் என்னும் அறிஞர் சொன்னது இது:

"வீரத்தில் குறைந்தவர்கள்
சூழ்ச்சியில் சிறந்தவர்களாக
விளங்குகிறார்கள்!"

—●●●—

★ டியர் சிந்தியா! எமது நாட்டில் கொழுந்து விட்டெரியும் போர்த்தீயை அணைக்கும் காலம் வராதா?

எஸ்.எம்.எஸ்.நுஸ்ரத், கிண்ணியா-01.

வெளியிலிருந்து தீயணைப்புப் படை வந்தால்தான் அணையும். அதுதான் வேண்டாம் என்கிறார்களே ஆட்சியாளர்கள்.



ரூபசிங்க ஜயசேகர

★ கடந்தகால வன்முறைச் சம்பவங்களை தற்போது சுவரொட்டிகளாக ஒட்டுவதன் நோக்கம் என்ன?

ஆர்.விஜயன், மாளிகாவத்தை.

அரசியல்தான்! ஆனாலும் அவசரத்தில் இசகு பிசகாக ஒரு காரியம் நடந்துவிட்டது. ஐ.தே.கட்சியின் அராஜகம் என்று காட்ட, ஜே.வி.பி.யால் கொல்லப்பட்ட ஐ.தே.க. உறுப்பினரின் (ரூபசிங்க ஜயசேகர) படத்தையும் சுவரொட்டியாக அடித்துவிட்டார்கள்!

—●●●—

★ நீதி தூங்குமா? நியாயம் கிடைக்காமல் போகுமா?

எம்.நேசன், பிரான்ஸ்.

நீதிபதி தூங்கினால், அல்லது தூங்குவது போல நடித்தால்தான் நீதி தூங்கியது போலத் தெரியும்.

தமிழ்நாட்டில் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்து கொண்டிருந்தது. வெள்ளைக்கார நீதிபதி முன்பாக பிரபல வழக்கறிஞர் ஒருவர் கொலை வழக்குப் பற்றி நீண்ட நேரம் உரையாற்றினார்.

அந்த நீதிபதிக்கு அடிக்கடி கண் அயரும் பழக்கம் உண்டு.

வழக்கறிஞர் தனது வாதங்களை அடுக்கடுக்காக அடுக்கிவிட்டு அமர்ந்தார்.

நீதிபதி வழக்கறிஞரிடம் கேட்டார்,

"சட்டத்தரணி அவர்களே? நீங்கள் ஏன் வரத முதலியாரின் சாட்சியத்தைப் பதிவு செய்யவில்லை?"

நீதிபதி கேட்டதுதான் தாமதம், அந்த வழக்கறிஞர் எழுந்து வழக்குப் பைலை எல்லாம் விசிறி அடித்துவிட்டு வெளியே போய்விட்டார்.

காரணம் என்ன தெரியுமா?

கொலை செய்யப்பட்டவரே வரத முதலியார்தான்!

—●●●—

★ கணவன்- மனைவி உறவு எப்படியிருக்க வேண்டும்?

செ.பெர்னாண்டோ, நீர்கொழும்பு.

காந்தியின் மனைவி கஸ்தூரிபாய் காலமானார். அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. அப்போது சோகமாக அமர்ந்திருந்தார் காந்தி.

"தாங்கள் இந்த இடுகாட்டில் இறுதி வரை இருக்க வேண்டுமா? போகலாமே!" என்றனர் தொண்டர்கள்.

உடனே காந்தி சொன்னார்:

"அறுபத்திரெண்டு ஆண்டுகள் அவளுடன் நான் வாழ்ந்தவன். அவளது உடல் எரிந்து முடிவதற்கு முன்னர் நான் சென்றுவிட்டால், என் உயிரின் உயிரான கஸ்தூரிபாய்.. என்னை ஒரு போதும் மன்னிக்கமாட்டாள்." என்றுகூறிக் கண் கலங்கினார்.

—●●●—

★ முகஸ்துதியை நம்பி மயங்கும் அரசியல்வாதிகள் பற்றி என்ன நினைக்கிறீர்?

பா.அஹமத், கிண்ணியா.

ஹிட்லர் ஜெர்மன் அதிபராக இருந்து உலகையே ஆட்டிப்படைத்த நேரம் அது.

ஹிட்லர் பற்றிய படம் ஒன்று தியேட்டரில் காண்பிக்கப்பட்டது. ஹிட்லரும் பார்க்கச் சென்றிருந்தார்.

படம் ஆரம்பித்து திரையில் ஹிட்லரைக் கண்டதும் பார்வையாளர்கள் அனைவரும் எழுந்து மரியாதையாக நின்றனர். படம் பார்க்க வந்திருந்த ஹிட்லர் மட்டும் அமர்ந்திருந்தார்.

இருட்டில் ஹிட்லரை அடையாளம் காணாத ஒருவர் ஹிட்லர் பக்கத்தில் சென்று சொன்னது இது:

"எனக்கும் உன்னைமாதிரி இருக்கத்தான் ஆசை. ஆனால் என்ன செய்வது? யாராவது கண்டால் அந்த ராட்சதனிடம் சென்று சொல்லிவிடுவார்களே!"

அரசியல் தலைவர்கள் தங்கள் பற்றிய மக்களின் உண்மையான அபிப்பிராயத்தை அறிய வேண்டுமானால் மாறுவேடத்தில் செல்ல வேண்டும். முகத்தில் ஈயாடாது!

—●●●—

★ எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும்?

எஸ்.நிரஞ்சன், கொழும்பு-06.

வாக்களிக்காமல் இருந்தாலும் இருக்கலாம், வாக்களித்து வாக்கை விரயமாக்கக் கூடாது. வெல்ல முடியாது என்று தெரிந்த குதிரைகளுக்கு புள்ளடி போடாதீர்கள்.

—●●●—

★ 'இருவர்' தோல்வியால் ஐஸ்வர்யா ஓரம் கட்டப்படுவாரா?

எல்.என்.நஸீம், கல்முனை.

அப்படியொன்றும் இல்லை. அழகு காட்டிக்கொண்டுதான் இருக்கிறார் முன்னாள் அழகி. அதுவும் தாராளமாய்....!



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 75

## "கண்டு வந்தேன் சீதையை"

இராமபிரானுக்கு மகிழ்வூட்டும் செய்தியை இலக்குவன் கூறத் தொடங்கினான்.

சாதாரண பறவையான காகம் குறிகூறும் ஆற்றலுள்ளது என்பது பண்டு தொட்டு இன்றுவரை எம்மிடையே உள்ள ஒரு நம்பிக்கை. எமது மூதாதையர் தாம் கண்ட அனுபவங்களை தமது சந்ததியினருக்குக் கூறுவார்கள். வாழையடி வாழையாக சில கர்ணபரம்பரைக் கதைகள் அழியாமல் இன்றும் நிலைபெற்றிருக்கின்றன. இவற்றை யெல்லாம் மூட நம்பிக்கை என்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

மருத்துவம், வானசாஸ்திரம், சோதிடம் போன்ற அரிய நெறிகள், இற்றைக்கு எத்தனையோ ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட எமது முன்னோர்கள் அனுபவ ரீதியாகக் கண்டு கடைப்பிடித்த உண்மைகளாகும். காலத்தின் கோலத்தால் பலகருத்துக்கள் அழிந்தும், கலந்தும், திரிந்தும் போய்விட்டன. இத்தகைய நெறிகள் யாவும் இலக்கண வரம்புகளுக்குட்பட்ட செய்யுள்களாகவே காணப்படுகின்றன.



மருத்துவத்துறையை எடுத்துக்கொண்டால், இந்தியா, சீனா போன்ற நாடுகளில் வாழ்ந்த முன்னோர்கள் பெரும் சாதனைகளைப் புரிந்துள்ளனர். அறுவைச் சிகிச்சைகள்கூட பண்டைக் காலத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளன. கீழைத்தேயங்களில் கிடைத்த மருத்துவக் கருத்துக்கள்தான் இன்றைய மேல்நாட்டு 'அலோப்பதி' சிகிச்சை முறைக்கான ஆதாரம். இக்கருத்தினை மேலை நாட்டவர்களே ஒப்புக்கொள்ளுகின்றனர்.

இதேபோல்தான் நிமித்தங்கள், சகுனங்கள் பற்றிய நம்பிக்கையுமாகும். காகம் கரைவது, பல்லி சப்தமிடுவது, பூனை குறுக்கறுப்பது போன்ற நிமித்தங்களும் பண்டு தொட்டு எம்மிடையே நிலவி வரும் சகுனம் பற்றிய நம்பிக்கைகளாகும்.

* * *

### நல்ல செய்தி

காகம் கரைந்த திசையையும் கதிரவனின் நிலையினையும் கணக்கிட்ட இலக்குவன் தென் திசையிலிருந்து நல்ல செய்தி வருவதாகக் கண்டு கொண்டான். இலக்குவனின் முகத்தில் அதுவரை இருந்த கலக்கம் மறைந்து பிரகாசம் கூடி வருவதை இராமபிரானும் சுக்கிரீவனும் அவதானித்தனர். இலக்குவன் உடனடியாக இராமபிரானின் தாள் தொட்டு வணங்கி, "அண்ணா! மகிழ்ச்சியான செய்தி தென்திசையிலிருந்து வருகிறது. பிராட்டியாரைத் தேடி தென் திசைநோக்கிச் சென்ற இளவரசர் அங்கதன், அமைச்சர் அனுமன், பெரியார் ஜாம்பவன் ஆகியோர் நல்ல செய்தியுடன் வந்து கொண்டிருக்கிறார்கள். காகம் கரைந்த முறைதனைக் கொண்டு கணக்கிட்டு நான் கூறும் செய்தி இது- பொய்யாகாது," என்றான்.

இராமபிரானின் முகம், இச்செய்தியைக் கேட்டதும் கோடி சூரியப் பிரகாசம் பெற்றது. தம்பி இலக்குவனைத் தூக்கி அணைத்துக் கொண்டார். துயருற்றபோதும் பெருக்கெடுத்த கண்ணீர்- இப்பொழுது மகிழ்வுறும் போதும் வந்து வடிகிறதே! ஆனால் இரு கண்ணீருக்கும் வேறுபாடு உண்டல்லவா?

சுக்கிரீவனுக்கும் இச்செய்தி பேரானந்தத்தைக் கொடுத்தது. மூவரும் ஒன்றாக அருகருகே நின்று தென்திசையையே பார்த்த வண்ணம் காத்து நின்றனர். தெற்கிலே சூரியோதயமோ என்று ஐயுறும் வண்ணம் அனுமனின் தோற்றம் இராமபிரானுக்கும் ஏனைய இருவருக்கும் தெரிந்தது. மிக வேகமாக வான்மீது தவழ்ந்து வந்த அனுமன், மெல்லத் தரையிறங்கி கிட்கிந்தைப் பிரதேசத்திலிருந்த- உயர்ந்து வளர்ந்திருந்த மரங்களின் கிளைகளில் தாவித்தாவிப் பாய்ந்தோடி வந்து இராமபிரானின் காலடியைச் சேர்ந்து தொழுதார். இராமபிரான் அனுமனைத் தூக்கி நிறுத்தி அணைத்துக்கொண்டார். "ஐயனே! சீதாப்பிராட்டியாரைக் கண்டு வந்தேன்!" என்று பலத்த தொனியில் கூறினார். இராமபிரான் வாயிலிருந்து எதுவித வார்த்தையும் வெளிவரவில்லை.

வானர மன்னனான சுக்கிரீவன் அனுமனின் ஒரு தோளைத் தொட்டதும், ஏதோ சுயநினைவு பெற்றவர்போல் சுக்கிரீவன் பக்கம் திரும்பி அவனுடைய தாள் தொட்டுக் கும்பிட்டார். சுக்கிரீவனும் அனுமனும் ஆலிங்கனம் செய்து கொண்டனர். "அனுமனே! நீர் எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் அக்காரியத்தில் வெற்றி காணாமல் திரும்ப மாட்டீர் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் தென்திசைக்கு நீரே செல்ல வேண்டும் என்று நானே தீர்மானித்தேன். இராமபிரான் உம் வருகைக்காகவும் நீர் கொண்டு வரும் தகவலுக்காகவும் காத்துக் கிடக்கிறார். முதலில் பிராட்டியாரின் நிலை பற்றிக் கூறு! அதன்பின் ஏனைய விடயங்களைப் பற்றி எடுத்துரைக்கலாம்!" என்று மன்னன் சுக்கிரீவன் அனுமனிடம் கூறினார்.

### அனுமன் கூறிய செய்தி

"எழில் சூழ்ந்த இலங்கை மாநகரின் அருகே அமைந்த அசோகவனத்தில் சீதாப்பிராட்டியார், இலங்கை வேந்தன் இராவணனால் சிறைவைக்கப்பட்டுள்ளார். அல்லும் பகலும் அனைவரதும், அண்ணலே! தங்கள் நினைவாகவே இருக்கிறார், அன்னை சீதை. அருவருப்பான தோற்றமுடைய அரக்கியர்

இராஜகுமாரன்

அன்னைக்குக் காவலாயுள்ளனர். அரக்கர் கோன் இராவணனே பிராட்டியாரிடம் காதல் பிச்சை கோரி வந்ததை நான் கண்டேன். தீயினும் கொடிய வார்த்தைகளால் அன்னையார் அவனைச் சுட்டெரித்ததையும் கண்ணுற்றேன். பிராட்டியார் அங்கிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவருக்கு நரக வேதனைதான்!

தாங்கள் என்னிடம் தந்தனுப்பிய மோதிரத்தைப் பிராட்டியாரிடம் கொடுத்தேன். தங்களையே நேரடியாகக் கண்டுவிட்டதைப் போன்ற உணர்வினைப் பெற்றார். தன்னைச் சிறைப்பிடித்த அரக்கர் தலைவனை அதம் செய்து அவனுடைய சேனை படைகளையும் துவம்சம் செய்து, ஒரு மாத காலத் துள் தன்னை வந்து மீட்டுச் செல்லும்படி தங்களிடம் கூறும்படி சொன்னார். இதோ தாங்கள் அவருடைய தலையில் முன்பு சூடிய சூளாமணி. இதனையும் தங்களிடம் சேர்க்கும்படி கூறினார்," என்று அந்த அணியை இராமபிரானிடம் ஆஞ்சநேயர் கொடுத்தார்.

### சூளாமணி கண்ட இராமபிரான்

சூளாமணியைக் கண்டதும் இராமபிரான் சிறிது நேரம் எதுவித உணர்வுமற்றவர்போல் காணப்பட்டார். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பிரவாகமாகச் சொரிந்தது.

இந்தக் காட்சியை கவிச்சக்கரவர்த்தி மிக அழகாக வர்ணிக்கிறார்.

**பொடித்தன உரோமம் போந்து**
**பொழிந்தன கண்ணீர் பொங்கித்**
**துடித்தன மார்பும் தோளும்**
**தோன்றின வியர்வின் துள்ளி**
**மடித்தது மணிவாய் ஆவி**
**வருவது போவது ஆகித்**
**தடித்தது மேனி என்னே**
**யார் உளர் தன்மை தேர்வார்!**

(சுந்தர காண்டம்-1294)

பொருள்:

அனுமன் சீதாப்பிராட்டியாரிடமிருந்து கொண்டு வந்த சூளாமணியை இராமபிரான் பெற்றுக்கொண்டதும் அவருடையமேனியில் படர்ந்திருந்த உரோமங்கள் சிலிர்த்தன; கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது; அவருடைய மார்பும் தோள்களும் துடித்துப் பருத்தன; உடலெங்கும் வியர்வை பெருகிற்று; வாய் துடித்தது; ஆவி உடலை விட்டுப் பிரிந்து போய் மீண்டும் திரும்புவது போலிருந்தது. மேனி எங்கும் துடித்தது. இத்தகைய விந்தையை அறிவது எவரால் முடியும்!

***

இலங்காபுரியில் இராவணன் மகன் அட்சகுமாரன் முதல் ஐந்து சேனைத் தளபதிகளையும் பல்லாயிரக்கணக்கான படை வீரர்களையும் கொனறதும், எண்ணற்ற படைக்கலங்களையும் அழித்ததும், இந்திரஜித் ஏவிய பிரம்மாஸ்திரத்தினால் கட்டுண்டதும், இராவணன் தன்னைக் கொன்று விடும்படி கட்டளையிட்டதும்; அவன் தம்பி விபீடனரால் காப்பாற்றப்பட்டதும்; தனது வாலில் தீமூட்டப்பட்டதும்; இலங்கை நகரைத் தகனம் செய்ததும்; இராவணனைக் கண்டு சவால் விட்டதும் போன்ற சகல சம்பவங்களையும் இராமபிரானுக்கும் ஏனையோருக்கும் எடுத்துச் சொன்னார் ஆஞ்சநேயர்.

இவையெல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த இராமபிரான், "அனுமனே! உமது வீரபராக்கிரமங்களை நான் மனதார மெச்சுகிறேன். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, 'சீதையை நீர் கண்ணாரக் கண்டு வந்தீர்!' அதனால் இத்தனை நாள் பிரிந்திருந்த ஜானகியை நானே கண்டுவிட்ட உணர்வினைப் பெற்றுவிட்டேன். அதனால் என் உள்ளம் ஆறுதலடைகிறது. நீர் என்றும் என் உள்ளத்தில் நிலைபெற்றுவிட்டீர்! நீடூழி வாழ்வாய்!" என்று கூறிவிட்டு வானர மன்னன் சுக்கிரீவனைப் பார்த்து, "நண்பரே! சீதை இருக்குமிடத்தைக் கண்டுவிட்டோம். இனி எதற்காகத் தாமதம் செய்ய வேண்டும்? உமது படைகளை இன்றே புறப்படக் கட்டளை இடலாமே?" என்றார்.

சுக்கிரீவன் உடனடியாக முரசு, பறை முதலிய கருவிகள் மூலம் செய்தி பரப்பும் வள்ளுவர்களை அழைத்து, கிட்கிந்தை நகர் மற்றும் சுக்கிரீவனின் ஆளுகைக்குட்பட்ட கானகம் முதலான இடங்களுக்கும் சென்று, அங்குள்ள வானர வீரர்கள் அனைவரையும் ஒன்று திரண்டு வந்து சேருவதற்கு அழைப்பு விடுக்குமாறு கட்டளையிட்டார்.

முரசறைவோர் மூலம் தகவலறிந்ததும் நாலா புறத்திலுமிருந்து வானரவீரர்கள் புறப்பட்டுப் பாய்ந்தோடி வந்தனர். சில நாளிகைகளுக்குள்ளாக வானரப்படை கண்ணுக்கெட்டிய தூரம் அணிவகுத்து நின்றது, வானரவேந்தன் சுக்கிரீவன் அனைவருக்கும் போருக்குரிய கட்டளைகளைப் பிறப்பித்தான். பகுதி பகுதியாக வானர சேனைகள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் தானைத் தலைவர்களையும், சேனாதிபதிகளையும் நியமித்தான். ஆனால் அதுவரை இளவரசர் அங்கதன், ஜாம்பவன் முதலானோர் அங்கு வந்து சேரவில்லை. அக்கவலை சுக்கிரீவனிடத்தில் ஏற்பட்ட அதே வேளையில்- சுக்கிரீவனின் மாமனும் அரண்மனைக்குச் சொந்தமான பெரும் சோலைக்குக் காவலனுமாக இருக்குப் போனுமான ததிமுகம் பதறியடித்துக் கொண்டு ஓடோடிவந்து சுக்கிரீவனின் காலடியில் வீழ்ந்தான். ததிமுகனின் கோலம் கண்டு அனைவரும் திகைப்படைந்தனர்.

(சுந்தரகாண்டம் முடிவுற்றது.)

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 73

**சரியானவிடை:- அக்கினிதேவன்.**

1. செல்வி அருள்தாஸ் கிளேரா, 95/15, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13.
2. ப. வாகீசன், 33 மகேஸ்வரி ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06.
3. எம். ரிஸ்வி, இல-18, நடுகாரகந்த, பிங்கராவ, பதுளை.
4. செல்வன் பி. ஆரணன், 233, மத்திய வீதி, திருகோணமலை.
5. செல்வி ஐ. புவனேஸ்வரி, இலங்கை மின்சார சபை இல்லம், நோட்டன் பிரிட்ஜ்.

**போட்டி இல. 75 கேள்வி:-** செய்தி பரப்பும் இரு சாதனங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றின் பெயர்களைத் தருக.

மார்ச் 29 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி– இல.75, தினமுரசு வாரமலர், த.பெ.இல– 1772, கொழும்பு.

# நீங்களும் சாமியாராகலாம் பயிற்சி வகுப்புக்கள்

## கற்றுத்தருகிறார் காதிலை பூ கந்தசாமி

வேலை இல்லாத் திண்டாட்டத்தை விரட்டி விளாசித் தள்ளவும், அடுத்தவன் முதுகில் சவாரி செய்யவும் ஆசையோ ஆசையா?

மகத்தான சுய தொழில் இருக்க
தயக்கம் ஏன்? தாமதம் ஏன்?
உலகெங்கும் இலட்சோப இலட்சம்
ஏமாறும் சோனாகிரிகள் இருக்கிறார்கள்
என்பதை சற்றும் மறக்கவேண்டாம்!
எனவே-தொழில் செழிக்கும்
என்ற நம்பிக்கையோடு
இன்றே சாமியாராகலாம்!
என்ன தயாராகி விட்டீர்களா?
ஒகே. ஒகே. ஒகே.



### சாமியாராகத் தேவையான அடிப்படைத் தகுதிகள்

- ★ சிகப்பு அல்லது மஞ்சள் நிறத்திலான துணியில் ஆடை ஒன்று.
- ★ தலைமுடியை நன்றாக அடர்த்தியாக வளர்த்து, பொப் ஸ்ரைலில் பொம்பி இருக்கக் கூடியவகையில் தைலம் தடவி தூக்கி நிறுத்த வேண்டும்.
- ★ தலைமுடி இல்லாதவர்கள் அதாவது உதிர்ந்தவர்கள் சுத்தமாக மொட்டையடித்து சூரிய ஒளி அல்லது பல்ப் வெளிச்சம் பட்டுத்தெறிக்கக் கூடியதாக மொழு மொழுவென்று வைத்திருக்கலாம். தினமும் இரண்டு தடவை சிஷ்யர்களைக் கொண்டு சவரம் செய்யவும். பெண் சிஷ்யைகள் என்றால் ரொம்ப நலம்.

### சாமியாராகும் தகுதி உள்ளவர்களின் தனித் தன்மைகள் யாது?

- ★ சொந்த ஊருக்குள் சல்லிக் காசுக்கும் மதிப்பிருக்கக்கூடாது.
- ★ வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும். உங்கள் சிறு வயதில் மண் விளையாட்டின் போது திருட்டு மாங்காயை மண்ணுக்குள் மறைத்து வைத்ததுபோன்ற ஏதாவது அனுபவம் இருக்கிறதா? அப்படியானால் மிக்க நன்று. சின்ன வயசிலேயே சித்து விளையாட்டில் அசத்தத் தொடங்கிவிட்டீர்கள் என்று அர்த்தம். ஐந்தில் சுருட்டப் பழகியிருந்தால் ஆயுள்வரை சுருட்டலாம். நிச்சயமாய் சாமியார் தொழிலில் நீங்கள் எங்கேயோ போய்விடலாம்.
- ★ ஊருக்குள் பெண்பிள்ளைகளோடு சில்மிஷங்கள் செய்து செருப்படி மற்றும் விளக்குமாற்று பூசை, தர்ம அடி போன்றவற்றை வாங்கிய அனுபவம் இருப்பின் அவைதான் விழுப்புண்கள். விசேஷ தகுதிகள்.
- ★ பள்ளிக்கூடத்தில் படிப்பைத் தவிர ஏனைய சோமாரித்தனம், சோம்பேறித்தனம், வாத்தியார்களுக்கே அல்வா கொடுத்து ஏமாற்றிய கெட்டித்தனத்தில் சூரராக இருந்திருக்க வேண்டும்.
- ★ ஊருக்குள் உங்களைக் கண்டால் அடுத்தவர் காறி உமிழ வேண்டும். ஓட ஓட விரட்டியடிக்க வேண்டும். விழும் ஒவ்வொரு அடியும் சாமியார் தொழிலின் வளர்ச்சிப் படிகள் என்பதை மறக்கவேண்டாம்.
- ★ தர்ம அடி வாங்கோ வாங்கென்று வாங்கி இனியும் முடியாது என்ற கட்டத்தில் ஊரைவிட்டே ஓடிவிடுங்கள்.
- ★ சொந்த ஊரில் ஒருபோதும் தொழில் தொடங்கவேண்டாம். ஏனெனில் நீங்கள் அங்கு பூஜை செய்ய முடியாது. உங்களுக்குத்தான் பூஜை நடக்கும் என்பது நினைவில் இருக்கட்டும்.

### ஓடுவதற்கு உறுதி வேண்டும்

- ★ உங்கள் குடும்பம் பெரியதா? ஏதோ இளமை வேகத்தில் ஆடிய ஆட்டத்தில் டசின் கணக்காக பிள்ளைகள் பிறந்துவிட்டனவா? மோகம் குறைந்து வேகமும் குறைந்துவிட்டதா? சம்பாதிக்க வக்கில்லையா? குடும்பத்தில் பிடிப்பில்லையா? சுருக்கமாகச் சொன்னால் பொறுப்புக்களால் சோர்வா? கவலையே வேண்டாம்.

துறவுதான் உயர்ந்தது. வாழ்க்கை நிரந்தரமில்லாதது. வாழ்வே மாயம், ஆசையே மோசமானது போன்ற வார்த்தைகளின் உதவியோடு குடும்பத்தை உதறிவிடுங்கள்.

ஓடுங்கள், ஓடுங்கள், ஓடுங்கள் துறவி என்று சொல்லிக் கொண்டே ஓடுங்கள். காவியைக் கட்டிக் கொண்டு ஓடுங்கள்.

முற்றும் துறந்த சாமியார் என்று முத்திரை குத்திக் கொள்ளுங்கள்!

மனைவியை- பிள்ளைகளை சுமையாக நினைத்து துறந்துவிட்டு சாமியாராகாமல் சாதாரண மனிதனாகவே இருந்தால் என்னாகும் என்று ஒரு ஐந்து நிமிஷம் செலவு செய்து யோசித்துப்பாருங்கள்.

ஓடுகாலி, பொறுப்பற்ற பயல்,

சோமாரி, கஸ்மாலம், மற்றும் கெட்ட வார்த்தைகளால் குத்தப்படுவீர்கள்.

மேற்கண்ட வார்த்தைகளால் குத்தப்பட நீங்கள் முற்றும் பொருத்தமானவர்தான். ஆனாலும் ஒரு காவி கட்டி, சடாமுடி அல்லது தூய மொட்டை, கழுத்தில் ஒரு உருத்திராட்சக் கொட்டை, நெற்றியில் விபூதிப்பட்டை சகிதம் சாமியாராகி விட்டீர்களானால் சாமி-ஞானி யோகி என்றெல்லாம் பூசிக்கப்படுவீர்கள்.

காலில் விழ ஒரு கூட்டமே ரெடிப் பொஸிஸனில் நிற்கும்.

கட்டழகு மங்கையர் முதல் கட்டுத்தளர்ந்த மாதர்வரை உங்கள் கண்கள் ஞானக் கண்கள் என உங்கள் கடைக்கண் பார்வைக்காக காத்துக்கிடப்பர்.

ஆட்சிபீடத்திலுள்ள தலைவர்முதல், ஊரை மேய்க்கும் ஊழல் அதிகாரிகள் வரை தங்கள் பாவத்தைக் கழுவ உங்கள் பாதங்களில் பொத்துப் பொத்தென்று விழுவார்கள்.

### சூப்பர் டெக்னிக்குகள்

பக்தர்கள் உங்களால் பயன் பெறாவிட்டாலும் பக்தர்களால் நீங்கள் பயன்பெற சூப்பர் டெக்னிக்குகள்.

- ★ அழகான பெண் சிஷ்யைகளை அருகில் வைத்திருக்கவும். சபலப் பக்தர்களான பெரும் புள்ளிகளை (வி.ஐ.பி.களை) கவனிக்க சாமியாரிணிகளை உபயோகப்படுத்தலாம். அதனால் நன்கொடைகள் கொட்டும். வி.ஐ.பி.க்கள் வருகை அதிகமாகும்.
- ★ கையடக்கமான பொருட்களை குறைந்த விலைக்கு வாங்கி தலைமுடிக்குள் இருந்தோ, ஆடைக்குள் எங்காவது பதுக்கி வைத்திருந்தோ பக்தர்களுக்கு அவ்வப்போது இன்ப அதிர்ச்சி கொடுக்கவேண்டும். பொப் ஸ்ரைலில் சடாமுடி வளர்ப்பது இந்த டெக்னிக்கில் தேர்ச்சி பெற கைகொடுக்கும்.
- ★ பிள்ளை வரம் கொடுத்தல், இராப்பூஜை நடத்தல், நிஷ்டையில் இருத்திவைத்து தலையைத் தடவி ஆசிர்வதித்தல் போன்றவை சாமியார் தொழிலில் உற்சாகத்தை ஊட்டக் கூடியவையாகும். எனினும் நோட்டம் அறிந்து வித்தை காட்டவேண்டும். இல்லாவிட்டால் கம்பி எண்ண வேண்டியிருக்கும்.
- ★ வெளிநாடுகளிலும் நட்டு லூசான பலர் இருக்கிறார்கள். வெளிநாடுகளில் பிரசாரம் செய்து அவர்களை மடக்கவேண்டும். வெள்ளைத் தோல்களே உங்களிடம் மயங்கிவிட்டால் உள்நாட்டு கறுப்புத் தோல்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிடும். வெள்ளைக்காரன் என்ன செய்தாலும் நாகரிகம் என்பதுதான் உள்நாட்டு மக்களின் முட்டாள் நம்பிக்கை என்பதை நினைவில் அறைந்து வைத்திருக்கவும்.
- ★ வெளிநாட்டுப் பணமும், உள்நாட்டுப் பணமும் எக்கச்சக்கமாக குவிந்துவிட்டால் வருமானவரித் தொல்லைகள் வரலாம். தொல்லைகளில் இருந்து தப்ப பள்ளிக் கூடங்கள் கட்டிவிடுங்கள். அங்கே வி.ஐ.பி.க்களின் பிள்ளைகளுக்கு 'சீட்' கொடுத்து டொனேஷன் கறக்கலாம். வெளியே தர்மவான் என்றும் போஸ் கொடுக்கலாம்.
- ★ நாட்டின் உயர் தலைவர் ஒருவரை உங்கள் காலில் விழவைத்து கமராக்காரரை ரெடியாக வைத்திருந்து ஒரு ஷெட் எடுத்துவிடுங்கள். அதை நூறு பிரதி எடுத்து உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு கொடுத்துவிடுங்கள். உங்கள் தரம் உயரும். தகுதி மெச்சப்படும். நீங்கள் கொலையே செய்தாலும் சட்டம் எட்டியும் பார்க்காது. ஜமாய்க்கலாம்.
- ★ உங்கள் பக்தர்களில் பத்திரிகையாளர்களும் இருப்பர். அவர்கள் மூலமாக உங்கள் பெயரில் பொன்மொழிகள், அருள் மொழிகள், போதனைகள் என்று பிரசுரிக்கச் செய்யலாம். உங்கள் படங்களையும் அடிக்கடி போடச் செய்யலாம்.

ஏதோ எம்மாலான யோசனைகளை செப்பியுள்ளோம். சாமியாராகிவிட்டால் உங்களுக்கே புதுப் புது டெக்னிக்குகள் தோன்றும்.

அனுபவம் தானே வரவேண்டும். அது தான் அசத்தல்!

மேலும் விபரங்களுக்கு,
காதிலை பூ கலைக்கல்லூரி,
ஏமாந்தபுரம்,



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/45/NEWS/97)
www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS

580230
பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06


# பலம் பெரும் - பழம் பெரும்....



➡ பதவியில் இருக்கும் எவருக்கும் அந்த நாற்காலியை விட்டு எழ மனம் வரவே வராது. நாற்காலியைப் பாதுகாக்க எத்தனை ஜில்மால் கோல்மால் வித்தைகளும் செய்யத் தயாராக இருப்பார்கள். ஆனாலும் உலகில் நீண்டகாலம் பதவியிலிருந்தார் என்ற பெருமையை நம் நாட்டில் யாரும் தட்டிக் கொள்ள முடியவில்லை என்பதுதான் கவலையான சமாச்சாரம்.

தன்சானியாவில் மேற்கு மாநிலமான ஷோவில் முதல் மந்திரியாக இருந்தவர் 'முகோமா கனிகோ.' அவர் பதவியிலிருந்தது மொத்தம் 99 வருடங்கள். 1864ல் தான் முதன்முதலாகப் பதவியேற்றார். அப்போது வயது 8 மட்டும் தான். அதன்பின்னர் 1963ல் அவர் மரணமாகும் வரை பதவியைவிட்டு அசையவேயில்லை. மரணமானபோது வயது 107. நம் அரசியல்வாதிகள் அறிந்தால் பெருமூச்சு விடுவார்கள்.

மற்றொரு செய்தி. உலகிலேயே குறைந்த நேரம் பதவியிலிருந்த நாட்டுத் தலைவர் யார் தெரியுமா? போர்த்துக்கல் நாட்டு முடிக்குரிய இளவரசர் லூயிஸ் ஃபிலிப்பிதான் அவர். 1908ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01ம் திகதி அவரது தந்தை சுட்டுக் கொல்லபட்டபோது ஃபிலிப்பி முடி சூடிக்கொண்டார். பின்னர் அவரும் சுடப்பட்டார். ஃபிலிப்பி பதவியிலிருந்தது ஆக 20 நிமிடங்கள் மட்டும்தான். மேற்கண்ட இரண்டுமே இன்று வரை உலக சாதனை.


ஜுவல்ஸ்
ஸ்ரீ கல்யாணி

SRI KALYANY JEWELLS
323657
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


# சின்னம்மா



➡ 26- ஏப்ரல், 1963ல் பிறந்த அம்மணிதான் மட்கே பெஸ்ற்ரெர். இப்போது 34 வயது. பல ஆண்டுகளாக அசைக்க ஆளே இல்லாத சாதனை மன்னியாக (மன்னனுக்குப் பெண்பால்) திகழ்கிறார். அதாகப்பட்டது உலகில் மிகமிக சின்ன மேடம் அல்லது சின்னம்மா இவர்தான். என்ன புரியவில்லையா? சின்னம்மாவின் உயரம் ஆக 65 சென்ரிமீட்டர் மட்டும்தான்.

25.5 அங்குலம். (அடியும் ஒன்றரை அங்குலமும்) எப்படித்தான் வாழ்க வளர்க என்று வாழ்த்தினாலும் இதற்கு மேல் வளரவே மாட்டார். அவரது அருகில் உயரமாக நிற்பது 2வயதுச் சிறுமி.

தென்னாபிரிக்காவின் தலைநகரான ஜோஹானஸ் பேர்க்கில்தான் வசிக்கிறார். உயரம் குள்ளமானாலும் உள்ளத்தில் மகிழ்ச்சியோடு இருக்கிறார். திருமணம்மட்டும் ஆகவில்லை. அதனால் என்ன? டேக் இட் ஈஸி பொலிசி.

தருவது லியோட



# எமக்காளன்

⬆ காளான்கள்- ஒரு வகை பங்கசக்கள்.

இவைகளுள் 70ற்கும் 80க்கும் இடைப்பட்ட வகைக் களான்கள் நஞ்சுக் காளான்களாகும். மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியது. மிக மிக ஆபத்தானதும் நச்சுத்தன்மை கூடியதுமான காளான் 'டெதகெப்' (மரணத் தொப்பி) என்றழைக்கப்படுகிறது. இதன் விஞ்ஞானப் பெயர்: 'அமானிற்றா பாலொய்ட்ஸ்'.

இதனை உட்கொண்டால் 6 இலிருந்து 12 மணித்தியாலத்தின் பின்னர்தான் அறிகுறி தென்படுமாம். அதுவும் பயங்கரமாகத் துடிதுடித்துப் போவார்கள். இறுதியில் கோமா (நீடித்த மயக்கம்) நிலையில்விடும். பாதிக்கப்பட்டோரில் 50 சதவிதமானோர் நிச்சயம் இறந்துவிடுகின்றனர்.

இந்த மரணக்காளான் இங்கிலாந்தில் உள்ளது. படத்திலுள்ளது அதுதான். உலகிலேயே மிக மோசமான மரணக் காளான் என்று கின்னஸ் சாதனை படைத்துள்ளது. உணவாக உண்ணக்கூடிய நல்ல இனக்காளான்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. கிராமப்புறங்களில் மண்புற்றுக்களில் விதைக்கப்படும் காளான்கள் உணவாக்கப்படுகின்றன. புரதச் சத்து அதிகமான உணவு காளான். எதற்கும் காளான்களை ரகம் அறியாமல் லபக்கென்று விழுங்காதீர்கள்.

# பரிசு



முரசின் பட்டுச்சேலைப் பரிசுத் திட்டத்தில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர். திருமதி சி.பத்மநாதன் [illegible], கொழும்பு-06. முரசின் பரிசான பட்டுச்சேலை அணிந்து மகிழ்ச்சிப் புன்னகையுடன் காட்சி தருகிறார். வாழ்த்துக்கள்.



➡ அன்ட்ரு ஹட்சன்: தென்னாபிரிக்க அணியின் துவக்க ஆட்டக்காரர்.

91-92ல் மேற்கிந்தியாவுடன் நடைபெற்ற டெஸ்ட் போட்டிதான் ஹட்சனின் முதல் டெஸ்ட் போட்டி. முதலாவது இன்னிங்ஸிலேயே 163 ரன்கள் குவித்தார் ஹட்சன்.

ஆனால் ஒரு துரதிஷ்டம் இரண்டாவது இன்னிங்ஸில் ரன் எதுவும் எடுக்காமலேயே அவுட்டாகிவிட்டார்.

அதன் பின்னரும் பல போட்டிகளில் நன்றாக ஆடிய ஹட்சனுக்கு இடையில் சில காலம் ஒரு சரிவு. தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியும் சர்வதேசப் போட்டிகளில் விளையாட முடியாமல் ஓரம் கட்டப்பட்டதும் ஹட்சனுக்கு பலத்த அடி. மீண்டும் ஹட்சன் தனது ஆட்டத்திறமையை நிரூபித்தது இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில்தான்

தென்னாபிரிக்காவுக்கு கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சுற்றுப் பயணம் செய்தது இந்திய அணி. அனைத்து டெஸ்ட் போட்டிகளிலும் தென்னாபிரிக்காதான் வெற்றிபெற்றது.

ஆனாலும் பிரசாத், ஸ்ரீநாத் ஆகியோரின் பந்துவீச்சு அருமையாக இருந்தது. சற்று கவனம் தப்பினாலும் நாங்கள் தொலைந்திருப்போம் என்று தெ.ஆபிரிக்க அணிக்கப்டன் குரோஞ்ச் தெரிவித்திருந்தார்.

டேர்பனில் நடந்த டெஸ்ட் போட்டியில் ஹட்சன் அருமையாக ஆடியிருந்தார். அவரை வெளியேற்ற இந்தியப் பந்து வீச்சாளர்கள் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது.

முதல் இன்னிங்ஸில் 12 பவுண்டரிகள் உட்பட 80 ரன்கள் விளாசினார். இரண்டாம் இன்னிங்ஸில் 52 ரன்கள். ஹட்சனும் மாக்மிலனும் இணைந்து 200 ரன்கள் உயரக் காரணமானார்கள். டேர்பன் டெஸ்டில் 'மேன் ஒஃப் த மேட்ச்' ஆகத் தெரிவு செய்யப்பட்டார் ஹட்சன். இந்தியாவுடனான மூன்று டெஸ்ட்டுக்களில் ஆறு இன்னிங்ஸ் விளையாடி 224 ரன்களை மொத்தமாகத் திரட்டினார் ஹட்சன்.

போட்டிகள் முடிந்ததும் அணிக்கப்டன் குரோஞ்ச் ஹட்சனை பாராட்டினார். ஹட்சன் மீண்டும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். "அளவு குறைந்த பந்துவீச்சுக்களை கையாள்வதிலும், அவற்றில் இருந்து தப்பிக்கொள்வதிலும் கெட்டிக்காரர் ஹட்சன்" என்றார் குரோஞ்ச்.

தற்போது தென்னாபிரிக்காவில் அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் போட்டிகளில் முதல் டெஸ்ட்டில் மட்டும் விளையாடினார் ஹட்சன். சுகவீனம் காரணமாக தொடர்ந்து விளையாட முடியாமல்போனதால் வருத்தத்துடன் இருக்கிறார். தொடர்ந்து ஒளிவீசப்போகும் தென் ஆபிரிக்க நட்சத்திரம் ஹட்சன்.

# ஆபிரிக்க நட்சத்திரம்

வாரமலர் தினமுரசு



இப்பத்திரிகை கொழும்பு [illegible] 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் [illegible] உள்ள [illegible] அச்சகத்தில் மார்ச் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.
படிப்பகம்